# சக்தி




…ணப் பெருக்கம் போக வழி .... ரா. வேங்கடராஜுலு
இந்தி எதிர்ப்பா? வகுப்பு வாதமா? .... சாமி. சிதம்பரனார்
…வீன கடனாளி .... ஜே. சி. குமரப்பா
…ற்பூரம் .... மு. அருணாசலம்
…லர்ந்த பழங்கள் ... சேத் கோவிந்ததாஸ்



சர்வதாரி அணா 8 புரட்டாசி

சக்தி …ரியாலயம்
…னை 14.

# பொருள் அடக்கம்

மலர் 15 : இதழ் 6

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை
88886

| | | | |
|---|---|---|---|
| ஹைதராபாத் பணிந்தது | ... | தலையங்கம் | 1 |
| காலச் சுழல் | ... | குறிப்புகள் | 3 |
| மனித குணம் | ... | மகாத்மா காந்தி | 6 |
| ஜனாப் ஜின்னா | ... | ... | 7 |
| சுதந்திரம் | ... | திருச்சிற்றம்பலக்கவிராயர் | 8 |
| நவீன கடனாளி | ... | ஜே. சி. குமரப்பா | 10 |
| குட்டிக் கதைகள் | ... | சீனத்து அறிஞர்கள் | 12 |
| இந்தி எதிர்ப்பா? வகுப்புவாதமா? | ... | சாமி. சிதம்பரனார் | 17 |
| தாலாட்டுப் பாடல்கள் | ... | சு. ரா. ஆதிமூலம் | 25 |
| ஐன்ஸ்டைனின் உறவு தத்துவம் | ... | நா. கி. நாகராஜன் | 27 |
| கற்பூரம் | ... | மு. அருணாசலம் | 33 |
| இந்தியாவும் சீனாவும் | ... | பி. ஸி. பாக்சி | 35 |
| களவுக் கலை | ... | யு. வெங்கிடகிருஷ்ண ராவ் | 41 |
| பாரதி தர்சனம் | ... | கு. அழகிரிசாமி | 44 |
| காந்திஜியும் லெனினும் | ... | கிளேர் ஷெரிடன் | 45 |
| இளங் காதலனுக்கு ஒருவார்த்தை | ... | ஜி. பி. | 46 |
| படங்கள் | ... | ... | ... |
| கலாசாரப் பிதிரார்ஜிதம் | ... | 'கலைஞன்' | 49 |
| இந்தியப் போக்கு வரத்து | ... | சி. என். வக்கீல் | 54 |
| உலர்ந்த பழங்கள் | ... | சேத் கோவிந்ததாஸ் | 58 |
| விஷப் புகை | ... | எஸ். என். மோஸஸ் | 68 |
| ருஷ்யாவில் காய்கறி உற்பத்தி | ... | 'உழவன்' | 71 |
| பணப் பெருக்கம் போக வழி | ... | ரா. வேங்கடராஜுலு | 73 |
| அரிஸ்டாட்டிலின் பின் | ... | வி. சக்கரை செட்டியார் | 84 |
| புத்தக உலகம் | ... | க. பம்பாபதி | 87 |

அட்டைப் படம்: ஏ. எம். ஹுசேன், சென்னை

*

சர்வதாரி புரட்டாசி


டி. வி. குமுதினியின்
நுண்மையான அழகு படுத்திக்
கொள்ளும் முறை
க்ஸ் டாய்லட் சோப்
LUX
LUX
TOILET SOAP
LTS. 192-111 TM
சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப்

நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி

## லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

| | | |
|---|---|---|
| 5,00,000 நூற்கும் கதிர்கள் | ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல். | நம்பர் 80 வரை நூல்கள் |

o

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

o

## ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்




# மிகவும் ருசிகரமானது மாத்திரமல்ல- இது நல்லது

போர்ன் - வீடாவில் 95 சதவிகிதம் எலும்பு வளர்ச்சிக்கும் ஜீவசக்தியளிப்பதற்குமான சரக்குகள் இருக்கின்றன. தவிர அது ருசியாகவும் ஜீர்ணத்துக்கு தூண்டுகோலாகவும், எளிதில் ரத்தத்துடன் சேர்ந்து புஷ்டிதருவ்தாகவும் இருப்பதால் குறிப்பாக கர்ப்பிணிகளுக்கும் வியாதிக்குப்பின் குணமடையும் தருவாயிலும இன்றியமையாத உணவாக விளங்குகின்றது.

## காட்பரீஸ்

# போர்ன்-வீடா

கால்ஷியம் விடமின்கள் நிறைந்தது.

காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி

# அறிவிப்பு

புதுக்கோட்டை சமஸ்தானம் ராயவரத்திலிருந்த பாப்பா பிரஸ் சென்னை ஜெனரல் பாடர்ஸ் ரோடு சுபத்ராபாய் மான்ஷனில் நடைபெறுகிறது. உயர்தரமான அச்சு வேலைகளுக்குத் தகுதியான இடம்.


**பாப்பா பிரஸ்**

53, ஜெனரல் பாடர்ஸ் ரோடு

'சுபத்ராபாய் மான்ஷன்'

மவுண்ட் ரோடு, சென்னை.

சர்வதாரி
மலர் 15

# சக்தி

புரட்டாசி
இதழ் 6

மெய்ப் பொருள் காண்பது அறிவு

•

## ஹைதராபாத் பணிந்தது

ஹைதராபாத் மன்னர் நைஜாம் கடைசியில் இந்திய யூனியனிடம் சரண் புகுந்துவிட்டார். நைஜாமும் அவருடைய பரிவாரங்களும் பண்ணிய உருட்டல் மிரட்டல்களுக்குக் கணக்குவழக்கு கிடையாது. அவர்கள் பிரிட்டனும், அமெரிக்காவும், பாகிஸ்தானும் தங்களுக்கு உதவி புரிய வரும் என்று நம்பினுர்கள்; ஆனால் அது நடைபெருமல் போய்விட்டது. இதனல் மேற்கண்ட அரசாங்கங்கள் யோக்கியமாக நடந்துகொண்டன என்று ஒரேயடியாக முடிவுகட்டிவிடமுடியாது. பாகிஸ்தான் தன்னுடைய நிலையைச் சமாளிக்க முடியாமல் தத்தளிக்கிறது; அந்தப் பலவீனத்தை மறைக்க வாய்வீச்சு ஒன்றையே கடைசி ஆயுதமாகப் பிரயோகித்துக்கொண் டிருக்கிருர்கள் பாகிஸ்தான் தலைவர்கள். இந்த நிலையில் ஹைதராபாத்துக்குப் பாகிஸ்தான் உதவி புரிய வரும் என்று எதிர்பார்த்தது அசட்டுத்தனமாகும். பிரிட்டனும், அமெரிக்காவும், ஹைதராபாத் விவகாரத்தில் தலையிட்டால், அது உலக அரசியலை எவ்வளவு பெரிய ஆபத்தில் கொண்டு போய்விடும் என்பதை அந் நாடுகளின் தலைவர்கள் அறிவார்கள். ஆகவே, சில வெள்ளைக்கார உதிரிகளின் உதவி கொண்டும், வெறும் அசட்டு நம்பிக்கைகளை மனதில் கொண்டும் ரசாக்கர் கும்பலின் தலைவர் காசிம் ரஜ்வி மிரட்டிக் கொண்டிருந்தார். ரசாக்கர்களின் அக்கிரமங்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போயின. ஹைதராபாத் சமஸ்தானம் மனித வாழ்க்கைக்கே லாயக்கில்லாமல் போய்க்கொண் டிருந்தது. இந்திய யூனியனின் புத்திமதியைக் கேட்கவும் ஹைதராபாத் மன்னர், பிரதானிகள் தயாராக இல்லை. ஆகவே, ஹைதராபாத்தில் நடைபெறும் அக்கிரமங்களைத் தடுத்து, அமைதியை நிலைநாட்ட இந்திய யூனியன் போலிஸ் நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்று.

போலிஸ் நடவடிக்கைத் திட்டப்படி இம்மாதம் 13-ம் தேதி காலை 4 மணிக்கு நம் படைகள் நாலா பக்கங்களி லிருந்தும் ஹைதராபாத் சமஸ்தானத்திற்குள் பிரவேசித்தன. வழி நெடுக மக்கள் நம் ராணுவத்தை வரவேற்றார்கள். நைஜாமின் படைகளால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அதனால் 17-ம் தேதி மாலை 5 மணிக்கு நைஜாம் மன்னர் சரணாகதி யடைந்தார். மொத்தம் 4½ நாட்கள், அதாவது 109 மணி நேரமே இந்தப் போர் நடைபெற்றது. இவ்வளவு பலவீனமுள்ள நைஜாம் தர்பார் முன்னால் மிரட்டிய மிரட்டல்களை இப்போது நினைத்துப் பார்த்தால், வேடிக்கையாகவும், பைத்தியக்காரத் தனமாகவும் இருக்கிறது. வாய்வீச்சுக்காரரான, ரசாக்கர் படைத்தலைவர் காசிம் ரஜ்வியும் கடைசியில் கைது செய்யப் பட்டுவிட்டார்.

ஐ. நா. சபையில் நைஜாம்-வழக்கை வாபஸ் வாங்கும்படி தம் பிரதிநிதிக்கு உத்தரவு போட்டு விட்டார் நைஜாம் மன்னர். அதுமட்டு மல்லாமல் 23-ம் தேதி யன்று ரேடியோவில் பேசும்போது, 100-க்கு 86 பேர் இந்துக்களாக உள்ள ஹைதராபாத் இஸ்லாமிய நாடாக முடியாது என்றும், இந்தியாவுடன் நேச பாவத்துடன் இருக்கத் தாம் விரும்பிய போதெல்லாம் ரசாக்கர் கூட்டமும், லைக் அலி மந்திரிசபையும் தம்மை எதுவும் செய்ய விடாமல் கட்டுப்படுத்திவிட்டன என்றும் நைஜாம் மன்னர் சொல்லுகிறார். ஹைதராபாத்தில் நடைபெற்ற எண்ணற்ற அக்கிரமங்களைக் கண்டு, நைஜாமை சிம்மாசனத்திலிருந்து இறக்கவேண்டும் என்ற கூக்குரல் இப்போது எங்கும் கிளம்பி யிருக்கிறது. இதைச் சமாளிக்க நைஜாம் ருத்திராக்ஷப் பூனை வேஷம் போடுகிறாரா என்ற சந்தேகம் உண்டாகிறது. உண்மை எதுவானாலும், மக்களின் இஷ்டம் போல ஹைதராபாத்தின் அரசியல் வகுக்கப்படும் என்று நம் பிரதமர் நேருஜி கூறி யிருக்கிறார். ஹைதராபாத்தின் நிர்வாகமும், ராணுவ கவர்னராகிய நம் தளபதி ஸ்ரீ சௌத்ரி, தலைமை சிவில் நிர்வாகஸ்தர் ஸ்ரீ டி. எஸ். பாக்ளே ஆகியோர் தலைமையில் நடைபெறுகின்றது. ஹைதராபாத்தில் மன்னராட்சி ஒழிந்து மக்கள் ஆட்சி தோன்றும் காலத்தை எதிர் நோக்குகிறோம்.

# காலச்சுழல்

**கடைசி வெள்ளைக் கவர்னர்:**

சென்னைக்கவர்னர் சர் ஆர்ச் பால்டு நைதான் இந்திய யூனியனிலிருந்து இங்கிலாந்துக்குக் கப்பலேறிய கடைசி வெள்ளைக் காரக் கவர்னர். இம்மாதம் 7-ம் தேதி காலை 7மணிக்கு வெள்ளைக் கவர்னர் சென்னையில் தம் பதவியிலிருந்து நீங்கி, வெளியேறினர். இது ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற தினமாகவும் இருக்கிறது. சுமார் 150 வருஷங்களாக இந்தியாவைஆண்டபிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முக்கியமான கடைசி வாரீசு இந்திய நாட்டை விட்டுப் புறப்பட்ட விசேஷ தினம் அது. 1947 ஆகஸ்டு 15-லிருந்து அவர் உத்தியோக பூர்வமாக இந்திய யூனியனின் உத்தியோகஸ்தராக இருந்தார். இனிச் சிறிது காலத்துக்குள்ளாக பிரிட்டனின் இந்தியப்பிரதிநிதிப் பதவியை ஏற்கப் போகிறார். ஸ்ரீ ஆர்ச்பால்டு நைக்குப்பின் பவநகர் மகாராஜா சென்னைக் கவர்னர் பதவியை ஏற்றார். இவர் 7-9-48 காலை 10-30க்கு ராஜாஜி மண்டபத்தில் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். இவர் இளைஞர்; நல்ல கல்விப் பயிற்சியும், முற்போக்கான எண்ணங்களும் உள்ளவர் என்றும் சொல்லப்படுகிறது. பொது நலனுக்கான வழிகளில் புதுக் கவர்னர் பவநகர் மகாராஜா தம் திறமையைப் பயன் படுத்துவார் என்று எதிர்பார்ப்போமாக.

**பாரதியார் தினமும், பாரதியார் பாடல்களும்:**

இம்மாதம் 11-ம் தேதி யன்று வழக்கம்போல நாடெங்கும் பாரதியார் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. எட்டயபுரம் பாரதி ஞாபகார்த்த மண்டபத்தில் பாரதியாருடன் நேரில் பழகிய ஸ்ரீ வ. ரா.வின் தலைமையில் விழா நடந்தது. இந்தப் பெரிய விழாவிலும், மற்றும் பல நகரங்களில் முக்கியஸ்தர்கள் பலர் நடத்திய பாரதி தின விழாக்களிலும், பாரதியார் பாடல்களின் எதிர்காலத்தைப் பற்றிய முக்கியமான விஷயத்தில் யாதொரு பிரஸ்தாபமும் எழுந்ததாகத் தெரியவில்லை. 'பாரதி பாடல்களைப் படியுங்கள்; பாடுங்கள்; பரப்புங்கள்!' என்ற கூக்குரல்தான் பெருத்திருக்கிறதே ஒழிய, பாரதி பாடல்களைப் பரப்ப என்ன செய்ய வேண்டும் என்று ஒருவரும் யோசனை கூறவில்லை. சில தனிப்பட்ட நபர்களின் கையில் பாரதி பாடல்களின் பிரசுர உரிமை இருக்கிறது. அவர்கள் தங்கள் லாபத்துக்காகவாவது, பாரதி பாடல்களை முன்போல பெரிய புத்தகங்களாகப் பிரசுரித்து வெளியிடலாம். ஆனல் அவர்கள் அதையும் செய்யவில்லை. அவர்களிடம் மனஸ்தாபத்தைத் தேடிக்கொள்ள இஷ்டமில்லாமலோ, அல்லது தாட்சண்யத்துக்காகவோ, பிரமுகர்களும், பாரதி பக்தர்களும், பாரதி பாடல்களின் பிரசுர உரிமை பற்றி எதுவும் கூருமல் இருக்கிருர்கள் என்று தோன்றுகிறது. இப்படிப்பட்டவர்கள் பாரதிக்குத் திருப்புகழ் பாடிக்கொண்டிருப்பது, பாரதி பாடல்கள் தேசமெங்கும் பரவவேண்டும் என்று சொல்வது உண்மையில் பெரிய கேலிக்கூத்தாக இருக்

கிறது. ஆகவே நாம் கூறுவது இது தான்: ஒன்று பாரதி பாடல்களின் பிரசுர உரிமை யார் யாரிடம் இருக்கிறதோ அவரவர்களைக் கொண்டாவது, பாரதியாரின் புத்தகங்களை அழகாக வெளியிட்டுத் தேசமெங்கும் பரப்பவேண்டும்; இல்லை என்றால் பாரதி பாடல்களை யார்வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம் என்று அவற்றைப் பொதுச் சொத்தாக்கி விடவேண்டும். இரண்டிலொன்று அடுத்த வருஷம் பாரதி தினக் கொண்டாட்டத்துக்குள்ளாகவாவது நடந்தாகவேண்டும். இல்லை என்றால், பாரதி தினத்தை மட்டும் வருஷாவருஷம் கொண்டாடுவது, நம் கேவல நிலையை மேலும் மேலும் புதுப்பித்துக் கொண்டே வருகிறோம் என்றுதான் ஆகும்.

**விபுலானந்தர் ஞாபகார்த்த மண்டபம்:**

சென்ற வருஷத்தில் காலமான விபுலானந்த அடிகள் ஈழ நாட்டின் பிறந்த பெரும் புலவர். தமிழ் உலகில் இவருக்குப் பெரிய மதிப்பு உண்டு. இவர் பத்திரிகை ஆசிரியராகவும், தமிழ்ப் பேராசிரியராகவும் இருந்தவர். ஈழ நாட்டில் பிறந்த ஸ்ரீ ஆனந்த குமாரசாமி இந்தியக் கலையையும் கலாசாரத்தையும் ஆராய்ந்து பெரும் புகழ் பெற்ற மேதை. நம் விபுலானந்த அடிகள் பழைமையான தமிழ் இசைக்கலையைப் பல வருஷங்களாக ஆராய்ந்து 'யாழ் நூல்' என்னும் நூலைத் தமிழுலகுக்கு வழங்கியவர். இசை ஆராய்ச்சியாளர்களுக்கு இந்த நூல் கிடைத்தற்கரிய பெரும் பொக்கிஷமாகும். ஆறுமுக நாவலர், சி,வை. தமோதரம் பிள்ளை போன்ற தமிழ் வளர்த்த பெரியார்கள் தோன்றிய ஈழ நாட்டில் மட்டக்களப்பு என்னும் ஊரில் பிறந்த விபுலானந்த அடிகளுக்கு, அவ்வூரில் இப்போது ஈழநாட்டு அன்பர்கள் ஒரு ஞாபகார்த்தக்கட்டடம் கட்டத் தொடங்கியிருக்கிறார்கள். நம் சென்னை மாகாணக் கல்வி மந்திரி ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியார் இர்த ஞபகார்த்த நிலையத்துக்கு அஸ்திவாரக் கல் நாட்டியிருக்கிறார். ஈழநாடும், சென்னையும் தனித்தனி அரசாங்கங்களின் கீழ் இருந்தபோதிலும் தமிழ், இரு நாடுகளையும் ஒன்றாக இணைத்து வைத்திருக்கிறது. விபுலானந்தர் ஞாபகார்த்த நிலையம், விபுலானந்த அடிகளின் பெருமையைப்போல வளர்ந்து, தமிழ்ப்பற்றைப் பரப்புமாக!

**பாஷாவாரி மாகாணம்:**

இம்மாதத்தில் பாஷாவாரி மாகாணக் கமிஷன் சென்னை மாகாணத்துக்கு வந்தது. பல பிரமுகர்கள் சாட்சியம் கொடுத்தனர்; அறிக்கைகளும் சமர்ப்பித்தனர். சென்னை நகரத்தின் எல்லையிலிருந்து வடக்கே பல மைல் தூரம் வரையுள்ள பிரதேசம் தமிழ்நாடாக இருந்தும் ஆந்திரர்கள் சென்னை நகரம் வேண்டும் என்று கேட்கிறார்கள்; இல்லைஎன்றால் சென்னை நகரத்தைத் தனி மாகாணமாக்கி விட வேண்டும் என்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் சென்னையையும் கடந்து செங்கல்பட்டு ஜில்லாவிலும் மற்றும் தமிழகத்தின் வடக்கு எல்லையில் உள்ள தமிழ் ஜில்லாக்களில் இருக்கும் பல பகுதிகளையும் கேட்கிறார்கள். மலையாளிகளும் கர்நாடகத்தவர்களும் கோயமுத்தூர், நீலகிரி ஜில்லாக்களின் பகுதிகளைக் கேட்கிறார்கள். ஏனென்றால் அங்கே மலையாளம், கர்நாடகம் ஆகிய மொழிகளைப் பேசுபவர்கள்

இருக்கிறார்கள் என்று முறையே இரு சாராரும் கூறுகிறார்கள். கோவையில் உரிமை கொண்டாடும் மலையாளிகள், நூற்றுக்கு நூறு தமிழ் ஜில்லாக்களாக உள்ளதும், தமிழகத்திலேயே பிற இடங்களைவிட நல்ல தமிழ் பேசப்படுவதும், சிறந்த தமிழறிஞர்களைத் தந்ததுமான நாஞ்சில் நாடு மலையாள ராஜ்யத்தில்தான் இருக்க வேண்டும் என்கிறார்கள். மேற்கண்ட வாதங்களுக் கெல்லாம என்னென்னவோ காரணங்களைக் காட்டுகிறார்கள். நேர்மைக்கு மாறான முறையில் பலரும் தமிழகத்தில் பாத்தியதை கோரும் இந்தச் சமயத்தில் நமக்குத் தோன்றும் ஒரே யோசனை இதுதான்: நேர்மைக்குப் புறம்பாக பாத்தியதை கோருபவர்களின் பேராசை முயற்சியை, தமிழர்கள் கட்டுப்பாடாக நின்று அடியோடு தகர்த்து எறிய வேண்டும்.

பிரமுகர்கள் போய்விட்டார்கள் :

கடந்த ஒரு மாதகாலத்துக்குள்ளாக சில உலகப் பிரமுகர்கள் ஒருவருக்குப்பின் ஒருவராகக் காலமானார்கள்.

கடந்த மாதம் 31-ம் தேதியன்று ருஷ்யாவின் பிரதானமான தலைவர் ஜெனரல் அலெக்ஸான்ட்ரோவிச் ஜடானோவ் காலமானார். ஸ்டாலினுக்குப் பிறகு இவரே ருஷ்யாவின் தலைமை ஸ்தானத்தை வகிப்பார் என்றும் மேற்கத்திய அரசியல் நிபுணர்கள் கூறிவந்தார்கள்.

இம்மாதம் 3-ம் தேதி செக்கோஸ்லோவேகியாவின் பிரசிடெண்டாக இருந்த டாக்டர் எட்வர்டு பெனேஷ் தம் சொந்த ஊரில், தம் 64-வது வயதில் காலமாய்விட்டார். இவர் உலகத்தின் மிகப் பெரிய மனிதர்களில் ஒருவர். ஏழை விவசாயியின் குடும்பத்தில் பிறந்து, செக்கோஸ்லோவேகியக் குடியரசின் ஸ்தாபகர்களில் ஒருவராகி விட்டார் பெனேஷ். 17 வருஷ காலம் இவர் அந்நாட்டின் அந்நியநாட்டு மந்திரியாகவும் 1935-லிருந்து 13 வருஷ காலம் பிரசிடெண்டாகவும் இருந்தார். இவ்வருஷம் ஜூன் மாதத்தில் இவர் தம் தலைமைப் பதவியை ராஜினமா செய்தார்.

11-ம் தேதி பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜனப் ஜின்னு காலமானார், இவர் பாகிஸ்தானின் ஸ்தாபகர். முஸ்லிம்களை, தனித் தேசீயஇனம் என்று வியாக்கியானம் செய்து வந்த இவர் ஒரு சமயத்தில் தாம் இந்தியர் அல்லர் என்றுகூடக் கூறினர். இருபதாம் நூற்றுண்டில் மதத்தை அடிப்படையாகக் கொண்ட இயக்கமோ ராஜாங்கமோ அநாகரிகமாகக் கருதப்படுகையில், இவர் மத உணர்ச்சியைப் பயன்படுத்தியே, யாதொரு தியாகமும் செய்யாமல், அரசியல் சதுரங்கத்தில் வெற்றி பெற்றவர். தனிப்பட்ட வாழ்க்கையில் இவரைப் பெரிய ஒழுக்க சீலர் என்று பலரும் பாராட்டி யிருக்கிறார்கள். காலமாகும் போது இவருக்கு வயது 72.

பாலஸ்தீன விவகார மத்தியஸ்தராக ஐ. நா. ஸ்தாபனம் நியமித்த கவுண்ட் போல்க் பெர்னடட் 17-9-48-ல் ஸ்டெர்ன் என்று அழைக்கப்படும் ஒரு பயங்கர யூதக் கூட்டத்தைச் சேர்ந்தவனல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

18-ம் தேதியில் பர்மாவின் அயல் நாட்டு மந்திரியாக இருந்த யு டின் டட் கொலை செய்யப்பட்டார். பர்மிய அரசியலில் திறமை வாய்ந்தவர் என்று இவரைக் குறிப்பிடுகிறார்கள்.

# மனித குணம்

மகாத்மா காந்தி

நான் இந்தியாவுக்குச் சேவை செய்யும் முயற்சியில் மனித வர்க்கத்துக்கே சேவை புரிகிறேன். என்னுடைய நாட்டுப் பற்று பொதுவாக மனிதவர்க்கத்தின் நன்மையையும் உள்ளடக்கியதாக உள்ளது. ஏனெனில் என்னுடைய நாட்டுப் பற்று தான் மனிதவர்க்க நன்மை.

என்னுடைய மக்கள் படும் கஷ்டங்களை நிவர்த்திப்பதைக் காட்டிலும், மனிதவர்க்கத்தின் மனப்போக்கு காட்டுமிராண்டித் தனமாகச் செல்லாமல் தடுப்பதில்தான் நான் அதிக சிரத்தை காட்டுவேன்.

சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப் படிவதும், ஆத்ம சக்திக்கு மரியாதை செலுத்துவதும்தான் மனித லட்சணம்.

கீழானவற்றைச் செய்யத் தூண்டுவதுதான் மனித இயற்கை என்று நான் நம்ப மாட்டேன். உயர் நிலை அடைவதற்கோ, கீழ் நிலை எய்துவதற்கோ மனிதன் பெற்றுள்ள திறமையைப் பற்றி ஒருவரும் திட்ட வட்டமாகத் தீர்ப்புக் கூற முடியாது.

மனிதன், கேவலம் அறிவாக மட்டுமோ, அல்லது இந்தச் சடலமாக மட்டுமோ இல்லை. மேலும் அவன் உள்ள மாகமட்டுமோ, ஆத்மாவாக மட்டுமோ ஆகிவிட மாட்டான்.

மனிதன் மிருக குணத்தில் ஹிம்சாவாதியாக இருக்கிறான். ஆனல் ஆன்மாவின் ஒளியில் அஹிம்சாவாதி ஆகிறான்.

மனிதத் தன்மை, படாடோபத்திலோ, ஆண்மைப் பேச்சிலோ, பிரபுத்துவ அதிகாரத்திலோ அடங்கி விடவில்லை.

மனிதன் பிற பொருள்களையும், உயிர்களையும் அழித்து வாழ்வ தில்லை.

மனித சாதி, யுத்தத்தின் கோரத்திலிருந்து பயந்து, நடுங்கி விலகினல், அதில் தவறு எதுவும் காண முடியாது.

மனிதன் தன்னுடைய நுண்ணறிவை அழிக்கும் தொழிலுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் பொழுது இழி நிலையை எய்துகிருன். ஆனல் அவ்வறிவையே வாழ்வின் மலர்ச்சிக்கு உபயோகப்படுத்தும் பொழுது மனிதன் பலனடைகிருன்.

தங்களுடைய எதிரியை முறியடிக்க வேண்டும் என்ற 'கண் மண்' தெரியாத முயற்சியிலோ அல்லது பலவீனமான தேசங்களையும், மனிதர்களையும் சுரண்டும் முயற்சியிலோதான் மனிதன் மிருகமாகிருன். அப்பொழுது அவன் தன்னை மட்டு மல்லாமல் மனித குலத்தையே கீழே இழுத்துச் செல்லுகிருன்.

சண்டையில் தோல்வி யுற்றது என்ற காரணத்தால் வீரம் செறிந்த ஒரு வர்க்கத்தின் உள்ளொளி மங்கச் செய்யும் முயற்சி மனித இனத்தின் வெற்றி அல்ல. ஆனல், மிருகத்தனத்தின் தலைவிரி தாண்டவம்.

மனிதர் இனத்தை மனிதர் அழிக்கும் இந்தக் கொடூரச் செய்கை தொடர்ந்து நடக்குமானல் மனித வர்க்கத்துக்கு வாழ்விடமே இல்லாமல் போய் விடும்.

மூன்ருவது மகா யுத்தம் வந்துவிடுமோ என்று உலகம் கவலையில் ஆழ்ந்திருக்கிறது. மகாத்மாவின் இந்த அறவுரைகளை இன்று உலகம் ஏற்றுக்கொண்டால் சமாதானம், தானே உலகில் நிலவும்



## ஜனுப் ஜின்ன

(1876—1948)

இவர் பிரசித்திபெற்ற வக்கீல்; ஆரம்பத்தில் காங்கிரஸ்காரர்; பிறகு லீக்கில் சேர்ந்தார். இந்து—முஸ்லிம் ஒற்றுமைக்காகச் சிறிது பாடுபட்டார்; அதன் பின் இந்து—முஸ்லிம் வேற்றுமையையே வளர்த்து வந்தார். அதன் பலனே பாகிஸ்தான். தாம் சிருஷ்டித்த பாகிஸ்தானின் கவர்னர் ஜெனரலாக இருந்து 11.9-48 அன்று இரவு 10-25க்கு மாரடைப்பால காலமானர்.

# சுதந்திரம்

திருச்சிற்றம்பலக்கவிராயர்

1

நமைச் சார்ந்து பாவிசைக்கும் நாவலரே! கவியரங்கின்
அமைச்சர் பெருந்தகையே! அன்பார்ந்த நமஸ்காரம்.
பெற்றெடுத்த தாய்நாட்டின் பெரியாரே! உங்களுக்கும்
சிற்றம்பலத்தான் நான் திசைநோக்கித் தெண்டனிட்டேன்.

2

இன்றிங்கே நாமெல்லாம் இனிதிருக்கும் இவ்வேளை
சென்றுவிட்ட முன்னைச் சிந்தித்துப் பார்ப்போமேல்,—
எத்தனையோ இன்பங்கள், எத்தனையோ துன்பங்கள்!
அத்தனையும் நம்மனசின் ஆழத்தில் நினைவூறும்.

3

நூற்றாண்டுக் காலமதாய் நுகக்கால் முதுகேற்றி
வேற்றுவரும் நம்மவரின் வீரம் பிழிந்து வந்தார்.
அந்தப் பெருஞ் சுமையை அகற்ற, நம் நாட்டைச்
சொந்தமென ஆக்கிப்பின் சுகந்தேட, நம்மவர்கள்
செங்குருதிப் புனல் வெள்ளம் சிறைவாசம், சித்ரவதை
தொங்கும் கயிறதனில் தூக்கு எனப் பலவாம்
வேதனைக்கு ஆளாகி, வெற்றி குறிக் கோளாகி
சாதனையில் வெற்றிபெற்றார்; சாகா வரம் பெற்றார்.
நந்தம் சுதந்திரத்தை நாட்டி விட்ட அன்னவர்க்கு
வந்தனைகள் செய்தின்று வாழ்த்திடுவோம்.

4

ஆனாலும்—
பேரரசைப் போராடிப் பெற்றாலும், அடிமைதனை
வேரோடு பேர்த்தெறிந்து வெட்டிக் களைந்தோமோ?
பூரணமாம் விடுதலைக்கு பொருளும்தான் என்னேயோ?
உடுக்கத் துணிமணியும் உண்ண நிறை உணவும்
படுக்கத் தனி நிழலும் பாங்கில் உடனமைய,
நெஞ்சில், நினைப்பில், நெறிமுறையில், நல் வாழ்வில்
நஞ்சு கலவாமல் நாமெல்லாம் ஓர் குடியாய்
எல்லோரும் இந்நாட்டின் இளங்கோவாய், ஆண்டானாய்
நல்லோர் குடிவாழ்க்கை நாட்டுவதே சுதந்திரமாம்.
இன்றைக்கோ—
வானவெளி முகடாய் மண்தரையே பாயலென
கூனியுடல் தாங்கி ஞன்றும் படை சனங்கள்
நெற்றி வியர்வைதனை நீராக்கி, நெல்லாக்கி,
குற்றுயிராய் வாழ்ந்துபசிக் கும்பி கொதிப்பதையும்,
அவ்வேளை—
உண்டு தினம் உறங்கி உறுத்தாத பஞ்சுமெத்தை
திண்டு சுகங் கொடுக்க திளைக்கின்ற பணக்காரர்
ஊரான் உழைப்பதனை, உறிஞ்சி உயிர் வாழ்வதுவும்
வட்டிக் கடன் கொடுத்து வாய்தா கழிந்து விட்டால்

கட்டி வச்சிக் காசைக் கறப்பதையும்,
இருப்பில் உணவிருக்க இருட்டில் பதுக்கி வச்சி,
கருப்புக் கடை நடத்தி காசுதனைச் சேர்த்தோன்
உருப்படியாய் நம்முன்னே உலாவந்து போவதையும்,
ஆலைத்துணிப் பெருக்கு அலையலையாய் வந்தாலும்
சேலை துணி மணிக்கு திண்டாடி வாடுவதும்
மானந்தனை மறைக்க மழைக் குளிரைத் தான் மறைக்க
சாணகலத் துணியின்றிச் சாவதையும்,
ஆதிமுதல் நம்மவர்க்கு அஹிம்சை நெறி கூறிவந்த
சூதறியாக் காந்தி மகான் சுடப்பட்டு மாய்ந்ததுவும்,
போதிமரப் புத்தனைப்போல் போதம் புகன்றவனை
சாதி மத பேதச் சழக்கு உயிர் வாங்கியதும்,
செல்லாகி விட்டபின்னும் சீவனிழக்காதவர் போல்
பொல்லாச் செயல் புரிந்து போர் முரசம் கொட்டுகின்ற
சிற்றரசர் தம் கூட்டம் சீறுவதும், மக்கள்தமை
குற்றுயிராய்த் துன்புறுத்தி குடலுருவிச் சூடுவதும்,

இப்படியாய்—

எத்தனையோ காட்சிகளை இன்றளவும் காணுகின்றோம்
வித விதமாய்த் துன்பங்கள் விளைவதுமே, பூரணமாம்
சுதந்திரத்தின் தன்மைகளோ, சொல்லிடுவீர் - அரங்கோரே!

ஆகையினால்—

அழுக்குப் படியாமல் அணிகள் புனைந்துவந்து
தளுக்குத் தனம் பண்ணும் சங்காத்தம் போதுமையா.

5

நம் நாட்டில்—
பாடுபடும் பாட்டாளி பசி தீர்க்க, உச்சி வெயில்
ஓடு பிளந்தெறிய உழைக்கின்ற விவசாயி
வீடு செழிக்க, விளக்கேற்ற
மக்கள் வலிமையினை மதியாத குறு மன்னர்
பொக் கென்று பட்டொழிந்து பொடியாக,
வஞ்சனையாய் மத பேத வார்த்தை சொலி நம்மிடையே
நஞ்சைத் தெளித்துவரும் நாகத்தின் உயிர் போக்க
நாமெல்லாம்—
ஒன்றுவோம், இன்றுமுதல் உழைப்போம், உலகினர்முன்
குன்றாப் புகழ் நிறுவி குலவைக் குரலிடுவோம்.
பொன்றாச் சுதந்திரத்தின் பூரணத்தை எய்திடுவோம்.

6

ஆதலினால்—

இந்தத் திரு நாளில் இன்புற்றோம், இனிமேலும்
அந்தப் பெரு நாளும் அணித்தாகச் செய்வதற்கு
சிந்தை துணிந் தொன்றாய்ச் சேர்ந்திடுவோம், செகத்தீரே!

ஒன்றாய்ச்

சேர்ந்திடுவோம்—செகத்தீரே!

---

*[15-8-1948 சுதந்திர தினத்தன்று சென்னை வானொலி நிலையத்தில் சென்னைப் பிரதமர் ஸ்ரீ ராமசாமி ரெட்டியார் தலைமையில் அரங்கேற்றப்பட்டது. நிலையத்தாரின் அனுமதி பெற்று இங்கே வெளியிடப்பட்டிருக்கிறது.]*

# நவீன கடனாளி

★

ஜே. சி. குமரப்பா

●

'பணம் கொடுக்கிறவன் இஷ்டப்படி தான் குழல் ஊத வேண்டும் என்பது பழங்காலத்திலிருந்து ஒத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. கடன் கொடுத்தவன் கடனாளிக்கு நிபந்தனைகள் விதிப்பது வழக்கம். இந்தியா சுதந்திரமடைந்து விட்டது. ஆனால், பேரம்பேசிக் காரியத்தை முடிக்கும் திறமையை இன்னும் வளர்க்கவில்லை. பிரிட்டனே தன்னிஷ்டப்படி இந்தியாவின் சம்மதம் இல்லாமல் குறைத்துக் கொண்ட பிறகுகூட இந்தியாவுக்குப் பிரிட்டன் 1200 கோடி ரூபாய் தரவேண்டும் என்பது தெரிந்த விஷயம். ஸ்டர்லிங் நிதி ஒப்பந்தத்தைப்பற்றிய நிபந்தனைகளை நிர்ணயிப்பதற்காக நம் நிதி மந்திரியின் தலைமையில் ஒரு தூது கோஷ்டி சென்றது. இந்த ஒப்பந்தத்தின்படி, வருஷம் ஒன்றுக்கு 80 லட்சம் பவுன் வருமானமுள்ள பிரிட்டன் தன்னால் இந்தியாவின் கடனைச் சமீபத்தில் தீர்க்கமுடியாது என்று சொல்லிவிட்டது. இந்தியாவுக்குப் பிரிட்டன் கடனாகத் தரவேண்டிய தொகை அதன் வருஷ வருமானத்தில் ஆறில் ஒரு பங்குதான். சாதாரணமாக, வருஷத்தில் 8000 ரூபாய் சம்பாதிக்கும் தனி மனிதன் ஒருவனால் அவன் வாங்கிய கடன்தொகை 1200 ரூபாயைத் திரும்பத்தர முடியவில்லை என்று சொன்னால், அதை அர்த்தமற்ற சரக்கு என்றுதான் செல்லுவோம். ஆனால் நம்முடைய கடனாளியோ தற்போதைய நிலையில் நீண்ட காலத்திற்குப்பிறகுதான் கொடுக்க முடியும் என்று நம்முடைய பிரதிநிதிகளிடம் சொல்லி அனுப்பிவிட்டான்.

பிரிட்டிஷ் அமெரிக்க ராணுவங்கள் யுத்த காலத்தில் இந்தியாவை ராணுவ தளமாக வைத்துக்கொண்டிருந்தன. அவர்கள் தங்கிச்சென்ற கிராமங்கள் எல்லாம் இப்பொழுது நாசக் காடாகக் கிடக்கின்றன. அப்பாகங்களைப் புனருத்தாரணம் செய்யவேண்டும். இங்கிலாந்து தன்னுடைய அரசியல் ஆதிகத்தைப் பயன்படுத்தி இந்தியச் சாமான்களை யுத்த தேவைகளுக்காக எடுத்துச் சென்றதால் ஏறியதே இந்தக் கடன் தொகை. இப்பொழுது தங்களால் இந்தக்கடன் தொகையைச் சமீபகாலத்

இங்கிலாந்தினிடமிருந்து வசூலிக்கப்படும் ஸ்டர்லிங் கடன் பணத்தை இந்தியசர்க்கார் எவ்விதமாகச் செலவழிக்கவேண்டும், எவ்விதமாகச் செலவழிக்கக் கூடாது என்று கூறுகிறார் நம் பொருளாதாரப் பேரறிஞர். கிராம உத்யோக் பத்திரிகையிலிருந்து.

திற்குள் கொடுக்க இயலாது என்று இங்கிலாந்து வாதாடுகிறது. நம்முடைய கிராமங்களைச் சீர்திருத்தி முன்னேற்றமடையச் செய்ய நமக்கு நிறைய முதல் தேவைப்படுகிறது. சத்து இழந்திருக்கும், நம்முடைய நிலங்களைச் செழிப்பாக்க வேண்டும்; நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க வேண்டும்; வாய்க்கால்கள் வெட்ட வேண்டும்; ஸ்டர்லிங் நிதிப் பணத்தை மேற்சொன்ன காரியங்களுக்குத்தான் பயன்படுத்தவேண்டும். ஆனால் தங்களுடைய நலனையே பெரிதென மதிக்கும், முதலாளிகள், தொழிலைப் பெருக்க அந்த நிதியில் பெரும் பகுதி வேண்டும் என்கிறார்கள். நம்முடைய பிரதிநிதிகளும் பெரிய தொழிற்சாலைக்காரர்களுக்கு வேண்டிய இயந்திர சாதனங்களைப் பெறுவதில் தான் அதிக சிரத்தை காட்டுகிறார்கள். ஆனால் இந்தப் பிரச்னையைச் சிறிது ஆராய்ந்தால், இந்த ஸ்டர்லிங் நிதி சேர்ந்ததற்கே மூலகாரணமாயிருந்த கிராமங்கள் போதிய வசதிகள் இல்லாமல் கஷ்டப்படும்பொழுது, தொழிற்சாலைக் காரர்களுக்கு அந்தப் பணத்தைச் செலவழிப்பது தவறானகாரியம் என்பது புலப்படும். இந்த ஸ்டர்லிங் நதிப் பணம் வசூலிக்கப்பட்டால் கிராமிய மக்களுடைய நலனுக்காகத் தான் செலவழிக்கப்பட வேண்டும் என்று முன்பே கூறியுள்ளோம். ஒரு நாட்டின் ஒரு சாராருடைய பணத்தை எடுத்து பிறிதொரு சாராருக்காகச் செலவழிப்பது கூடாது. ஆனால் துரதிருஷ்டவசமாக நம்முடைய தொழிற்சாலை முதலாளிகளும் அன்னிய நாட்டு முதலாளிகளைப் போல மிகச் செல்வாக்குடையவர்களாக இருக்கிறார்கள். கிராமாந்திர மக்களுக்கு அசௌகரியங்கள் உண்டாக்கும் பொருளாதாரத் திட்டங்களுக்குச் சம்மதிக்கும்படி தங்களுடைய செல்வாக்கை உபயோகப்படுத்தி அரசாங்கத்தைத் தூண்டுகிறார்கள்.

ஆகவே, ஸ்டர்லிங் நிதிப் பணம் வசூலிக்கப்பட்டவுடன் கிராமாந்திர மக்களுடைய நலனுக்காகவே அந்தப் பணத்தை அரசாங்கம் உபயோகப்படுத்தும் என்று நம்புகிறோம்.

*

## வாடகை கூடிவிட்டது

ஓர் அம்மாள் காலேஜில் சேரப்போகும் தன் மகளுக்கு ஓர் அறையை அமர்த்துவதற்காகப் பெரு முயற்சி செய்தாள். கடைசியில் கஷ்டத்தின் பேரில் ஓர் அறை கிடைத்துவிட்டது. அது மிகவும் நல்ல அறை. அறையின் சொந்தக்காரி அந்த அம்மாளிடம் "உங்களுக்கு ஏற்கெனவே உள்ள வாடகையை மிகவும் குறைத்துத்தான் இந்த அறையை விடுகிறேன். காரணம் பக்கத்து அறையில் ஒருத்தி இரவும் பகலும் பியானோ வாசித்துக் கொண்டிருக்கிறாள். அவளைத் தடுக்க இயலாது" என்றாள்.

அதற்கு அந்த அம்மாள், "அதைப்பற்றிப் பரவாயில்லை. என் மகள் முழுச் செவிடு" என்றாள்.

உடனே அறையின் சொந்தக்காரி, "அப்படியானால் நீங்கள் முழு வாடகையையும் கொடுத்தாகவேண்டும்" என்றாள்.

—வால் ஸ்ட்ரீட் ஜர்னல்

# குட்டிக் கதைகள்

*சீனத்து அறிஞர்கள்*

### அவன் பார்த்தது

ஒரு காலத்தில் ஒருவன் இருந்தான். அவனுக்குத் தன்னிடத்தில் ஏராளமாகத் தங்கம் இருக்க வேண்டும் என்ற ஆசை அதிகம். ஒரு நாள் அவன் நன்ருக உடை உடுத்துக் கொண்டு அதிகாலையிலேயே கடைத் தெருவுக்குப் போய்விட்டான். அங்கே



இருந்த ஒரு பொன் வியாபாரியின் கடைக்கு நேராகப்போய், தங்கத்தைத் திருடிக் கொண்டு, நடையைக் கட்டினுன். அவனை உத்தியோகஸ்தர்கள் உடனே கைது செய்து, அவனிடம் "என்ன இது, அங்கே ஆட்களெல்லாம் இருந்துகொண்டிருக்கும் போது, நீ என் (பட்டப் பகலில்) அவர்களுடைய தங்கத்தைத் திருடினுய்?" என்று கேட்டார்கள். அதற்கு அவன் சொன்ன பதில்:

"நான் தங்கத்தைத்தான் பார்த்தேன்; ஆட்கள் யாரையும் பார்க்கவில்லை." —லீ-ஐ-ட்ஸி

### பச்சோந்தி

ஒருவன் பணத்தைத் தொலைத்து விட்டு, தன் பக்கத்து வீட்டுக்காரனின் மகன் அதைத் திருடி விட்டதாக நினைத்தான். அவனைப் பார்த்தால் இவனுக்குத் திருடன் மாதிரியே பட்டது. அவனுடைய நடை, அவனுடைய தோற்றம், அவனுடைய கை கால் அசைவுகள், நடமாட்டங்கள் எல்லாம் திருடனுடைய லட்சணத்தைக் கொண்டிருந்ததாகவே தோன்றியது. ஆனல், அவன் வெகு சீக்கிரத்திலேயே தண்ணீர் ஓடும் மூங்கில் குழாய் ஒன்றில் கிடந்த தன்னுடைய பணத்தை எடுத்துக் கொண்டான். பழையபடியும் அவன் பக்கத்து வீட்டுக்காரனின் மகனைப் பார்த்தான். இப்போது அவனுடைய நடமாட்டங்களோ, கை, கால், அசைவுகளோ, திருடனுடைய லட்சணத்தைக்கொண்டிருக்கவில்லை.

—லீ-ஐ-ட்ஸி

சின்னஞ் சிறு குட்டிக் கதைகளின் மூலமாகத்தான் உலகத்து ஞானிகளில் பெரும்பாலோர், அரிய ஞானத்தையும் தத்துவங்களையும் போதித்து வந்தனர். இங்குள்ள சீனத்துக் கதை ஒவ்வொன்றும் ஒரு நீதிக் கடலாகவும், தத்துவ சாஸ்திரத்தின் சாரமாகவும் விளங்குகிறது. சுருங்கச் சொன்னல் ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு கவியாக இருக்கிறது.



சக்தி

கவியரசர் சி. சுப்பிரமணிய பாரதியார்



சென்னை நகரசபை மைதானத்திற்கு ராஜாஜி விஜயம்

சட்ட சபையில் ஸ்ரீமதிகள் நை, நாமகிரி, கவர்னர் நை, ராஜாஜி முதலியோர்



## இவ்வளவுதானா ?

கன்பூஷியஸ் கிழக்கு நோக்கிப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அப்போது அவர் பரஸ்பரம் விவாதம் செய்துகொண்டு நின்ற இரண்டு சிறுவர்களைக் கண்டார். அவர்களைப் பார்த்து, "எதைப்பற்றி நீங்கள் விவாதம் செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார் கன்பூஷியஸ். அவர்களில் ஒருவன் சொன்னான் :

"சூரியன் காலையில் நமக்கு அருகாமையிலும், மத்தியானத்தில் தூரத்திலும் இருக்கிறது என்று நான் சொல்லுகிறேன்.



அவனோ காலையில் தூரத்திலும், மத்தியானத்தில் அருகாமையிலும் இருப்பதாகச் சொல்லுகிறான்."

மேலும் அவன் சொன்னான் :

"சூரியன் உதிக்கும் போது அது பெரிதாக இருக்கிறது. மத்தியானத்தில் சிறிதாக இருக்கிறது. ஆகவே, சிறிதாகத் தெரியும் போது அது தூரத்திலும், பெரிதாகத் தெரியும் போது அது பக்கத்திலும் இருக்கவேண்டும்."

உடனே அடுத்தவன் சொன்னான் :

"சூரியன் உதிக்கும் போது எங்கும் குளிர்ச்சியாக இருக்கிறது; மத்தியானத்திலோ உஷ்ணம் தாங்க முடியவில்லை. ஆகவே உஷ்ணமாக இருக்கும் போது சூரியன் பக்கத்திலும், குளிர்ச்சியாக இருக்கும் போது தூரத்திலும் இருக்க வேண்டும்."

இவர்களில் யார் சொல்லுவது சரி என்று கன்பூஷியஸால் தீர்மானிக்க முடியவில்லை. சிறுவர்களோ அவரைப் பார்த்துச் சிரித்து, "உங்களை ஞானி என்று சொன்னது யார்?" என்றார்கள்.

—லீ-ஐ-ட்ஸி

## மறைத்து வைத்த மான்

செங் பிரதேசத்தில் ஒரு விறகு வெட்டி இருந்தான். அவன் காட்டில், மிரண்டு போன ஒரு மானைப் பார்த்தான்; பார்த்ததும் அதை சுட்டுக் கொன்றுவிட்டான். இதை மற்றவர்கள் பார்த்து விடுவார்களே என்று பயந்து, விறகு வெட்டி ஒரு தோப்பில் அந்த மானைக் கொண்டுபோய் ஒளித்து வைத்து அதன் மேல் விறகுக் கட்டைகளையும், மரக்கிளைகளையும் கொண்டு அடுக்கிவிட்டான். அப்புறம் குதூகலப்பட்டுக் கொண்டான். ஆனால், அவன் எப்படியோ, மானை ஒளித்து வைத்த இடத்தை சீக்கிரத்திலேயே மறந்துவிட்டான். கடைசியில் மானைச் சுட்டு ஒளித்து வைத்தது கனவிலே நடைபெற்ற காரியம்தான் என்று நம்பினான். ஊராரிடம் ஒரு கனவைப் போலவே அந்த சம்பவத்தைச் சொன்னான். இந்தக் கனவைக் கேட்டவர்களில் ஒருவன், ஒளித்து வைத்த மானைத் தேடப் புறப்பட்டு விட்டான்;

சுவாங்கு. மேலும், "ஒருவன் தன்னுடைய கிராமத்துக்கு வந்ததும் ஏன் வண்டியை விட்டிறங்க வேண்டும் என்று உமக்குத் தெரியுமா?" என்று கேட்டார். லா ஓட்ஸி, "ஒருவன் தன் பூர்வீகத்தை மறந்துவிடக்கூடாது என்று இந்த வழக்கத்துக்கு அர்த்தமல்லவா?" என்றார்.



நோயாளி பழைய படியும், "உயரமான மரத்தின் கீழாகப் போகும் போது ஏன் ஓட வேண்டும் என்று உமக்குத் தெரியுமா?" என்று கேட்டார். லா ஓட்ஸி, "வயசானவர்களை மதிக்க வேண்டுமென்பது அல்லவா இந்த வழக்கத்தின் பொருள்?" என்றார். "ஓ, சரி" என்றார் சாங் சுவாங்கு.

பிறகு சாங் சுவாங்கு தம் வாயை அகலத் திறந்து, லா ஓட்ஸியை வாய்க்குள்ளே பார்க்கும்படி சொல்லி, "இன்னும் என்னுடைய நாக்கு அங்கே இருக்கிறதா?" என்று கேட்டார்.

"ஆம்" என்றார் லா ஓட்ஸி

"இன்னும் அங்கே என்னுடைய பற்கள் இருக்கின்றனவா?" என்று கேட்டார் நோயாளிக் கிழவர்.

"இல்லை."

"ஏன் இல்லை என்று உமக்குத் தெரியுமா?" என்று கிழவர் கேட்டார்.

"நாக்கு மிருதுவாய் இருப்பதன் காரணத்தினால்தானே அது பற்களைவிட அதிக நாள் நிலைபெற்றிருக்கிறது? பற்கள் கடினமாக இருப்பதினால்தானே சீக்கிரத்தில் விழுந்துவிடுகின்றன?" என்றார் லா ஓட்ஸி.

"ஆம்" என்று சொல்லிவிட்டு சாங் சுவாங்கு பின்வருமாறு கூறினார்:

"இப்போது, உலகம் சம்பந்தப்பட்ட சகல கோட்பாடுகளையும் நீர் கற்றுக் கொண்டுவிட்டீர், இனி என்னிடம், உமக்குப் போதிக்க எதுவுமில்லை."

—லியூ ஹ்ஸியாங்

ஆந்தையும் குயிலும்

ஒரு ஆந்தை ஒரு குயிலைச் சந்தித்தது. உடனே குயில் கேட்டது: "எங்கே போகிறாய்?"

ஆந்தை: நான் கிழக்குச் சீமைக்குப் போகிறேன்.

குயில்: என்ன சமாசாரம், அங்கே?

ஆ: என்னுடைய 'கிறீச்' சுக்குரலை இந்த ஊர் ஜனங்கள் வெறுக்கிறார்கள். அதனால் தான் நான் கிழக்கே புறப்பட்டு விட்டேன்.

கு: நீ செய்யவேண்டிய காரியம், உன் கிறீச்சுக் குரலை மாற்றிக் கொள்ளுவதுதான். மாற்றாவிட்டால், நீ கிழக்குச் சீமைக்குப் போனாலும் உன்னை வெறுக்கத்தான் செய்வார்கள்.

—லியூ ஹ்ஸியாங்

*

# ருசிகரமான பட்டாணிக்கடலை புலவு—




அரிசியைக்களைந்து தண்ணீரை நன்றாக வடிக்கட்டி அரிசியை பட்டாணியுடன் சேர்த்து சூடான டால்டாவில், டால்டா முழுவதும் இழுத்துக் கொள்ளப்பட்டு, அரிசி கொஞ்சம் ஒட்டும்வரை வறுக்கவும். தண்ணீர் (அரிசி அளவுக்குமேல் ஒரு அங்குலம் மேலே மூடியிருக்கும்படி) விட வேண்டும். உப்பு, ஏலக்காய், இலவங்கப்பட்டை, கிராம்பு முதலியவைகளை ருசிக்குத் தக்கவாறு சேர்த்துக்கொள்ளவும். நன்றாக் கிளறி, பாத்திரத்தை மூடி, அரிசியும்பட்டாணியும் பக்குவம் ஆகும் வரைமெது அனலில் சமை. சாதம் முழு பக்குவமாகும் பொழுது கொஞ்சம் தண்ணீர் இருந்தால், மூடியை கொஞ்சம் நகற்றி, மூடியின்மேல் சில தணல் கட்டிகளை வை. பொரித்த வெங்காயம், பதாம் பருப்பு, திராக்ஷை முதலியவைகளை தூவு.




ஏன் நாம் மூடிய பாத்திரங்களில் சமைக்க வேண்டும்?

இது ஊட்டத்தைபற்றி முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம்.

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே — அல்லது என்று வேண்டுமானாலும் — எழுதுங்கள்!

**தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்**

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 79-50 TM



வாழ்க்கையில் புதிய ஒளி

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

# ஜீவாம்ருதம்

சந்தோஷமும் ஆரோக்கியமும் நிரம்பிய குடும்பத்தின் அழகே அலாதியானதுதான். ஜீவாம்ருதம் தேக புஷ்டியையும் வீரிய விருத்தியையும் அளிப்பது. ஆண், பெண் இருபாலரும் சாப்பிடக்கூடியது. இது நரம்புகளை வலுப்படுத்தி, வாழ்க்கையில் புதிய இன்பத்தைத் தரவல்லது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட் மதராஸ் 17



## அரசியல் நூல்கள், வரலாறுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆசியாவின் அறை கூவல் | பல்குநன் | 0 | 12 | 0 |
| மீண்ட இந்தியா | என். ஆர். பத்மநாபன் | 0 | 14 | 0 |
| 1944 முதல் இன்று வரை | ந. ராமரத்னம் | 1 | 4 | 0 |
| சோவியத் அரசாங்கம் | எஸ். ஷண்முகம் | 1 | 8 | 0 |
| சைன எங்கே போகிறது | ஆர். ராமநாதன் | 1 | 12 | 0 |
| மகாத்மாவின் மணிமொழிகள் | என். ஆர். பத்மநாபன் | 0 | 8 | 0 |
| புகழ்ச் செல்வர் | தி. ஜ. ர. | 3 | 0 | 0 |
| புகழ்ச்சித் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணர் | கே. ராஜகோபாலன் | 3 | 0 | 0 |

தபாற் செலவு தனி

கார்த்திகேயினி பிரசுரம்

இராமச்சந்திரபுரம், திருச்சினப்பள்ளி ஜில்லா

# இந்தி எதிர்ப்பா? வகுப்புவாதமா?

சாமி. சிதம்பரனார்

*கட்டுரையாளர் சிறந்த தமிழறிஞர்; நூலாசிரியர். தமிழ் நாட்டில் நடைபெறும் இந்தி எதிர்ப்பு இயக்கம் சம்பந்தமாகத் தம் கருத்துக்களை இக் கட்டுரையில் எடுத்துரைக்கிறார்.*

தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! தமிழ் நாடு தமிழருக்கே! என்ற முழக்கம் பத்தாண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டிலே எழுந்தது. அன்று, இன்று கவர்னர் ஜெனரலாக இருக்கும் ராஜாஜி அவர்கள் சென்னை மாகாணத்தில் முதல் மந்திரி. அது காங்கிரஸ் மந்திரி சபை. இந்த எழுச்சிக்குக் காரணம் காங்கிரஸ் மந்திரி சபையை எதிர்க்க வேண்டும் என்பது தான். காங்கிரஸ் பிராமணர்களின் ஆதிக்கம் நிறைந்த ஸ்தாபனம்; அதை அம்பலப்படுத்த வேண்டும் என்பதுதான் அப்பொழுது இந்தியை எதிர்த்தவர்களின் அந்தரங்கம்.

அப்பொழுது, எல்லா உயர்தரப் பள்ளிகளிலும் இந்திமொழி கட்டாய பாடமாக்கப்பட்டது. முதல் பாரத்தி லிருந்து மூன்றுவது பாரம் வரையிலும் இந்தி கட்டாய பாடம். தமிழ்—அதாவது தாய்மொழி கட்டாய பாடமாக இல்லை. அப்பொழுதிருந்த பாடத்திட்டம்: முதல் மொழி இங்கிலிஷ்; இரண்டாவது மொழி தமிழ் அல்லது சம்ஸ்கிருதம். தாய் மொழியே கட்டாய பாடமாக இல்லாதபோது இந்தியை ஏன் கட்டாய பாடமாக்கவேண்டும் என்று கேட்டனர்.

அந்த இந்தி எதிர்ப்பு இறுதியில் வகுப்புத் துவேஷமாக வளர்ந்துவிட்டது. தமிழ் நாடு தமிழருக்கே என்பது திராவிட நாடு திராவிடருக்கே என்று மாறியது. இந்தி ஒழிக என்ற முழக்கத்துடன் உச்சிக்குடுமி ஒழிக! பூணூல் ஒழிக! என்ற கூச்சலும் கிளம்பின.

இதன் பிறகு ஆரியர்—திராவிடர் கூச்சல் கிளம்பிற்று. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பிராமணர்களை யெல்லாம் ஆரியர்கள் என்று கூறினர். இதன் பிறகே திராவிடக் கழகமும் பிறந்தது.

இன்றைய இந்தி எதிர்ப்புக்கு மூலகாரணம் திராவிடக் கழகந்தான். திராவிடக் கழகத்தைச் சேராத—திராவிடக் கழகக் கொள்கைகளில் அநுதாபம் இல்லாத சிலரும் இந்தியை எதிர்க்கின்றனர்.

இன்று இந்தி எதிர்ப்பு அவசியமா? இன்றைய பாடத் திட்டப்படி இந்தியால் தமிழுக்கு ஆபத்தா? இதைச் சிந்திக்க வேண்டும்.

இன்றைய பாடத் திட்டத்தில் முதல்மொழி பிரதேச பாஷை, அதாவது தாய்மொழி; எல்லாப் பாடங்களையும் தாய் மொழியிலேயே சொல்லிக் கொடுக்க வேண்டும்; இரண்டாவது இந்தி, வடமொழி, உருது, அல்லது ஏதாவதொரு இந்திய பாஷை. மூன்றாவதாக ஆங்கிலம். தாய் மொழியும் ஆங்கிலமும் கட்டாய பாடங்கள். இரண்டாவது மொழிகளில் ஏதாவது ஒன்று எடுத்துக்கொள்ள வேண்டியது கட்டாயம். இந்திதான் எடுத்து கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் பெரும்பாலான பள்ளிக்கூடங்களில் இந்திக்கும் வடமொழிக்குந் தான் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். இந்தியையோ வடமொழியையோதான் படித்தாக வேண்டும்.

இரண்டாவது மொழி கட்டாயமாக இருக்கக் கூடாது என்பதே இந்தி எதிர்ப்பாளரின் வாதம். ஆகவே இதை இந்தி எதிர்ப்பு என்று சொல்வதைவிட இரண்டாவது மொழி எதிர்ப்பு என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

முதல் பாரத்திலிருந்து மூன்றும் பாரம் வரையிலுந்தான் இந்தத் திட்டம். இந்தத் திட்டப் படி இவ் வகுப்பு மாணவர்கள் மூன்று மொழிகள் கற்றாக வேண்டும். மூன்று மொழிகள் கற்பது மாணவர்களின் தலையில் அதிக பாரத்தை சுமத்துவதென்றும் கூறுகின்றனர்.

மற்றைய நாடுகளில் நான்கு மொழிகள் கூடக் கற்பிக்கப் பட்டு வருகின்றது; மூன்று மொழிகள் கற்பிக்கப்படுவது வெகு சாதாரணம்.

சோவியத் ருஷ்யாவில் முதல் மொழி பிரதேச பாஷை; அதாவது தாய்மொழி; எல்லாப் பாடங்களும் தாய் மொழியில் தான்; இரண்டாவது மொழி அந் நாட்டின் தேசீய மொழியாகிய ருஷ்ய மொழி. அதுவே மத்திய அரசாங்க பாஷை. மத்திய அரசாங்கத்தில் பங்கெடுத்துக் கொள்ளுவதற்காகவும், எல்லா மக்களோடும் கூட்டுறவு ஏற்படுவதற்காகவும் தேசீய மொழி கற்பிக்கப்படுகிறது; மூன்றுவதாக ஆங்கில மொழி. இதுதான் அங்குள்ள பாடமுறை.

ஆனால் கட்டாய ஆரம்பக் கல்வி தாய்மொழியில் கற்பிக்கப் படுகிறது. நமது நாட்டில் இன்னும் கட்டாயக் கல்விக்கு ஏற்பாடு செய்யப்படவில்லை. முதலில் அரசாங்கம் செய்யவேண்டிய காரியம் கட்டாய ஆரம்பக் கல்விக்கு ஏற்பாடு செய்வது தான். இதைச் செய்தபின் இப்பொழுதுள்ள கல்வித் திட்டத்தை நமது அரசாங்கம் கொண்டு வந்திருக்குமாயின் இதை யாரும் எதிர்க்கவோ, குறை கூறவோ முன்வர முடியாது.

ஆனால் பொதுமக்கள் செய்ய வேண்டிய கிளர்ச்சி, கட்டாய ஆரம்பக் கல்வி வேண்டும் என்பதுதான். இந்தி எதிர்ப்பல்ல என்பதே நமது கருத்து.

பொதுவாக நமது தமிழ்ப் பண்டிதர்களுக்கு மொழி வெறுப்பு அதிகம். வடமொழியை வெறுப்பார்கள். அந்நிய மொழி எதையும் பாராட்டமாட்டார்கள். தமிழ் தான் உயர்வு. தமிழில் இல்லாதன எதுவுமே இல்லை. இன்று எவை தமிழில் இல்லையென்று சொல்

கிரேக்க மோ அவைகளெல்லாம் ஒரு காலத்தில் தமிழில் இருந்தன, கடல் கொண்ட தமிழகத்தில் இருந்தன. அவைகளை யெல்லாம் கடல் கவர்ந்து கொண்டது. என்று பழம் பெருமை பேசுவார் கள்; பழம் பெருமை பேசுவதில் தமிழ்ப் பண்டிதர்களுக்கு இணையே யில்லை.

தனித் தமிழ் படிக்க பண்டி தர்கள்தாம் இவ்வாறு பேசு கிறார்கள் என்றால், பல மொழிப் பயிற்சியுடைய பண்டிதர்கள் சிலரும் கூட இவ்வாறு பேசுவது ஆச்சரியமல்லவா? தன்னுடைய மொழியைப் புகழ்வது, தன் னுடைய கலையைப் புகழ்வது, தன்னுடைய கலாசாரத்தைப் புகழ்வது தமிழனுடைய பரம் பரைக் குணம். இதைப் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் அந்நிய மொழியைத் தாழ்த்திப்பேசுவது, அந்நிய கலையைக் குறைத்துப் பேசுவது, அந்நியர் கலா சாரத்தை இகழ்ந்து பேசுவது அறிவுடைமை யல்ல. உலக ஒற்றுமைக்கு உதவுவது அல்ல. சமுதாய ஒற்றுமைக்குச் சற்றும் துணை செய்யாது.

ஆனால் இந்தி எதிர்ப்பு இந்தக் காரியங்களைச் செய்யத் தூண்டு கின்றது. இது நல்லதல்ல. இதை விலக்கியே தீரவேண்டும்.

இந்தி படிப்பதனால் தமிழ் கெட்டுவிடும்; தமிழ்க் கலைக்கு ஆபத்து வந்துவிடும்; தமிழர் கலாசாரம் மறைந்துவிடும்; என்று சில அறிஞர்களும் பேசு கின்றனர். இதுதான் நமக்கு வியப்பைத் தருகின்றது.

"இந்தி நுழைப்பு மொழிப் போராட்டம் அல்ல; கலைப் போராட்டம்; கலாசாரப் போராட்டம் என்பது நன்கு விளங் கும். தமிழ் மொழிக்குள்ள பண்பில் லட்சத்தில் ஒரு பங்கு பண்புகூட இந்தி மொழிக்கு இல்லை."

இது 17-7-48-ல் சென்னையில் நடந்த இந்தி எதிர்ப்பு மகா நாட்டில் கலந்துகொண்ட திரு. வி. க. அவர்கள் பேசிய பேச்சு. இந்தி படிப்பதனால் தமிழரின் கலாசாரத்திற்கு ஆபத்து வந்து விடும்; தமிழ்க் கலைக்கு ஆபத்து வந்துவிடும்; ஆதலால் இந்தியைக் கட்டாயப்படுத்தக் கூடாது என்பதே திரு. வி. க. அவர் களின் கருத்து.

ஆனால் ஒரு கேள்வி. தமிழ் மொழிக்குள்ள பண்பில் லட்சத் தில் ஒரு பங்கு பண்பு கூட இல்லாத இந்தி மொழி எவ்வாறு தமிழ் மொழியின் பண்பைக் கெடுத்துவிட முடியும்? தமிழிலே அபிமானமுள்ள தமிழரின் பண் பாட்டை எப்படி அழிக்க முடியும்?

"நமது தாய்மொழிக்கு நமது வீட்டில் உள்ள செல்வாக்கையும் அழித்து, அந்த இடத்தில் இந்தி யைக் கொண்டுவந்து வைப்பதற் காகத்தான் அவினாசியார் சூழ்ச்சி செய்கிறார். கறுப்புச்சட்டை, கதர்ச் சட்டை, காவிச்சட்டை, எச் சட்டை போட்டிருந்தாலும் தமிழன் என்ற உடற் சட்டையோடு பிறந்துள்ள தமிழர்கள் அத்தனை பேரும் தமிழைக் காக்கக் கடமைப்பட்ட வர்கள்தாம்."

இது ம. பொ. சிவஞான கிராமணியார் அவர்கள் பேச்சு. இந்தி படித்தால் தமிழர்கள் வீட்டில் கூடத் தமிழ் பேச மாட்டார்கள். தமிழை மறந்து விடுவார்கள். ஆகையால் இந்தியை எதிர்க்கவேண்டும் என்பதே இவர் கருத்து. தமிழின் மீது கொண்ட காதலால் இந்தி யைக் கண்டு இவ்வளவு பயம். எங்கே நமது அருமைத் தமிழை இந்தி படித்தவர்கள் மறந்து

விடுவார்களோ என்ற அநாவசிய மான சந்தேகம்.

பயம் வேண்டாம்; சந்தேகம் வேண்டாம். தமிழ் நாட்டிலே எத்தனையோ மொழிகள் குடி யேறின. தமிழர்கள் எத்தனையோ மொழிகளைக் கற்ருர்கள், கற்றிருக்கிருர்கள்; ஆனுலும் அவர்கள் தமிழை மறக்கவில்லை; மறக்கவும் மாட்டார்கள்.

மேலே காட்டிய திரு. வி. க. அவர்கள் பேச்சும், ம. பொ. சி. அவர்கள் பேச்சும் திராவிடக் கழகத்தைச் சேராதவர்களும் இந்தியை எதிர்ப்பது ஏன் என் பதை விளக்குவனவாகும்.

வேற்றுமொழி படிக்கும் ஒருவன் தனது தாய்மொழியை மறந்துவிடுவான்; தனது கலா சாரத்தைக் கைவிட்டுவிடுவான்; தனது மொழிக் கலைகளைக் காப்பாற்றமாட்டான்; ஆகை யால் எவனும் வேற்று மொழி யையே கற்கக்கூடாது. தனது தாய்மொழியை மட்டிலுந்தான் படிக்கவேண்டும்; என்று சொன்னுல் இதை எவரும் ஒப்புக் கொள்ள முடியாது. இந்தி மொழியைப் படிக்கக்கூடாது என்று சொல்லுவதற்கும் இதற் கும் வித்தியாசம் ஏதும்ம இல்லை.

இன்று உலகிலே வளர்ச்சி யடைந்திருக்கும் மொழிகளில் ஆங்கிலமே தலைசிறந்தது. அது எப்படி வளர்ச்சி யடைந்தது? பல நாடுகளிலும் குடியேறிய ஆங்கிலேயர்கள் பல மொழிகளையும பயின்ருர்கள். தங்கள் மொழியில் பல நூல்களை யும் எழுதினுர்கள். வேற்று மொழிகளில் உள்ள அரிய கலைகளையெல்லாம் மொழி பெயர்த்தார்கள். இதனுல் ஆங்கிலம் இன்று இணையற்ற கலைகள் நிரம்பிய மொழியாக விளங்குகிறது. இன்று ஒவ் வொரு மொழியினரும் தங்கள் மொழியை வளம்படுத்த இம் முறையையே கையாண்டு வரு கின்றனர்.

தமிழ் நாட்டிலே வாழ்ந்த பண்டைப் பெரும் புலவர்களைப் பாருங்கள். வட மொழியும் தமிழும் கற்ற புலவர்கள்தாம் பெரிய நூலாசிரியர்கள்; பெரிய உரையாசிரியர்கள். வடமொழி கற்ற தமிழ்ப் புலவர்கள் எல் லோரும் வடமொழிக்கு அடிமை யாகி விடவில்லை.

தொல்காப்பியனுர், பவணந்தி முனிவர் போன்ற இலக்கண ஆசிரியர்கள் இரு மொழி புலவர்கள்.

இளங்கோவடிகள், திருத்தக்க தேவர், சாத்தனுர், கம்பர், கச்சி யப்ப சிவாச்சாரியார், சேக் கிழார், வில்லிபுத்துரார், திரு வள்ளுவர், சிவஞான முனிவர் போன்ற சிறந்த நூலாசிரியர்கள் எல்லாருக்கும் வடமொழிப் பயிற்சி உண்டு.

சேனுவரையர், பரிமேலழகர், நச்சினுர்க்கினியர், இளம்பூரணர் போன்ற நுண்ணறிவு படைத்த உரையாசிரியர்கள் எல்லாரும இருமொழி வல்லவர்கள். இவர் களால் தமிழ்மொழி சிதைந்து விடவில்லை; தமிழ்க்கலை குறைந்து விடவில்லை; தமிழர் கலாசாரம் பாழ்பட்டுவிட விலலை.

இன்றுதான் என்ன? தமிழ் மாத்திரம் பயின்ற பண்டிதர் களால் தமிழ் மொழிக்கு எந்த நன்மையும் இல்லை. தமிழ்க்கலை வளரவில்லை; பிற மொழியும் பயின்ற தமிழறிஞர்களால்தான் தமிழிலே நூல்கள் பெருகி வரு கின்றன.

நமது காலக் கவிகளாகிய புரொபசர் சுந்தரம் பிள்ளை, மகா

கவி பாரதியார் போன்றவர்களும் வேற்று மொழிப் பயிற்சியுடையவர்கள்தாம்.

அந்த இந்தி எதிர்ப்பு மகாநாட்டில் தலைமை வகித்த மறைமலையடிகள் கூட இந்திக்கு அஞ்சுவதுதான் நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கிறது.

"ஆரியர்கள், என்று இந் நாட்டில் அடியெடுத்து வைத்தார்களோ அன்று முதல் தமிழையும், தமிழரின் கலைகளையும், கலாசாரத்தையும் ஒழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள். இந்தச் சூழ்ச்சி சென்ற 2500 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. தென்னாட்டை ஆரிய நாடாக்கவேண்டும் என்பதே இவர்களுடைய குறிக்கோள்; இதற்காகவே ஆரியர்கள் சிலர் தம்மையும் தமிழர்கள் என்று கூறிக்கொண்டும், நம்மோடு சேர்ந்துகொண்டும், நயவஞ்சகமாக நம்மை ஏமாற்றி, நம்மை வடநாட்டு ஆரியர்க்கு அடிமையாக்க முயற்சி செய்து வருகிறார்கள். இதற்கு நாம் ஏமாந்து விடக்கூடாது".

இது மறைமலை அடிகளின் பேச்சு. வடநாட்டினர் இந்தி மொழியின் மூலம் நம்மை அடிமைப்படுத்த முயற்சி செய்கிறார்கள் என்பதே அடிகள் பேச்சின் அர்த்தம்.

மறைமலையடிகள் நல்ல ஆங்கிலப் பயிற்சி உள்ளவர்கள்; வடமொழிப் பயிற்சியும் இருக்கலாம். தமிழைக் கரைகண்டவர்கள். நுணுக்கமான பேரறிவும், பெரும் புலமையும் உடையவர்கள். பிறமொழிக் கல்வியினால் அடிகளின தாய்மொழிப் பற்றுத் தேய்ந்துவிடவில்லை. அவர் தமிழரின் கலாசாரத்தை அவமதித்து விடவில்லை; ஆங்கிலேயருக்கோ, ஆரியருக்கோ அடிமையாகி விடவும் இல்லை. இதற்கு மாறாகத் தமிழின் சிறப்பையும், தமிழ்க் கலையின் வளப்பத்தையும், தமிழ் கலாசாரத்தின் மேன்மையையும் விளக்கிக் காட்டும் பணியை நீண்டகாலமாகச் செய்து வருகிறார். இத்தகையவர் இந்தியைக் கண்டு ஏன் அநாவசியமாக அஞ்சவேண்டும் என்பதுதான் நமக்கு விளங்கவில்லை.

மறைமலையடிகள், திரு. வி. க. சோமசுந்தர பாரதியார், மீனாட்சி சுந்தரனார் போன்ற பல மொழி பயின்ற அறிஞர்களாலேயே இன்று தமிழ் மொழி ஆக்கம் பெற்று வருகின்றது; தமிழர்கள் உணர்ச்சி பெற்று வருகின்றனர்.

கலைகளும் காவியங்களும் நிறைந்த ஆங்கிலம், வடமொழி போன்ற நூல்களைப் படித்தவர்களே அந்த அந்நிய மொழிகளுக்கு அடிமையாகி விடவில்லை. தமிழின் மேலும், தமிழ்க்கலையின் மேலும், தமிழர் கலாசாரத்தின் மேலுமே அதிக அன்பு கொண்டுள்ளனர். உண்மை இவ்வாறாக, கலைவளமோ, மொழிவளமோ, கலாசாரவளமோ இல்லாத இந்தி மொழியைக் கற்பதனால் எவ்வாறு தமிழர்கள் இந்திக்கு அடிமையாகி விடமுடியும்? ஒருபொழுதும் அடிமையாகிவிட மாட்டார்கள்.

இதுவரையிலும் கூறியவற்றால் இந்தியால் தமிழ் கெடும் என்று நினைப்பது தவறான கருத்தென்பதைக் கண்டோம். இனி இந்தி எதிர்ப்பில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் திராவிடக் கழகத்தாரின் கருத்து என்ன வென்பதைக் காண்போம்.

திராவிடக் கழகத்தார் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டிருப்பதற்குக் காரணம் தமிழ்ப் பற்றல்ல; கலைப் பற்றல்ல; கலாசாரப்பற்று

மல்ல; இவ் உண்மையைப் பலர் அறியமாட்டார்கள். அவர்களுக்கு மொழியிலோ, கலையிலோ, கலாசாரத்திலோ எவ்விதக் காதலும் இல்லை; கவலையும் இல்லை. இப்படிப்பட்டவர்கள் இந்தியை எதிர்ப்பது ஏன் என்பதைத்தான் பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

திராவிடக் கழகத்தார் தங்கள் அரசியல் கொள்கைக்கு ஆதரவு தேடவே இந்தி எதிர்ப்பில் இறங்கியிருக்கின்றனர். அவர்களுடைய அரசியலோ வகுப்பு வ.தத்தை அடிப்படையாகக் கொண்டது. செத்துப்போன ஆரியர்—திராவிடர் இனவேற்றுமையைப் பிரமாதப்படுத்திப் பேசுவது; அழிந்துபோன ஹிட்லரின் இனவேற்றுமைக் கொள்கையைப் பின்பற்றுவது; உருவான ஆக்கவேலைத் திட்டம் ஒன்றுமில்லாமல் ஒரு வகுப்பாரைத் திட்டுவதையே திட்டமாகக் கொண்டது; அழிந்து மறைந்து வரும் சாதிப் பிரிவினைகளைமீண்டும்உயிர்ப்பிக்கும் வகையில் வசைபுராணப் பிரசாரம் செய்வது. இதுவே இன்றைய திராவிடக் கழகத்தாரின் வேலை. சென்ற இந்தி எதிர்ப்புக் காலத்திலிருந்து அவர்கள் இந்த வழியிலேயே வளர்ந்து வந்திருக்கின்றனர்.

தமிழைக் காப்பாற்ற வேண்டும்; தமிழ்க்கலையைக் காப்பாற்ற வேண்டும்; தமிழர் கலாசாரத்தைக் காப்பாற்ற வேண்டும்; இதற்காக இந்தியை எதிர்க்க வேண்டும் என்று தமிழறிஞர்கள் பேசிய அதே கூட்டத்தில் திராவிடக் கழகத் தலைவர் பெரியார் ஈ. வே. ரா. பேசியதைப் பாருங்கள்:

"இந்தியோடு வடநாட்டாரையும் சேர்த்து ஒழிக்க வேண்டியது தான். அதற்கான அவசியம் ஏற்பட்டு விட்டது. இது திராவிடர்-ஆரியர் போராட்டம். அதுவும் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்துவரும் இப்போராட்டம் இன்று ஒரு முடிவான கட்டத்திற்கு வந்துவிட்டது."

இப் பேச்சிலிருந்து இந்தி எதிர்ப்பு அவர்களுடைய வகுப்புவாத அரசியல் போராட்டத்தை வளர்க்கும் கருவி என்பதை அறியலாம். திராவிடக் கழகத்தார் இந்தி எதிர்ப்பை வெறும் மொழி, கலை, கலாசாரப் பாதுகாப்புப் போராட்டமாகக் கருதவில்லை யென்பதைக் காணலாம்.

மற்றொரு சமயம் 9-8-48-ல் சென்னையில் நடந்த ஒரு இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் திராவிடக் கழகத் தலைவர் பேசியிருப்பதையும் கவனியுங்கள்:

"நாங்கள் இந்திய யூனியனிலிருந்து சென்னை மாகாணம் பிரிந்து பர்மா, சிலோன் போன்று அரசியல், சமுதாய இயல், மத இயல், பொருளாதார இயல் ஆகியவைகளில் சுயேச்சை நாடாக இருக்கவேண்டும் என்று சொல்பவர்கள். ஆதலால் பிரதமர் கூற்று எங்களுக்குப் பொருத்தமானதல்ல. பிரிவினை கேட்பது ராஜத் துரோகம் என்று சட்டம் இயற்றி விட்டால் மாத்திரம் எங்களை இந்தி வேண்டாம் என்பதற்காகக் குற்றவாளி ஆக்கலாம். இன்னும் அந்தச் சட்டம் செய்யவில்லை. எங்கள் கழகக் கொள்கை இந்துஸ்தான் என்பதிலிருந்து சென்னை மாகாணம் பிரியவேண்டும் என்பதே."

இப் பேச்சிலே இந்தி எதிர்ப்பின் நோக்கம் என்னவென்பதை வெளிப்படையாகக் கூறியுள்ளார். இது அரசியல் போராட்டந்தான் என்பதைச் சொல்லி

விட்டார். திராவிடக் கழகத் தலைவரின் இக் கருத்தே, அவர் கட்டளைக்கிணங்கி இந்தி எதிர்ப்பில் இறங்கி யிருப்பவர்களின் கருத்தும் என்பதில் ஐயமில்லை.

இக் கருத்துடையவர்கள் தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! என்று கூறுவது எதற்காக? தமிழைக் காக்க வாருங்கள்! தமிழ்க் கலையைக் காப்பாற்ற வாருங்கள்! தமிழர் கலாசாரத்தைக் காப்பாற்ற வாருங்கள்! என்று மற்றவர்களை ஏன் கூவி அழைக்க வேண்டும்?

"பார்ப்பனர்கள் எல்லோரும் ஆரியர்கள்; பார்ப்பனரல்லாதார் அனைவரும் திராவிடர்கள்; ஆரியர்கள் பிறவியிலேயே முதலாளிகள்; காரணம் அவர்கள் உடலை வருத்தி வேலை செய்வதில்லை. திராவிடர்கள் எல்லோரும் தொழிலாளிகள், காரணம் அவர்கள் உடல் வருந்தும் படி வேலை செய்யும் கூட்டத்தார். திராவிடர்களாகிய தொழிலாளிகளின் அரசாங்கம் ஏற்படவேண்டும். இதற்காகச் சென்னை மாகாணம் தனியாகப் பிரியவேண்டும். மத்திய அரசாங்கத்துடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் துண்டாக வேண்டும்."

இந்த நவீன சித்தாந்த அரசியல் கொள்கையைப் பரப்பவே இந்தியை எதிர்க்கின்றனர். இந்த வகுப்புவாதக் கொள்கையைப் பரப்புவதே அவர்கள் நோக்கம்.

இந்தி எதிர்ப்பின் மூலம் மொழித் துவேஷத்தை வளர்க்கின்றனர்; ஒரு வகுப்பார் மீது வசைமாரி பொழிகின்றனர்; வடநாட்டினர்க்கும் தென்னாட்டினர்க்கும் சண்டையைக் கிண்டிவிடுகின்றனர். இதை இந்தி எதிர்ப்பாளர்கள் வேண்டுமென்றே செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி இந்த முடிவிலேதான் கொண்டுபோய் விடும்.

வகுப்பு வாதம் எவ்வளவு கொடூரமானது என்பதை நாம் பார்த்துவிட்டோம். வகுப்பு வாதமே நமது நாட்டைத் துண்டு போட்டுவிட்டது. இந்தியா என்ற ஒரே நாடு இன்று இந்து—முஸ்லிம் என்ற வகுப்பின் பேரால் இரண்டாகிவிட்டது.

இந்தப் பொல்லாத வகுப்பு வாதத்தால் இலட்சக்கணக்கான மக்கள் மிருகத்திலும் கேடாக வெறிகொண்டு சண்டையிட்டனர். இச் சண்டையின் பலனாக நிகழ்ந்த கொடுமைகளை நினைத்தாலே நெஞ்சம் துடிக்கின்றது.

இன்று உலகத்திலேயே உண்மையான இனங்கள் இல்லை; சாதிகள் இல்லை; எல்லாம் கலந்து விட்டன. சுத்தமான இனத்தையோ, சுத்தமான ஜாதியையோ காணமுடியாது. மனித சரித்திரத்தை அறிந்தவர்க்கு இது நன்றாகத் தெரியும்.

இன்று உலகம் முழுவதும் உள்ள பிரிவுகள் இரண்டுதான். இல்லாதவர், உள்ளவர்; இந்த இரண்டு பிரிவுகள்தாம் உண்டு. இந்த இரு பிரிவுகள் மறைந்தால் தான் உலகில் சமாதானம் நிரந்தரமாக நிலவமுடியும். சுரண்டும் கூட்டத்தார் இந்த இரு பிரிவுகளும் நிலைத்திருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள்தாம். இவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே சாதி, மத இனச் சண்டைகளைக் கிளறிவிட்டுக் கொண்டிருப்பார்கள். இந்த உண்மையை உணராதவர்களே சாதி, மத, இனப் பித்து தலைக்கேறிப் பேயாட்டம் ஆடுவார்கள்.

வகுப்பு வாதமே மக்களுக்குள் கலகத்தை உண்டாக்கும். வகுப்புவாதமே அரசாங்கத்தால் மக்களுக்கான நல்ல காரியங்களைச் செய்ய முடியாமல் தடுக்கும்; வகுப்புவாதமே சமூகச் சச்சரவுகளையும், மதச் சண்டைகளையும் தூண்டிவிடும். வகுப்புவாதமே பாஷா துவேஷத்தை வளர்த்து மக்களை மூடராக்க வழி காட்டும்.

ஆகையால் எந்த உருவத்தில் வகுப்புவாதம் தோன்றினாலும் அதை நசுக்கவேண்டியது அறிஞர்கள் கடமை.

நமது நாட்டிற்குப் பெருந் தீங்கு செய்த வகுப்புவாத அரசியல் ஸ்தாபனங்களான முஸ்லிம் லீகும், இந்துமகா சபையும் தங்கள் செல்வாக்கை இழந்து வருகின்றன. இவைகளால் நேர்ந்த தீங்கை அறிஞர்கள் அறிவார்கள். இவைகளைப் போன்றதுதான் தென்னாட்டின் வகுப்புவாத அரசியல் ஸ்தாபனமாக விளங்கும் திராவிடக் கழகமும்.

திராவிடக் கழகத்தார் தங்களை அரசியல் கட்சி என்று சொல்லிக் கொள்வதில்லை. அரசியலுக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லையென்று கூறிக் கொள்ளுகின்றனர். ஆனால் திராவிட நாட்டைத் தனியாகப் பிரிக்கவேண்டும் என்று கூறுகின்றனர். திராவிட நாட்டுப் பிரிவினைக்காகவே இந்தியை எதிர்க்கிறோம் என்று சொல்லுகின்றனர்.

தங்களைச் சமூகச் சீர்திருத்தக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டே வகுப்புவாத அரசியல் கிளர்ச்சி செய்கின்றனர். இவ் வுண்மையைப் பொது மக்கள் உணரவேண்டும். வகுப்புவாத அரசியலின் தீமைகளை உணர்ந்து அதற்குச் சிறிதும் செவி சாய்க்காமல் இருக்க வேண்டும்.

திராவிடக் கழகத்தின் சமூதாய சீர்திருத்தக் கொள்கைகளில் 99 சதவிகிதக் கொள்கைகளில் நமக்குப் பற்றுண்டு. ஆனால் அதனுடைய வகுப்புவாத அரசியலைத்தான் நாம் அடியோடு வெறுக்கிறோம். ஆதலால் திராவிடக் கழகத்தின் மீது அல்லது அக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மீது விரோதங் கொண்டோ, வெறுப்புக் கொண்டோ, அவர்கள் நடத்தும் இந்தி எதிர்ப்பைக் குறை கூறவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்தி எதிர்ப்பின் மூலம் வகுப்புவாதக் கனல் மூளுகிறது, மூட்டப்படுகிறது, என்பதற்காகவே நாம் இந்தி எதிர்ப்பை வெறுக்கிறோம். இவ் வுண்மையைப் பொதுமக்களும் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதுதான் நமது ஆசை.

*

## எலுமிச்சம்பழத்தின் கதை

எலுமிச்சம்பழம், பூர்வீக ஐரோப்பியர்களுக்கும், எகிப்தியர்களுக்கும், தூரகிழக்குப் பிரதேச மக்களுக்கும் தெரிந்திருந்தது. ஆனால், அக்காலத்தில் எலுமிச்சம்பழ ரசத்தைக் குடிக்கத் துணியவில்லை. பழங்காலத்தவர்கள், கரையான், பாச்சா முதலியவற்றைக் கொல்லும் விஷம் தயாரிப்பதற்காகவே எலுமிச்சம்பழ ரசத்தைப் பயன்படுத்தினர்கள்.

—வால்டர் கே. புட்னி

# "விருந்தாளிகள் வந்திருக்கின்றனர்"

தேயிலை பானமருந்தி சிம்பாஷிக்க...சம்பா ஷணை ரஸமானதாக விருக்கலாம், ஆனால் டீ அவர்களுக்கு திருப்தியளிக்க முடியாது......ஏனெனில் விருந்தளிக்கும் அம்மையார் தேயிலை பானத்தை ஈரமான குளிர்ந்த பாண்டத்தில் தயாரித்தார். நல்ல டீ தயாரிக்க ஈரமில்லாத வெது வெதுப்பான பாண்டமே தேவை."





கோடிக்கணக்கான மக்கள் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெறுவதற்கு டீ அருந்துகிறார்கள். ஆனால் டீ அருந்தும் பலருக்கு நல்ல டீ என்னதென்பது தெரியாமலிருப்பது வருந்தத்தக்க விஷயம். நல்ல டீ தயாரிக்க எவ்வித அதிக செலவும் கிடையாது. ஐந்து சுலபமான விதிகளை பின்பற்றினால் போதும். உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் தேயிலை பானம் நறுமணம் ததும்பியிருக்கவும் இவ்விதிகளை உங்கள் மனதில் பதியவைத்து, எப்போதும் வீட்டில் இவ்விதிகளைப் பின்பற்றச் செய்வது அவசியம்.

**ஐந்து சுலபமான விதிகள்.**

1. புதியதாக எடுத்தவுடன் புதிதாகக் கொதித்ததுமான நீரையே உபயோகிக்கவும். 2. உபயோகிக்கும் முன் பாண்டத்தை வெதுவெதுப்பாக்கவும். 3. பேர் ஒன்றுக்கு ஒரு தேக்கரண்டி விதமும் பாண்டத்திற்காக ஒரு தேக்கரண்டியும் நல்ல தேயிலை உபயோகிக்கவும். 4. தேயிலை கஷாயம் உபயோகிக்கும் முன் 3 முதல் 5 நிமிஷம் நன்கு ஊறவேண்டும். 5. பாலைக் கோப்பையில் சேர்த்துக் கொள்ளவும்—பாண்டத்தில் வேண்டாம்.

"தேயிலைப் பானம் . சில யோசனைகள்" என்ற இலவச புத்தகம் ஆங்கிலம், வங்காளி, ஹிந்தி, உருது, அல்லது தமிழ் பாஷையில் கிடைக்கும். கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, 101 நேதாஜி சுபாஷ் ரோட், தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா என்ற விலாசத்துக்கு விண்ணபித்துப் பெறலாம்.

★



நன்கு தயாரித்த டீ யைப் போன்றது வேறேதுவுமல்ல.

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

டீ 196




# லிப்டன்ஸ்

## என்றல்

## முதல்தரமான டீ

LTX-151-TM

# தாலாட்டுப் பாடல்கள்

சு. ரா. ஆதிமூலம்

நாடோடிப் பாடல்களில் பல வீட்டைவிட்டு வெளியில் இருக்கும்போது பாடப்படுகின்றன. வீட்டிலே ஒப்பாரி, தாலாட்டு,கும்மி என்பன பாடப்படுகின்றன. இங்கே சில தாலாட்டுகளைக் கவனிப்போம்; இந்தத் தாலாட்டுப் பாட்டுகளை நீலாம்புரி ராகத்தில் பாடலாம்; ஒத்து வரும்.

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ
ஆரிரரோ ஆராரோ
ஆராரோ ஆரிரரோ.

இந்த அடிகளை 'தாராரோ' என்றும் பாடுவதுண்டு.

ஓடினாள் வள்ளி
ஒளிந்தாள் வனந்தேடி
தேடினார் வேலவரும்
திருப்பாற் கடல்ஓடி

இந்த அடிகள் தெரியாத மக்களே எங்கள் வட்டாரத்தில் இருக்க மாட்டார்கள்; முருகன்தான் தமிழ்க் கடவுளாயிற்றே! வள்ளிக்கும் முருகனுக்கும் மனத்தாங்கல் (ஊடல்) உண்டாயிற்று. வள்ளி கோபித்துக்கொண்டு வனத்தில் போய் ஒளிந்துகொண்டாள். பாவம், வேலவன் போய் பாற்கடலில் ஓடி ஓடித்தேடினாராம். எப்படிக் காணமுடியும்? அவன் திருச்செந்தூரில் கடலைக் காத்திருப்பதால் மக்கள் தம் பிள்ளைகளுக்குக் "கடற்கரை," "கடற்கரையாண்டி" என்று பேரிடுவது இன்றுவரை உள்ள வழக்கம்.

வடக்கே வடகிணறு-நம்ம
வாசலெல்லாம் பால்கிணறு
பால்கிணற்றைப் பார்க்கவந்த
பாலகனே கண்ணுறங்கு!

தூங்காத கண்ணுக்குத்
துரும்புகொண்டு மையெழுதி
உறங்காத கண்ணுக்கு
ஊசிகொண்டு மையெழுதி

பாலு அடுப்பினிலே
பாலனே நீ தொட்டிலிலே
பால்கொதிச்சுப் போகுதடா
பாண்டியனே கண்ணுறங்கு!

பொதுவாக இப் பாடல்களில் வடநாட்டுப் பெருமையைச் சொல்லாமல் தனக்குத் தெரிந்த தன் நாட்டு வளத்தைச் சொல்கிறாள்; பால்கிணறு என்றால் வெண்ணிற நீர் அல்ல; தெளிந்து சுவையாயிருக்கும் நீரையுடைய கிணறு. பாண்டியன் என்பது செல்வர்களையும் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களையும் குறிப்பிடவும் வீரமும், வெற்றியும் பெற்றவர்களைக் குறிப்பிடவும் உபயோகப்படும் சொல். பாண்டி நாடாதலால் இச் சொல் வழங்குகிறது. பாண்டி நாட்டில் 'பாண்டியன்' என்று பேரிடுவது சர்வசாதாரணம். ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்த மறவர்கள் 'பாண்டியன்' என்று பட்டம் வைத்துக் கொள்ளுகிறார்கள். இன்றும் தமிழர்களைத் திருவாங்கூர் வாசிகள் 'பாண்டிக்காரர்' என்றே அழைப்பார்கள்; சிறுவர்கள் 'பாண்டி' என்ற விளையாட்டும் விளையாடுவார்கள்.

பெண்களிடையே வழங்கும் சில அழகான தாலாட்டுப் பாடல்களை உள்ளடக்கிய கட்டுரை இது. இந்தத் தாலாட்டுப் பாடல்களைப் புரிந்துகொள்ளாத குழந்தைகள் தான் இவற்றைக் கேட்டுவிட்டுத் தூங்க முடியும். புரிந்து ரசிக்கத் தொடங்கிவிட்டால் அப்புறம் தூங்குவது என்பது நடக்காத காரியம்!

காசி வடகாசி
கண்குளிர்ந்த தென்காசி
தென்காசி காணவந்த
சீமைத்துரை யுறங்கு!

காசி கலப்பெண்ணெய்
கண்கலிக்கும் என்று சொல்லி
தென்காசி நல்லெண்ணெய்க்குச்
சீட்டெழுதி விட்டாரோ!

குற்றால நாதருக்குக்
குறுணி விதைப்பாடு
அறுக்க (அ)றுக்கத் தொலையலையே
ஆளுவந்தும் சேரலையே!

வேலவரைப் பாடியவள், கடற்கரையைப் பாடியவள், மலையை—குற்றாலத்தைப் பாடுகிறாள். இயற்கையின் எழிற் கூத்து, போதும் பொன்னும உந்தி வரும் அருவி, பசுஞ் சோலை இவற்றைக் குறிப்பிட சுருக்கமாக, "கண் குளிர்ந்த தென்காசி" என்று சொல்லுகிறாள். கண்ணுக்குக் 'குளுமை' தருவது பச்சை தானே! திருநெலவேலி ஜில்லாவில் மற்றப் பாகங்களில் மழையின்றி, நீரின்றி, வெய்யிற் கொடுமையால் மக்கள் தவிக்கையில் குற்றாலத்தைச் சுற்றி ஐந்து மைல் வட்டத்துக்குப் 'பசுமைக் கடலாய்' விளங்கவைப்பது குற்றாலத்துக்கு, தென்காசிக்குப் பெருமை யல்லவா!

இன்னும் குற்றால நீர் வீழ்ச்சியில் எண்ணெய்க் குளிப்புக்குச் சுயம்பான எண்ணெய் தென்காசியில் கிடைக்கும்; கலப்பு எண்ணெய் காசியில் தான் உண்டு. இங்குள்ளவர்கள் 'கலவை' செய்வதில்லை என்று பாடுகிறாள். குறுணி என்பது 8 சென்ட் விதைப்பாடு. குற்றால நாதருக்கு உண்மையில் குறுணி விதைப்பாடுதானா இருக்கிறது? இல்லை; குறுணி விதைப்பாட்டையே அறுக்க அறுக்கத் தொலையவில்லையே! அதாவது பயிர்கள் நல்ல 'தாக்காய்' வளர்ந்து 'சாடி'க் கிடக்கின்றன; நல்ல விளைவு என்று பொருள்.

கொச்சியிலே கூடாரம்—
உங்களப்பாவுக்கு
கொத்தமல்லி வியாபாரம்
கொத்தமல்லி விலையானல்—அப்பா
கொடி செய்து வருவாரே!

மலையிலே கூடாரம்—
உங்களப்பாவுக்கு
மல்லிகைப் பூ வியாபாரம்
மல்லிகைப் பூ விலையானல்—அப்பா
மணி செய்து வருவாரே

எவ்வளவு ஏழையா யிருந்தாலும் பிள்ளைகளுக்கு (சிறப்பாக ஆண் குழந்தைகளுக்கு) அரைஞாணாக வெள்ளிக் கொடி அணிவிப்பது வழக்கம்; மணிகள் கட்டுவர் சிலர்; கொடி யென்றாலே வெள்ளிக் கொடியைத்தான் குறிக்கும்.

காலுக்கு மிதியடியும்
கையிலே பூக்குடையும்
வாங்கி வருவார் அப்பா
மகனே நீ கண்ணுறங்கு!

குளிக்க குளம் வெட்டி
கும்பிட கோயில் கட்டி
படிக்க மடம் கட்டி வைக்கும்
பாண்டியரோ உங்களப்பா!

காக்கா கதிரறுக்க
கரிகுருவி சூடடிக்க
மாமன்மார் பொலியளக்க
மச்சினன்மார்கோட்டைகட்ட!

மகன் பள்ளிக்கூடம் போகும் போது மிதியடியும், குடையும் வேண்டுமாம். அவற்றை இப்பொழுதே வாங்கி வருவார் என்கிறாள். கலைமகள் துதியிலே பாரதியார்சொல்கிறாரே "அன்ன யாவினும் புண்ணியங் கோடி, ஆங்கோரேழைக்கு எழுத்தறிவித்தல்" என்று, அதைத்தான் இந்தத் தாய் 'படிக்க மடம்' கட்டி வைக்கும் 'புண்ணியவான் மகனே' என்று சொல்கிறாள்.

# ஐன்ஸ்டைனின் உறவு தத்துவம்

நா. கி. நாகராஜன்

இன்றைக்குப் பல்லாயிர ஆண்டுகளின் பின் வாழும் மானிடனை இருபதாம் நூற்றாண்டில் விளைந்த பெரும் புரட்சி எது என்று கேட்டால், புதுவகைச் சமுதாயத்தை நிறுவிய ருஷ்யப் புரட்சியையோ, கத்தியின்றி ரத்தமின்றி நாற்பது கோடி இந்தியர் சுதந்திர மடைந்த அற்புதத்தையோ குறிப்பிடாமல் 18 வயது யூத இளைஞனொருவன் அறிவியற்கலைகளில் செய்த புரட்சியையே குறிப்பிடுவான் என்று கூறலாம். அறிவு வளர்ச்சியின் வரலாற்றில் இப் புரட்சி என்றென்றும் முதன்மையான இடம்பெற்று விளங்கும். இத்தகைய பெரு விளைவுக்குக் காரணமான ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் * இந்நாள் உலகப் பேரறிஞர்களின் முன்னணியில் நிற்கிறார். இவரது உறவு தத்துவம் (Theory of Relativity) விஞ்ஞானக் கருத்துக்களில் விளைவித்த மாறுதல்கள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. ஸ்வாசன் என்ற அறிஞர் கூறுவதுபோல் "ஐன்ஸ்டைனின் கொள்கை மந்திரவாதியின் பையைப் போலுள்ளது. அதிலிருந்து வெளிப்படும் உண்மைகள், மந்திரவாதியின் பையிலிருந்து வெளிவரும் பொருள்களைவிடத் திகைப்பையும், வியப்பையும் தருவனவாக உள்ளன."

ஒவ்வொரு புரட்சியும் அதற்குச் சரியான சூழ்நிலைகள் ஏற்பட்ட பின்னரே விளைகிறது என்பதை நாம் உலக வரலாற்றிலிருந்து அறிகிறோம். ருஷ்ய மக்களின் சீர்கேடான நிலைமை ஜார் அரசனது வீழ்ச்சிக்கும் பாட்டாளி மக்களின் ஆட்சி முறையின் தோற்றத்திற்கும் தகுந்த காரணமாக விளங்கியது. அச் சூழ்நிலையைத் தக்கவாறு பயன்படுத்திய பெருமை மட்டும் லெனினைச் சேர்ந்தது என்று கூறலாம். அடிமை இந்தியரின் அல்லலைத் தீர்க்க ஒரு மகாத்மா காந்தி பிறந்தே ஆகவேண்டியிருந்தது. அதைப் போலவே விஞ்ஞானக் கருத்துக்களிலும் அடிப்படையான மாறுதல்கள் விளைந்தாலொழிய அது முன்னேற வழியில்லை என்ற நிலைமை இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டிருந்தது. அந்நிலையையறிந்து, எத்தகைய மாறுதலால் விஞ்ஞானம் பயனடையும் என்று ஐன்ஸ்டைன் கண்டார். புரட்சிகாமான அவர் கருத்துக்களை விஞ்ஞானம் வரவேற்கத் தயாராக இருந்தது.

ஆங்கில நாடகாசிரியர் பெர்னார்ட் ஷா தலைசிறந்த மேதைகளைத்தான் தமக்குச் சமானமானவர்கள் என்று கருதுவார். ஒரிடத்தில் அவர் கார்ல் மார்க்ஸையும், ஐன்ஸ்டைனையும், தம்மையும் ஒரு வரிசையில் நிறுத்திக் கூறுகிறார். இப்படிப்பட்ட மேதை ஐன்ஸ்டைன் வெளிப்படுத்திய உறவு தத்துவம் விஞ்ஞான சாஸ்திரத்தையே தலைகீழாக மாற்றிவிட்டது. சாமான்யத்தில் விளக்க இயலாத அந்த உறவு தத்துவம் இங்கே சுருக்கமாக விளக்கப்படுகிறது. திரும்பத் திரும்பப் படிக்க வேண்டிய கட்டுரை இது.

* ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்: இவருடைய வாழ்க்கை வரலாறு சக்தியில் விரைவில் வெளிவரும்
—ஆசிரியர், சக்தி

இதே கருத்துக்கள் ஒரு நூற்ருண்டுக்கு முன்னர் வெளியாகி இருந்தால் அதை உலகம் சிந்தித்தும் பார்த்திராது.

ஐன்ஸ்டைனின் கொள்கை வெளியானபோது விஞ்ஞான அறிவு வளர்ச்சி நிலையானவொரு படியை அடைந்திருந்தது. நட்சத்திரங்களின் இயக்கமும், பொருள்களின் அசைவும் நியூட்டனது விதிகளால் முற்றிலும் வரையறுக்கப் பட்டிருந்தன. கண்ணுக்குப் புலப்படாத மின்சாரதின் ஓட்டத்தையும், அணுக்களின் இயக்கத்தையும், ஒளியின் பாய்ச்சலையும் மாக்ஸ்வெல் என்ற அறிவியல் அறிஞர் தம் விதிகளால் தெளிவாகக் கணக்கிட் டிருந்தார். மிகப் பெரிய வான மண்டலத்திலும், கண்ணுக்குப் புலப்படா அணுக்களின் உலகிலும் நிகழும் விளைவுகள் பலவற்றை இவ் விதிகள் விளக்கி அறிவு வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்தன. இவற்ருல் விஞ்ஞான அறிவின் எல்லையையே கண்டுவிட்டதாகக் கூடச் சில விஞ்ஞானிகள் இறுமாந்திருந்தனர். ஆனல் மிகப் பெரிய அளவுகளுக்கு ஒருவகை விதிகளையும், மிகச் சிறிய அளவுகளுக்கு வேருெரு வகை விதிகளையும் பயன்படுத்துவது விஞ்ஞான முறைக்குத் திருப்தி யளிப்பதாக இருக்கவில்லை. இவ்விரண்டிற்கும் ஒருவகைத் தொடர்பையும் காண இயலவில்லை. இவ்விரண்டையும் இணைக்கும் பாலமாக உறவு தத்துவம் அமைந்தது. இக் கொள்கை அறிவியல் முன்னேற்றத்திற்குச் சிறந்த தூண்டுகோலாய் அமையக் காரணம் இதுதான்.

உறவு தத்துவத்தை முற்றிலும் விளக்கி அனைவருக்கும் விளங்க வைப்பது இயலாத காரியம். அதன் முக்கிய கருத்துக்களையும் அதனல் விளைந்த சில பயன்களையும் மட்டுமே இங்கே குறிப்பிடலாம். பொதுவாக விஞ்ஞானமும் சிறப்பாகப் பூதநூலும் நீளம், நிறை, காலம் இவற்றை அளவிடுவதை எட்டியுள்ளன. அளவுகள் இல்லாத ஒரு துறையை விஞ்ஞான மெனவே கூற இயலாது. ஐன்ஸ்டைனின் கொள்கைப்படி எல்லா அளவுகளும் வேருெரு திட்டத்துடன் சார்புடையவை. தனிப்பட்ட அளவுகளே உலகில் இல்லை. எனது உயரம் ஐந்தடி எனும் போது என் உயரத்தை நான் அடிக் கோலுடன் ஒப்பிட்டே கூறுகிறேன். நீளத்தைக் குறிப்பிடும் அளவுகளே இல்லாத ஒரு லகில் பொருள்களின் அகல நீள உயரங்களைக் குறிப்பிடவே இயலாதல்லவா? இதைப் போலவே என் நிறை 88 இராத்தல் என்ருல் இராத்தல் கல்லைப் போல் நான் 88 மடங்கு நிறையுள்ளவன் என்றே குறிப்பிடுகிறேன். என் வயது இருபத்தி ஆறு என்ருல் நான் பிறந்தது முதல் பூமி சூரியனை இருபத்தி ஆறு முறை சுற்றியுள்ளது என்பதே பொருள். மேற்கூறிய மூன்றுமேற்கோள்களில் கூறப்பட்ட அளவுகள் ஒவ்வொன்றும் வேருெரு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டே கூறப்படுகின்றன. இதையே ஐன்ஸ்டைன் மேற்கூறியவாறு எடுத்துரைத்தார். இதுவே சார்புக் கொள்கையின் அதாவது உறவு தத்துவத்தின் முதற் கருத்து.

இக் கருத்து மிக எளிதானதாகவே தோன்றலாம். ஆனல் இதனல் விஞ்ஞானம் பெரிதும் பயனடைந்துள்ளது. விஞ்ஞானி

யின் ஆய்கருவிகளின் நுணுக்கம் அதிகமாக ஆக அவனுடைய அளவுகளின் நுணுக்கமும் அதிகரித்து வந்துள்ளது. ஆகையால் நுணுக்கமான அளவுகளால் எத்தகைய வினையையும் ஆராய்ந்தறிந்து விடலாம் என அவன் நம்பினான். ஆனால் ஐன்ஸ்டைனின் கருத்தை ஏற்றதால் தன்னுடைய அளவுகளின் மேல் அவன் வைத்திருந்த நம்பிக்கை குறைந்து அறிவு வளர்ச்சியில் அளவுகளின் உண்மை ஸ்தானத்தை அவன் தேர்ந்தான். இவ்வாறு வினைக மாறுதல் தற்கால அணுக் கொள்கையிலும் கூடப் பிரதிபலித்துள்ளது.

ஐன்ஸ்டைனின் கொள்கையின் இரண்டாம் கருத்தை அறியுமுன் அவனியையே ஆளும் ஒரு வகை அலைத் தொகுதியைப் பற்றி நாம் சிறிது அறிய வேண்டும். மின்காந்த அலைகள் என்று இவை கூறப்படும். ரேடியோ அலைகள், ஒளிக்கதிர்கள், X—கதிர்கள் முதலியவை இத்தொகுதியைச் சேர்ந்தவை. இவை ஓரிடத்திலிருந்து இன்னொன்றையடையும் வகையை விளக்க விஞ்ஞானிகள் விசும்பு (Ether) என்ற கற்பனைப் பொருள் அண்டமெங்கும் நிறைந்துள்ளது என்றும், அது நிறை முதலிய சாதாரண இயல்புகள் இல்லாதது என்றும் கொண்டார்கள்; அண்டத்திலுள்ள பொருள்கள் அனைத்தும் இவ்விசும்புக் கடலில் மிதக்கின்றன; மின்காந்த அலைகள் விசும்பை ஊடு—பொருளாகக் கொண்டு பரவுகின்றன; நமது பூமி விசும்பின் வழியே மிக விரைவாகச் செல்கிறது; இதனால் அதற்கு எதிராக "விசும்புக் காற்று" இருக்கவேண்டும்; இதனால் பூமியை வந்தடையும் மின்காந்த அலைகளின் வேகம் மாறுபடும் என்று அப்போது கருதப்பட்டது. இதைக் கணக்கிடவும் செய்தார்கள். இதைச் சரிபார்க்க மிக விரிவும், நுணுக்கமுமான சோதனைகள் செய்யப்பட்டன. அவற்றின் விளைவாய் ஒளியலைகளின் வேகத்தில் மாறுதலே இல்லையென்பது தெளிவாயிற்று. இதனால் விசும்புக் கொள்கையே தடுமாறியது. இதைப் பழங் கருத்துக்களைக் கொண்டு விஞ்ஞானிகள் விளக்க இயலவில்லை.

பிட்சரால்டு என்னும் விஞ்ஞானி மிகத் துணிச்சலான புதுக் கருத்தொன்றைக் கொண்டு விளக்கினார். பூமி செல்லும் திசையை நோக்கி வரும் அலைகளை அளப்பதில் தானாவே ஒரு பிழை வந்து சேருகிறது. நமது அளவில் பயன்படும் அளவுகோல் பூமியுடன் சேர்ந்து இயங்குகிறது. ஆகையால் வேகமாகச் செல்லும் இது தன் நீளத்தில் சிறிது குறுகிவிடுகிறது என்று அவர் கூறினார்! இயங்கும் பொருள் எதுவாயினும் அது செல்லும் திசையில் குறுகவேண்டும் என்று பிட்சரால்டு பொதுப்படையாக இவ்வுண்மையை வெளியிட்டார். அதன்படி வெகு வேகமாகச் செல்லும் ரயில் வண்டி நீளவாட்டத்தில் சிறிது குறுகியேயாகவேண்டும். ஆனால் சாதாரண வேகங்களில் இக் குறை மிகச் சிறிதாகையால் அதை நாம் அறியமுடிவதில்லை. ஆனால் மணிக்குப் பல்லாயிர மைல் வேகத்தில் ஒருவன் ஓடுவதை நாம் காணக்கூடுமாயின் அவனது முகமும், மூக்கும் சப்பையாய்ப் போய் அவனும் மெலிந்த உடலோடு விந்தை மனிதன் போல் தோன்றுவான். இச்

சுருக்கமே மேற்கூறிய சோதனையில் ஒளியின் வேகத்தில் ஏற்படும் மாறுதலை அறியவொட்டாமற் செய்து விட்டது. எனெனில் இயற்கை யன்னை விஞ்ஞானியின் மேல் வெகுண்டு அவனது சோதனையைத் தோல்வியுறச் செய்தாள்! அதாவது ஒளியின் வேகம் எவ்வளவு குறைகிறதோ அதே அளவுக்கு அளவுகோலும் குறுகி அளவிடப்படும் வேகத்தை மாறுமற் செய்து விடுகிறது.

இதிலிருந்து ஐன்ஸ்டைன் தமது சார்புக் கொள்கையின் முதற் கருத்தை விவரிக்க முடிந்தது. விஞ்ஞானக் கருத்துக்கள் பலவற்றில் மிகத் திறமையுடன் கையாளப்பட்ட அசையா விசும்பு வெறும் கற்பனை யென்ருகிவிடவே அசையாத ஒரு பொருளை அடிப் படையாகக் கொண்டு நீளங்களையும், வேகங்களையும் அளத்தல் இயலாத செயல் என்ருகியது. ஆகையால் அளவுகளின் சார்புத் தன்மையை ஐன்ஸ்டைன் எடுத்துக்கூற இக் கருத்து உதவியது.

காலத்தின் சார்புத் தன்மையைப் பற்றி ஐன்ஸ்டைன் தமது அடுத்த கருத்தை வெளியிட்டார். இன்று வானத்தில் புது நட்சத்திரமொன்று திடீரென்று தோன்றுகிறது எனக் கொள்ளுவோம். அதைப் புவியிலுள்ளோரும், செவ்வாயையொத்த வேருெரு கிரகத்திலுள்ளோரும் வெவ்வேறு சமயங்களில் நிகழ்ந்ததாகவே கொள்வார்கள். எனெனில் இந் நிகழ்ச்சியை நிர்ணயிக்கும் கால அளவு இவ்விரு கிரகங்களின் வேகங்களைப் பொறுத்திருக்கும். ஆகையால் கால அளவுகள் அளவிடும் பொருள்களின் வேகத்தைச் சார்ந்திருக்கின்றன.

ஆனல் வேகமோ இடவெளியின் (Space) அளவுகளைச் சார்ந்துள்ளது. ஆகையால் காலத்தை இடவெளியின் அளவுகளிலிருந்து பிரித்து வேருக அளவிட முடியாது என்ருகிறது. இதனல் காலமும், இடவெளியும் சார்புடையவை என்ற முடிவுக்கு வருகிருேம். இதை அடிப்படையாகக்கொண்டு காலத்தைக் கணக்கிட்டால் விசித்திரமான முடிவுகளை அறிகிருேம். பொருளின் வேகம் அதிகமாக ஆகக் கால அலகும் நீண்டுகொண்டேவரும். ஒருவன் ஒளியின் வேகத்திற் சென்ருல் அவனைப் பொறுத்த மட்டில் காலக் கிழவன் வேலை நிறுத்தம் செய்துவிடுகிருன்! அத்தகையோனது வயதே மாருது. எப்போதும் மாருத இளமையுடன் அவன் இடவெளியில் ஒளியின் வேகத்தில் சென்று கொண்டிருப்பான்.

இதனுல் நாம் இன்னெரு உண்மையையும், அறிய முடிகிறது. அவ்வாறு சென்ருல் அப்பொருள் காலச் சக்கரத்தையே பின்னேக்கிச் சுழற்றுவது போலாகும். ஒருவன் நம்மை நோக்கித் துப்பாக்கியால் சுடுவதாகக் கொள்வோம். அக் குண்டு சுடப்படுவதை நாம் முதலில் பார்த்த பின்னரே அது நம்மை வந்தடைவதைக் காண்கிருேம். ஆனல் அது ஒளியைவிட விரைவாய் வருமாயின் அது நம்மை வந்தடைந்த பின்னரே அது சுடப்படுவதைக் காண்போம். அதாவது குண்டு துப்பாக்கியைவிட்டு நீங்குமுன் நம்மை வந்தடைந்து விட்டதாக நாம் நினைப்போம்! இது காரண காரிய விதிக்கே முரணுகும். ஆகையால் பொருள்கள் ஒளியைவிடக் கடுகிச் செல்ல இயலாது.

இடவெளியில் ஒரு பொருளின் இருப்பிடத்தைக் குறிக்க ஒன்றிற்கொன்று நேர்குத்தான மூன்று தளங்களிலிருந்து அதன் தொலைவைக் குறிப்பிட்டாற் போதுமானது. இம்மூன்று தொலைவுகளும், பொருளின் மூன்று வகையளவுகள் (Dimensions) எனப்படும். ஆனால் இடவெளியும் காலமும் சார்புடையவை என்றானதால் காலத்தையும் ஒருவகை யளவாகக் கொண்டால்தான் பொருளின் இருப்பிடத்தை முற்றிலும் குறிப்பிட முடியும். இவ் விரண்டையும் ஒன்றுசேர்த்துக் கால-இடவெளி (Space-time) என்ற புது வகையளவு தோன்றியுள்ளது. காலமும், தூரமும் ஒன்றியுள்ள இவ் வண்டத்தில் இவ்வகை அளவைக் கொண்டே நாம் அளவுகளைக் குறிப்பிட வேண்டும் என்னும் புதுக் கருத்து விஞ்ஞானத்தில் புகுந்தது. இதனால் வானநூலைப் பற்றிய நெடுநாளைய கருத்துக்கள் மாறுதலடைந்தன.

"எல்லாம் மாயை" என்ற நம்முன்னோரது கருத்தை ஐன்ஸ்டைனின் கொள்கை மிகச்சிறந்த முறையில் அறிவுறுத்தியது. நியூட்டனின் கவர்ச்சி விதியை (ஆகர்ஷணசக்திக் கொள்கை) ஞானிகள் வேதவாக்காகக் கொண்டுள்ளனர். இருபொருள்களுக்கிடையே தொழிற்படும் கவர்ச்சியைச் சக்தி (Force) எனக் குறிக்கிறோம், ஆனால் சார்புக் கொள்கையின்படி இது சில வினாவுகளை விளக்க நாம், கையாளும் ஒரு கற்பனைக் கருத்தே தவிர வேறல்ல. அண்டத்திலுள்ள எல்லாப் பொருள்களும் இட வெளியில் உள்ளன என்ற கருத்து இப்போது அவையனைத்தும் கால இடைவெளியில் மிதக்கின்றன என்று மாற்றப்பட வேண்டும். ஆகையால் கால - இடைவெளி எங்கெங்கும் ஒரு பெரும் போர்வைபோல் பரந்துள்ளது என்று நாம் கற்பனை செய்து கொள்ள வேண்டும். அதில் பொருள்கள் உள்ள இடங்களில் மட்டும் இப் போர்வையில் மடிப்புகள் தோன்றுகின்றன. இம் மடிப்புகள் உள்ள இடத்தையே நாம் சக்திகள் தொழிற்படும் இடமென அறிகிறோம். இதைப் பற்றித் தெளிவாக எண்ணிப் பார்த்தல் கடினமே. பல நூற்றாண்டுகளாக மானிட உள்ளத்தோடு ஒன்றிவிட்ட கருத்துக்களுக்கு இது முற்றிலும் மாறாக உள்ளது. ஆனால் இதை ஒரு மேற்கோளால் விளக்க முயல்வோம். தரையில் ஊர்ந்து செல்லும் எறும்புகளாக நாம் மாறிவிடுவோம். அப்போது நாம் உலகில் அகலம், நீளம் என்ற இரண்டே வகை அளவுகளைத் தவிர உயரம் என்ற அளவு இருப்பதாகவே அறியமாட்டோம். அப்போது நாம் செல்லும் வழியில் ஒரு மேடு இருந்தால் அதை அடைந்தவுடன் நாம் பாதையினின்று விலகி அதைச் சுற்றிக்கொண்டு செல்வோம். இதற்குக் காரணமென்ன என்று நாம் ஆராயப் புகுந்து அங்கே விலக்க சக்தி யொன்று தொழிற்படுகிறது என நினைக்கத் தொடங்குவோம். அதைப்போலவே பாதையில் ஒரு பள்ளம் இருந்தால் நாம் அதற்குள் விழும்போது அவ்விடத்தில் ஒரு கவர்ச்சி சக்தி இருக்கிறது என்னும் முடிவுக்கு வரலாம். அதைப்போலவே கால இடவெளியில் உள்ள மேடு பள்ளங்களால் பொருள்களின் இயக்கமும் மாறுபடுகிறது. இதையே

கவர்ச்சியெனவோ விலக்க மெனவோ நாம் (தவருக) எண்ணுகிறேம் என்று ஐன்ஸ்டைன் கூறினர். இதன்படி அவர் நியூடனின் கவர்ச்சி விதியை மாற்றியமைத்தார். இதனல் அது திருந்தி புதிதாக அறியப்பட்ட சில வான விளைவுகளையும் விளக்கும் திறமை பெற்றது.

நிலையற்ற அண்டத்தில் பொருள் ஒன்றுதான் நிலையானது எனப் பழங்கால விஞ்ஞானம் உறுதிகூறியது. அதைக் கூட ஐன்ஸ்டைன் மறுத்துவிட்டார். 'ஒரு பொருளின் நிறை அது செல்லும் வேகத்தைப் பொறுத்தது. வேகம் அதிகமாயின் பொருளின் நிறையும் அதிகரிக்கிறது. கேவலம் 88 இராத்தலே உள்ள என் நிறையுங்கூட நான் விமானத்தில் கடுகிச் செல்லும்போது சிறிது அதிகரிக்கிறது என்று அறிந்து மகிழ்கிறேன்.' நிறையும் ஆற்றலும் ஒன்றே யென்றும், ஒன்றை இன்னென்ருக மாற்றலாம் என்றும் அவர் கண்டார். நெல்லிக்காயளவு உரேனியம் பூரணமாக நசித்து ஹிரோஷிமா நகரத்தை நிர்மூலமாக்கிய ஆற்றலை வெளியிட்டது இப்போது சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்டது. ஆகையால் நானும் முற்றிலும் அழிந்து ஆற்றலாக மாறிவிட்டேனுயின் உலகத்தையே அழித்துவிடும் வல்லமையை யடைவேன் என்று எண்ணிப் பெருமை கொள்ளுகிறேன்!

ஐன்ஸ்டைனின் கருத்துக்கள் ஒவ்வொன்றும் சோதனைகள் வாயிலாய்ச் சரி பார்க்கப்பட்டுள்ளன. ஆகையால் இவையனைத்தும் அவ்வதிசய மனிதரின் கற்பனைகள் அல்லவென்றும், இவை விஞ்ஞான உண்மைகள் என்றும் நாம் அறிய வேண்டும். வான விளைவுகள் பலவற்றை இவை மிகத் திருத்தமாக அளவிட்டுக் கூறியுள்ளன. அணுக் கொள்கை முன்னேறவும் இவை பெரிதும் உதவியுள்ளன. பழங் காலக் கருத்துக்களில் திளைத்துச் செயலற்றுப்போன விஞ்ஞானிகளுக்கு இவை புத்துயிரளித்தன. இதை எடிங்டன் என்ற பேரறிஞர் பின்வருமாறு கூறுகிருர்: "நியூடனது கொள்கையை ஐன்ஸ்டைன் வழக்கொழியச் செய்தபோது அவர் வளர்த்த (விஞ்ஞானம்) செடியைக் குறுகிய பூந் தொட்டியிலிருந்து வெளியே எடுத்துப் பரந்த வயலில் நட்டார்." இக் கூற்று அவர் மற்றத் துறைகளில் விளைவித்த புரட்சிக்கும் பொருந்தும்.

ஐன்ஸ்டைனின் கொள்கையால் பாதிக்கப்படாத விஞ்ஞானத் துறையே இல்லை யெனலாம். விஞ்ஞான அறிவு முதிரத் தொடங்கியவுடன் அதன் பல்வேறு துறைகள் வெவ்வேருகப் பிரிந்துபோகத் தொடங்கின. சார்புக் கொள்கை அவற்றையெல்லாம் மறுமுறை ஒன்று சேர்க்க உதவியுள்ளது. தற்காலத்தில் விஞ்ஞானத் துறைகள் பலவற்றிற்கு மிடையே இருந்த எல்லைக் கோடுகள் மறைந்துவிட்டன. இயற்கை விளைவுகளின் ஒருமையை வற்புறுத்திப் பல துறைகளையும் ஒன்ருக்கி அவற்றிலிருந்த சிக்கல்களை நீக்கி அவை முன்னேற ஐன்ஸ்டைனின் சார்புக் கொள்கை (உறவு தத்துவம்) உதவியது. "கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு" என்ற மூதுரையை விஞ்ஞானிகளுக்கு அறிவுறுத்தியதும் அந்த மகா மேதையின் சார்புக் கொள்கைதான்.

நமக்கெல்லாம் கற்பூரத்தின் மணம் தெரியும். எனினும், காற்றோடு கரைந்து போகும் அந்தப் பொருள் எங்கு எப்படி உண்டாகிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

# கற்பூரம்

○

மு. அருணசலம்

நம் நாட்டில் கற்பூரமானது அனாதி காலமாக உபயோகத்தில் இருந்து வந்துள்ளது. "கருப்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ, திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?" என்று ஆண்டாள் சுமார் ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன் பாடுகிறாள். இறை வழிபாட்டில் கற்பூரத்துக்குப் பிரதான இடம். ஆனால் சமீப யுத்த காலத்தில் கற்பூரம் கிடைக்காமல், திருப்பதி முதலான பிரபல தேவஸ்தானங்களிலெல்லாம் கஷ்டம். நெய்த்திரி போட்டு ஏற்றித் தீபம் காட்டி வழிபட்டார்கள்.

எனவே, இக் கற்பூரத்தின் வரலாற்றைச் சிறிது நாம் அறிவது பொருத்த முடையது.

கற்பூரம் என்பது ஏலத்தின் இனத்தைச் சேர்ந்த நடுத்தர உயர முள்ள சிறு மரம். சுமார் 40 அடி வளரக்கூடும். இதற்குத் தாயகம் சீனு, ஜப்பான் முதலிய நாடுகளும், போர்மோஸா தீவும். விசாலமான தோட்டங்களில் இம்மரம் அழகுக்காகவே பயிரிடப்படுகின்றது. பெரும்பாலும் விதைபோட்டே மரம் உண்டாகிறது. ஓர் அவுன்ஸ் எடைக்கு 100 விதை இருக்கும். விதை போடும் காலம் புரட்டாசி மாதம். எல்லா விதையும் முளைப்பதில்லை. முளைக்க நான்கு மாதம் வரை ஆகும். வேர்க்கிளைகளும் பயிராவதுண்டு. மற்றப் பதியன் பயிராகாது. சில சமயம் விதையை வெந்நீரில் ஊறவைத்து ஊன்றுவதும் உண்டு. அதனால் அனுகூலமாகவும் இருக்கும். விதையிலிருந்து முளைத்த கன்றுகளை தனித்தனி சிறு தொட்டிகளில் ஒரு வருஷ காலம் வளர்த்துப் பின் நடலாம்.

கற்பூரமரம் பயிரிடுவது பொதுவாக அதிலிருந்து கிடைக்கும் கற்பூரத்திற்காக. இதன் பொருட்டு கன்றை நீளத்திலும், அகலத்திலும் 6 அடிக்கு ஒன்றாக நடுவார்கள். கன்றை அதிக உயரம் வளர விடாமல் 5 அடியோடு கத்தரிப்பது வழக்கம். 3, 4, வருடத்தில் கத்தரிக்கலாம். கத்தரித்த நுனிக்கிளை, கொழுந்து, தண்டு, இலை, பட்டை முதலியவற்றை நீரிற் காய்ச்சி ஆவியை வடிகட்டும் போது கற்பூரம் கிடைக்கிறது. புதிதாகக் கத்தரித்த கிளைப் பகுதிகள் அரை அடி அல்லது ஒரு சாண் இருக்கலாம். இதில் 2 சதவீதம் கற்பூரமும்,

ஏறக்குறைய மூன்றிலொருபங்கு கற்பூரத் தைலமும் கிடைக்கும். சாதாரணமாக 3 மாதத்திற்கு ஒரு முறை கத்தரிப்பதுண்டு. கத்தரித்த கிளை முதலியன ஒரு மரத்தில் ஒரு தடவைக்கு 20 பவுண்டு வீதம் தேறும். இப்படியாக, ஒரு ஏகராவில் வருஷத்திற்கு 120 பவுண்டிற்குக் குறையாத கற்பூரம் கிடைக்கும்.

மரத்தில் பலவகைகள் உண்டு. சில வகைகள் எண்ணெய் மட்டுமே தரும். இவற்றால் லாபம் குறைவு. சில வகைகள் கற்பூரம், தைலம் இரண்டும் தரும். இவையே பயிரிடத் தக்கவை.

யுத்த காலத்தில் கற்பூரத்தின் உபயோகம் மிகவும் அதிகம். செல்லுலாய்ட், புகை யில்லாத வெடி மருந்துகள், சில கிருமி நீக்க மருந்துகள் ஆகியவற்றைச் செய்ய கற்பூரம் அதிகத் தேவை. ஆதலால் நல்ல கற்பூரத்திற்கு எப்போதுமே கிராக்கி யுண்டு. பிரதான உற்பத்தி தேசமாகிய போர்மோஸா தீவு ஜப்பானியர் வசம் ஆன பிறகுமேலே நாட்டாருக்குக் கற்பூரம் இல்லாத கஷ்டம் அதிகமாயிற்று.

'டர்பன்டைன்' எனச் சொல்லுகின்ற கற்பூரத் தைலத்திலிருந்து செயற்கையாகக் கற்பூரம் செய்கிற முறைகளும் உபயோகத்திற்கு வந்து விட்டன. ஆனல் டர்பன்டைன் தைலம் தரும் மரங்கள் பயிராவதும் போர்மோஸா முதலிய தீவுகளிலானதால் செயற்கைக் கற்பூரப் போட்டி அதிகமாக வளரவில்லே. சுதுர வில்லையா யிருந்த கற்பூரம் முழுமையும் செயற்கைக் கற்பூரம்.

கற்பூரத்திற்குரிய குணங்கள் முக்கியமானவை. காரமான நறுமணம் அதற்குண்டு. இதைக் கிருமிகளைக் கொல்லுவதற்கு துணிகளுக்கிடையில் வைக்கின்றார்கள். கற்பூரப் புகை அந்துப் பூச்சி, கரப்பான், பாச்சை, எழுத்தாணி இராமபாணம் முதலிய பூச்சிகள் அண்டாமலும், கொசு முதலியன வராமலும் செய்யும்.

✲

## அதுவும் போச்சு !

அமெரிக்காவில் பிராக்டன் என்னும் ஊரிலுள்ள ஜோஸப் பிரீமென் என்பவரின் நாய், வீட்டில் திருடர்கள் வந்து திருடும்போது நன்ருகத் தூங்கிவிட்டு, போலீஸ்காரர்கள் வீட்டைச் சுற்றிப் பார்க்க வந்தபோது அவர்களை வீட்டுக்குள் வரவிடாமல் குரைத்ததாம்.

சிகாகோ நகரில் சாட்விக் என்பவர் தம் வீட்டில் களவு போனதை ஒரு சார்ஜண்ட்டிடம் சொல்லிக்கொண் டிருந்தார். சார்ஜண்ட் அவரைப் பார்த்து, "நீங்கள் ஒரு நாய் வைத்துக்கொள்ளுவதுதானே ?" என்ருர்.

"வைத்திருந்தேன். அதையும் திருடிக்கொண்டு போய்விட்டார்கள்" என்ருர் சாட்விக்.

—என். ஒய். எச். ட்ரிப்யூன்

# இந்தியாவும் சீனவும்

**
*

பி. ஸி. பாக்சி

சீனவுக்கும் இந்தியாவுக்கும் உள்ள தொடர்புகள் சரித்திர சம்பந்தமானவை. பிரம்மாண்டமான ஜனத்தொகை கொண்ட இந்த இரு நாடுகளைப்போல, உலகில் எந்த இரு நாடுகளும் இத்தனை நெருங்கிய கலாசாரத் தொடர்பைக் கொண்டதில்லை. இந்தியாவும் சீனவும் பண்ணிக் கொண்ட சிந்தனைப் பரிவர்த்தனையைப்போல் உலகில் எந்த நாடுகளுமே தம்முடைய கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டதில்லை. இந்தப் பரிவர்த்தனைத் தொடர்பு கிறிஸ்து காலத்துக்கு முன்பிலிருந்தே இருந்து வந்திருக்கிறது. இந்திய 'நாட்டு எல்லையில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்கள் இந்த இரு பெரும் நாடுகளின் பந்தத்தை உண்டாக்கிவிட்டன. மத்திய ஆசியாவின் நாடோடி மக்கள், சித்தியர்கள், யூ—சிகள் முதலிய மக்கள் இந்தக் காலத்திலேதான் இந்திய பூமிக்குள் குடியேறி, இந்திய நாகரிகத்தை மேற்கொண்டு, இந்தியக் கலாசார, மதக்கோட்பாடுகளைச் சீன தேசதில் பரப்பும் போதகர்களாக விளங்கினர்கள்.

கி. மு. முதல் நூற்ருண்டின் இறுதியில், யூ-சி நாடோடிகளின் ஒரு பிரிவினரான குஷானர்கள் இந்திய மத நூல்களையும், புத்த விக்ரகங்களையும தமது பிக்ஷுக்களின் மூலம் சீனத்துக்கு அனுப்பி வைத்தார்கள். குஷானர்கள் புத்தக் கோட்பாடுகளில் பெரும் நம்பிக்கை கொண்டவர்கள்; ஆகவே, புத்தமதக் கோட்பாடுகளைச் சீனத்துக்கும், மத்திய ஆசியாவுக்கும் பரப்ப ஆசைப்பட்டார்கள். இதன் காரணமாக, இமயமலைக்கு அப்பாலும் இந்திய பிக்ஷுக்களின் தொடர்பு பரவலாயிற்று.

இந்தக் காலத்தில் இந்தியாவுக்கும் சீனவுக்கும் தரை மார்க்கமாக, ஒரு பாதையும் இருந்தது. இந்தப் பாதைவடமேற்கு இந்திய எல்லைப்புறத்திலிருந்துதொடங்கி, காபூல் நதியின் பள்ளத்தாக்கு வழியாக, ஹிந்துகுஷ் மலையைத் தாண்டி, பாக்டீரியா நாட்டுக்கு (தற்போது பால்கன்) சென்றது. பாக்டீரியாவிலிருந்து இந்தப் பாதை இரண்டாகப் பிரிந்துவிட்டது. ஒன்று கிழக்கு முகமாகத் தொடங்கி, பாமீர் பீடபூமி வழியாக, காஷ்கார் நாட்டுக்கும், மற்றொன்று வடக்கு முகமாகத் தொடங்கி ஆக்ஸஸ், ஜகார்டீஸ் முதலிய மலைத் தொடர்களைக் கடந்து, சோக்டையன, இசிக்குல் வழியாக, உச்-டர்பனுக்கும் சென்றன. காஷ்காரிலிருந்து சீனத்துக்கு இரண்டு பாதைகள் சென்றன. ஒன்று தக்லமாகன் பாலைவனத்தின் தென்புறமாக, கோட்டான், டாண்டன், உல்லிக், ஸெர்ஸன், மிரான் முதலிய இடங்களின் வழியாக, லாப்னர் பிரதேசத்துக்

கீழ்த் திசை நாடுகளிலேயே இந்தியாவும் சீனவும்தான் தலை சிறந்தவை. இந் நாடுகளுக்கிடையே உள்ள கலாசார ஒட்டுறவைத் தெரிந்து கொள்வது அவசியம். இந்தக் கட்டுரை ஏஷியாடிக் டைஜஸ்டில் வெளி வந்ததன் சாரம்.

குச் சென்றது. மற்றொன்று, வடதிசையாக, உச்டர்பன் வழியாகச் சென்று, சோக்டையன பிரதேசத்துப் பாதையோடு சங்கமித்தது. உச்டர்பனிலிருந்து இந்தப் பாதை மீண்டும் கீழ்த் திசையாகச் சென்று, குஷா, காரஷார், டர்பான் முதலிய ராஜ்யங்களின் வழியாக, சீனம் சென்றது. தெற்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் வந்த பாதைகள் சீன எல்லைப்புறமான யூமென்குவான் பக்கத்தில் சந்தித்தன.

கிறிஸ்து சகாப்தத் தொடக்கத்திலிருந்து, இந்திய பிக்ஷுக்கள் இந்தப் பாதைகளின் வழியாகவே சீனத் தலைநகருக்குச் சென்றார்கள். இந்தியாவின் முதல் அறிஞர்களான காச்யப மதங்கரும், தர்மரக்ஷகரும் மிங்—டி அரசனின் ஆளுகைக்குள் இருந்த சீனத் தலைநகர் லோயாங்குக்குச் சென்றனர். அவர்களின் பேரால் சீனுவில் கட்டப்பட்ட பேர—மாசி (வெள்ளைக் குதிரை மடாலயம்) என்ற மடாலயம்தான் முதன் முதலில் கட்டிய புத்த மடாலயமாகும். இந்த மடாலயந்தான் இந்திய சீனக் கலாசார ஒட்டுறவுக்கு இரண்டு மூன்று நூற்றாண்டு காலமாகக் கேந்திர பீடமாக விளங்கி வந்தது.

புத்தமதம் சீனுவெங்கும் பரவப் பரவ, பற்பல மடாலயங்களும் கட்டப்பட்டன. அந்தக் காலங்களில் நாங்கிங்கும், ச்யாங்—ங்கான்னும்தான் இந்தக் கலாசாரக் கலப்புக்கு முக்கிய ஸ்தானங்களாக விளங்கின.

இந்திய சீனத் தொடர்புக்குரிய கடல்மார்க்கமான பாதை நான்காம் நூற்றாண்டுத் துவக்கத்தில்தான் உபயோகத்துக்கு வந்தது. இந்தியாவுக்கு வந்த பாஹியன் சீனத்துக்குத் திரும்பும் பொழுது, கடல் மார்க்கமாகவே சென்றார். இந்திய அறிவாளிகளும் இந்தப் பாதையை விரைவில் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆகவே, தெற்குச் சீனத்தில் புத்தமத ஸ்தாபனங்கள் பெரிதும் வளர்ந்தன. நாங்கிங் நகரந்தான் இதற்கெல்லாம் தலைமைப் பீடமாக விளங்கியது.

அது முதற்கொண்டு, டா'ங் காலத்தின் முடிவுவரை, இந்திய போதகர்கள், லோயாங், ச்யாங்-ங்கான் முதலிய இடங்களுக்கு, மத்திய ஆசியாப் பாதை மூலமாகவும் நாங்கிங்குக்குக் கடல் மார்க்கமாகவும் சென்றார்கள். சீனத்துத் தத்துவார்த்திகளுடன் கலந்து பழகி, புத்தமத சித்தாந்தங்களைச் சீனமொழியில் தர்ஜுமா செய்து புத்தமத தத்துவங்களை விளக்கிக் கூறினார்கள்.

இந்திய சீனத் தொடர்பின் ஆரம்ப காலத்திலேயே, சீன போதகர்கள் இந்திய அறிஞர்களோடு பழகி, இந்தியக் கலாசாரத்தையும் சீனத்துக்கு இறக்குமதி செய்யத் தொடங்கிவிட்டனர். பார்த்தியன், சித்தியா, சோக்டையன், மத்திய ஆசியா முதலிய நாடுகளின் புத்த பிக்ஷுக்கள் இந்தப்பணியில் கி.பி. இரண்டு மூன்றும் நூற்றாண்டில் தீவிரமாக இறங்கினர். பார்த்திய பிக்ஷுவான ங்கான்-ங்சே-கோ, ஸோக்டைய பிக்ஷுவான காங் ஸெங்ஹூ, சித்திய பிக்ஷுவான சி-கீன் போன்றவர்கள் இந்திய பிக்ஷுக்களையும்விடத் தீவிரமாக உழைத்தார்கள். அவர்கள் இந்தியாவிலுள்ள புத்தமத சாஸ்திரங்களைச் சீனுவுக்குக் கொண்டு போய் அவற்றை சீனத்தில் மொழி பெயர்த்து உதவினார்கள். இவர்கள் போக, பல்வேறு கலப்பு

ஜாதியினரான பிக்ஷுக்களும் இந்தப் பணியில் உழைத்தனர். மூன்றாம் நூற்றாண்டு வாக்கில் சீனாவில் உழைத்துவந்த தர்மரக்ஷகர் என்ற பிக்ஷு சித்தியருக்கும் இந்தியருக்கும் பிறந்தவர்; அவர் பிறந்தது மத்திய ஆசியா. குமாரஜீவன் என்ற பிரபல பௌத்த பிக்ஷு குஷநாட்டு இளவரசிக்கும் காஷ்மீர் நாட்டுப் பிரபலஸ்தர் ஒருவருக்கும் பிறந்தவர். குஷநாட்டில் அவர் பிறந்த போதிலும், அவர் கல்வி கேள்வி பெற்றதெல்லாம் காஷ்மீரத்தில் தான். அங்குதான் அவர் சிறந்ததொரு சம்ஸ்கிருத பண்டிதராக விளங்கினார். இவர் சீன தேசத்தில் நாலாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை சேவை செய்து வந்தார்.

ஆரம்பகாலத்தில் இந்தியசீனக் கலாசாரக் கலப்பில் பெரிதும் பங்கெடுத்தது காஷ்மீர் தேசந்தான். 4-ம், 5-ம் நூற்றாண்டுகளில் காஷ்மீரத்திலிருந்து சீனம் சென்ற பிரபல அறிஞர்கள் சங்கபூதி, புண்யபத்ரர், புத்தியாஸஸ், குணவர்மன், தர்மயாஸஸ் முதலியவர்களாவர். குணவர்மன் ஒருவர் மட்டுமே கடல் மார்க்கமாகச் சீனா சென்றார்; ஏனையோர் தரை மார்க்கமாகவே சென்றனர். இந்தக் காலத்தில் காஷ்மீர் நாடு சம்ஸ்கிருத கலாபவனமாகவும், பௌத்த பீடமாகவும் விளங்கியது. ஆகவே, சீனதேசத்து பௌத்த அறிஞர்கள் காஷ்மீர் நாட்டுச் சம்ஸ்கிருத சாதனைகளைப் படிக்கத் தொடங்கினார்கள். காஷ்மீர அறிஞர்கள், தமது சீனச் சீடர்களோடு கலந்து மொழிபெயர்த்த இந்திய நூல்கள், இன்றும் சீனத்து பௌத்த மதச் செல்வங்களில் நிலைத்து நிற்கின்றன.

இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்தும் சீனத்துக்கு அறிஞர்கள் சென்றார்கள். அப்படிச் சென்றவர்களில் தர்மக்ஷேமா என்பவரும் குணபத்ரர் என்பவரும் மத்திய இந்தியா (மத்திய தேசம்)விலிருந்தும், பாரமர்த்தர் உஜ்ஜயினியிலிருந்தும், மோக்ஷசேனர், ஜீனகுப்தர், ஜீனயஸாஸ் முதலியவர்கள் வடமேற்கு இந்தியா (காந்தாரம்) விலிருந்தும் சென்றார்கள். இந்த அறிஞர்களெல்லாம் சீனத்தில் சீனமக்களுடனே வாழ்ந்து, சேவை செய்து, அங்கேயே மறைந்தார்கள். அவர்கள் செய்துவைத்த சேவை இன்றும் அழியாமல் சீனத்தில் பாதுகாக்கப் படுகிறது.

இதன்பின் சீன அறிஞர்களில் பலர் இந்திய மண்ணுக்கு வர ஆரம்பித்தனர். பௌத்த க்ஷேத்திரங்களைத் தரிசனம் செய்வதற்காக மட்டுமல்லாமல், பௌத்த மத ஆராய்ச்சிக்காகவும் வந்து சேர்ந்தார்கள். இப்படி வந்தவர்களில் பாஹியனின் பெயரே பிரபலமாய் விளங்குகிறது. நாலாம் நூற்றாண்டு இறுதிக் காலத்தில் பாஹியன் மத்திய ஆசியப் பாதை வழியாகப் புறப்பட்டு வந்தார். வரும் வழியில் வட இந்தியாவின் பிரபல க்ஷேத்திரங்களை யெல்லாம் தரிசனம் செய்துவிட்டு, 14 ஆண்டுகளுக்குப் பின்னர் கடல் மார்க்கமாக, சீனா திரும்பினார். பாஹியன் தமது காலம் முழுவதையும், சம்ஸ்கிருத இலக்கியங்களையும், பௌத்தமத சாஸ்திரங்களையும் கற்பதிலேயே செலவிட்டார். சம்ஸ்கிருதத்திலிருந்து சீன பாஷையில் மொழி பெயர்க்கும் அளவுக்கு பாஹியன் பாண்டித்தியம் பெற்றிருந்தார்; அதற்கு அத்தாட்சியாக இன்றும் அவருடைய மொழி பெயர்ப்புகள் நிலைத்து நிற்கின்றன.

இந்திய சீனக் கலாசாரத் தொடர்பு 7-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து 10-ம் நூற்றாண்டு முடிவுவரை அரசாண்டு வந்தடா'ங்வம்சத்தாரால்மேலும் அதிகரிக்கப் பட்டது. சீனசரித்திரத்திலேயே டா'ங் வமிசத்தாரின் ஆட்சியே பொற்காலமாகச் சிறந்து விளங்கியது. இந்தியாவோடு அவர்கள் கொண்ட அரசியல் கலாசாரத் தொடர்புகளும் இந்தக் காலத்திலேதான் மிகவும் நெருங்கியிருந்தன. புத்த மதமும் இந்தக் காலத்தில் சீன தேசத்தில் பிரபல மடைந்தது. சீன நகரங்களில் பல்லாயிரக் கணக்கான இந்தியபிக்ஷுக்களும் வியாபாரிகளும் அறிஞர்களும் குடி வாழ்ந்து வந்தனர். இந்தக் காலத்தில் சீன நாட்டில் உழைத்து வந்த பிரபல அறிஞர்களில் நாலந்தா வாசியான பிரபாகரமித்ரா, சுபகர சிம்மா, தென்னிந்தியாவாசியான மோகிருதி, மத்தியதேச வாசியான வஜ்ரபோதி, அவருடைய சிஷ்யரும் ஈழநாட்டு பிராமணக் குடிப்பிறப்பினருமான அமோக வஜ்ரா முதலியவர்கள் முக்கிய மானவர்கள்.

இந்தியாவில் அப்போது நாலந்தா சர்வ கலாசாலை கீழ்த்திசை கலா நிலையங்களில் சிறந்ததாக விளங்கிவந்தது. நாலந்தா சர்வ கலாசாலை 5-ம்நூற்றாண்டுக் காலத்தில், குப்த அரசர்களின் பேராதரவால் தோன்றி, இந்தியாவிலுள்ள பௌத்தமதப் போதக சாலைகளில் பெரிதாக நின்று நிலவியது. தூரப் பிராந்தியங்களி லிருந்தும், சுற்றுப் புறங்களிலிருந்தும் எண்ணிறந்த அறிஞர்களும், மாணவர்களும் இங்கு வந்து புத்த போதம் பெற்று வந்தார்கள்.

டா'ங் வமிசாவளிக் காலத்திலும், அதன்பின்னும் நாலந்தா எண்ணிறந்த சீன அறிஞர்களைத் தன் பால் ஆகர்ஷித்தது. நாலந்தாவிலேயே குடி வாழ்ந்து உழைத்து வந்த சீன அறிஞர்களின் தொகை கணக்கிலடங்காது. அந்த அறிஞர்களில் தலை சிறந்தவர் ஹ்யூன் - ட்ஸியாங். ஹ்யூன் - ட்ஸியாங் கி. பி. 629-ம் வருஷம் சீனாவை விட்டு கிளம்பி, இந்தியாவில் 16 வருஷ காலமாக சுற்றுப் பிரயாணம் செய்தார். தென்நாட்டிலும் வடநாட்டிலும் பல க்ஷேத்திரங்களையும், நகரங்களையும இவர் பார்வையிட்டார். ஹர்ஷவர்த்தன ராஜனுடன் நேரடியான தொடர்பு கொண்டு அவன் மூலம் சீனத்துக்கும் இந்தியாவுககும் ராஜீயத் தொடர்பு ஏற்படுத்தவும் வழி செய்தார். நாலந்தா நகரின் தலைசிறந்த அறிவாளியான சிலாபத்ர யோகியாருடன் சேர்ந்து ஐந்து வருஷ காலமாக, புத்தமத தத்துவத்தைக் கற்றுக்கொண்டார், ஹ்யூன்—ட்ஸியாங். பிறகு அவர் ஏராளமான புத்தமத சாஸ்திரச் செல்வங்களோடு சீனம் சென்று, பல நூல்களை சீன மொழியில் மொழி பெயர்க்கவும் செய்தார். சீன நாட்டினரிடையே இவர்தான் தலை சிறந்த சம்ஸ்கிருத பண்டிதர் என்று போற்றப்படுபவர்; இவருடைய பாண்டித்தியத்துக்குச் சாட்சியமாக, இவருடைய புத்தமத சாஸ்திரங்கள் இன்றும் நிலைத்திருக்கின்றன.

11-ம் நூற்றாண்டின் போது, சீன—இந்தியக் கலாசாரத் தொடர்புகள் முடிவுக்கு வந்தன. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் வியாபாரத் தொடர்புகள் வளர்ந்தன. இந்தத் தொடர்புகளில்

முக்கிய பங்கெடுத்துக் கொண்டது தென்னிந்தியாவே. இந்த வியாபாரத் தொடர்பு பல நூற்றுண்டுக் காலமாக நடந்தேறியது. ஆனால் கலாசாரத் தொடர்புகள் முற்றிலும் அறுந்துவிட்டன. இப்படித் தொடர்பற்றுப் போனதற்குக் காரணம், இந்தியாவிலும் சீனுவிலும் நேர்ந்த அரசியல் மாறுதல்களே. மத்திய ஆசியாவின் மீது செலுத்தி வந்த ஆதிக்கத்தைச் சீன இழந்துவிட்டது; அதன் காரணமாக, சீனுவுக்கும் இந்தியாவுக்கும் தொடர்புச் சங்கிலியாக இருந்த ரோட்டுப் பாதைகள் அடைபட்டுப் போயின.

எனினும் பண்டைச் சேவை பயனற்றுப் போய்விடவில்லை. ஆயிரம் வருஷ காலத்துக்கு மேலாகவே, இந்த இரும்பெரும் நாடுகளுக்குள்ளே இயங்கி வந்த கலாசாரத் தொடர்பு மக்கள் மனசிலே நன்ருக ஊறிக் கலந்து போய்விட்டது. சீனு தனது பண்டைத் தொடர்பின் சாசனங்களைப் பத்திரப் படுத்தி வைத்திருந்தது. சீன மொழியிலுள்ள இந்திய புத்தமத நூல்களின் மொழிபெயர்ப்புக்களும் சாரங்களும், இந்தக் கலாசாரத் தொடர்பைஇன்றும் வலியுறுத்துகின்றன. இந்தியா தனது பண்டை இலக்கியச் செல்வங்களில் பலவற்றை இழந்துவிட்டது. எனினும், அந்தப் பண்டைச் செல்வங்களை மீண்டும் அடைவதில் சீனுதான் பெரிதும் உதவ முடியும்.

இந்தியக் கலப்பும் ஆதிக்கமும் சீனுவில் மத சம்பந்தமாக மட்டும் ஏற்படவில்லை. சீனர்கள் இந்தியாவின் கலை,மனைச் சிற்பம், சங்கீதம், விஞ்ஞானம் முதலியவற்றையும் ஏற்று, தங்கள் நாகரிகத்தை மேம்பாடு அடையப் பயன்படுத்திக் கொண்டார்கள். பண்டைக் காலச் சீனக் கலைப் பொருள்கள் மரத்திலும், வெண்கலத்திலும், மரகதத்திலுமே அமைந்திருந்தன. ஹன் வமிச பரம்பரை தொட்டு, சீனக் கலைஞர்கள் கல்லிலும் தமது எண்ணங்களை வடிக்க ஆரம்பித்தார்கள். சீனத்துச் சிறபங்களையும், சுவர்ச் சிற்பங்களையும் கவனித்துப் பார்த்தால், கல்லுளி வேலைகளில் அவர்களுக்குத் திறமை உருவாகவில்லை என்பதை உணர்ந்து கொள்ளலாம். கலைக்குரிய சாதனப் பொருள்தான் புதிதே ஒழிய, கலைஞர்கள் பேரனுபவம் பெற்றவர்கள்; சிறந்து வளர்ந்த கலை மரபுகளைக் கையாள்பவர்கள். ஆகவே, இந்திய நாட்டுப் பௌத்தக் கலைகள் அவர்களை அடைந்தபோது, அவர்களுடைய சக்திக்கு மீறியதாக இருக்கவில்லை. இந்திய நுணுக்கங்கள் லகுவில் சீன மேதைகளின் மனசில் பிடிபட்டன. ஆகவே இந்த இரண்டு கலைகளின் சங்கமத்தால், ஒரு புதுக் கலை— இந்திய சீனக் கலை ஏற்பட ஆரம்பித்தது.

இப்படிப்பட்ட சீனக் கலா க்ஷேத்திரங்களில் முக்கியமானவை மூன்று: டுன் ஹுவாங், யுனகாங், லாங்மென். டுன் ஹுவாங் மேற்கு எல்லைப் புறத்தில் கீழ்த் திசை மேல்திசை நாடுகளின் சந்திப்பில் இருந்தது. டுன் ஹுவாங்கின் குகைச் சித்திரங்கள் வீ வம்ச காலத்திலிருந்து தொடங்கி வைத்த பழங் கலைப் பெருமைகளை எடுத்துக் காட்டுகின்றன. இந்தச் சித்திரங்கள் டா'ங் வமிச காலம் வரை வளர்ந்து வந்தன. ஆகவே, இந்தியக் கலைமரபுகள் சீனக் கலை

ஞர்களின் மூலமாக எப்படி உருவாயிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. யுன்காங்கும் வீ வம்சகாலத்ததுவே. லோயாங்குக்கு அருகிலுள்ள லாங்மென்னும் அதே காலத்ததே. இந்த இரண்டு இடங்களிலுமுள்ள புத்தக் குகைச் சிற்பங்கள், இந்தியக் கலைகளின் ஆதிக்கத்தை நன்ருக எடுத்துக்காட்டுகின்றன.

சீனவிலுள்ள பௌத்த மதச் சிற்பங்கள் இந்திய மரபின் ஆதிக்கம் பெற்றவை. அடுக்கடுக்காக மாடி கட்டி உண்டாக்கும் விஹாரங்களே இந்தியக் கலையின் வழிப் பிறந்தவையே என்று அறிஞர்கள் கருதுகிருர்கள். இம் மாதிரியான விஹாரங்கள் இந்தியாவிலும், மரச் செழிப்பும், சீதோஷ்ண நிலையும் சாதகமாக இருக்கும் இடங்களில் காணப்படுகின்றன. விஹார மணிச் சிற்பங்களின் ஒரு முறை சீனவிலும் ஜப்பானிலும் "இந்திய மணிச் சிற்பமுறை" யென்றே அழைக்கப்படுகிறது. வீ வம்ச காலத்தில் இந்திய இணக்கம் நெருக்கமாக இருந்த ஷான்—ஸி மாகாணத்திலேதான் இம் மாதிரியான விஹாரங்கள் காணப்படுகின்றன.

ஸுயி, டாங் வம்சகாலங்களில் (6—10 நூற்ருண்டுகள்) இந்திய சங்கீதமும் சீன நகரங்களில் பிரபலமடையத் தொடங்கியது. அரசாங்க விருந்துகளின்போது, இந்திய சங்கீதக் கச்சேரிகளே பெரும்பாலும் ஏற்பாடு செய்யப்பட்டன. இதன் காரணமாக, சிற்சில இந்திய சங்கீத வழிகளும், தந்தி வாத்தியங்களும், நாட்டிய முறைகளும் சீனர்களால் கையாளப் பெற்றன.

உண்மையில் சீனச் சரித்திராசிரிகள் சொல்லும் ஒரு விஷயத்தைக் கொண்டு பார்த்தால் இந்திய ஆதிக்கம் அங்கு எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்பதை உணர்ந்து கொள்ளலாம். காட்சு (581—595) என்ற மன்னன் இந்திய சங்கீதத்துக்குத் தடை விதிக்கும் அளவுக்கு இந்திய சங்கீதம் பரவிவிட்டது. ஆனல், அவனுடைய முயற்சி பலிக்கவில்லை. அவனுடைய வாரிசாக வந்தவனுக்கு இந்திய சங்கீதத்தில் அபார மோகம்; ஆகவே அவனுடைய போஷிப்பில் இந்திய சங்கீதம் மேலும் வளர்ந்தது!

இந்திய வான சாஸ்திரமும் கணித சாஸ்திரமுங்கூட, சீனர்களைப் பெரிதும் ஆகர்ஷித்தது. டாங் காலத்தின்போது இந்திய வான்கலை வல்லார்களில் சிலரான கௌதமர், காச்யபர், குமாரர் முதலியவர்கள் அரசாங்க வான் கலைக் கழகத்தில் அரசனல் நியமனம் செய்யப் பெற்ருர்கள். இந்த ஆஸ்தான வல்லுனர்கள் புதிய பஞ்சாங்கங்களை வகுத்தார்கள். இந்தப் பஞ்சாங்கங்கள் இன்றும் சீனத்திலிருக்கின்றன. இந்திய கணித சாஸ்திர விதிகளும் சீனத்தில் மொழிபெயர்க்கப் பட்டன.

இந்தியாவுக்கும் சீனவுக்கும் பண்டைக்காலத்தில் மட்டுமல்ல, இன்றுங்கூட அந்தக் கலாசார ஒற்றுமை நிலவத்தான் செய்கிறது. இன்றைக்கும் சீன இலக்கியங்களின் கதியும், நமது கதியும் ஒரேவழியில்தான் செல்லுகின்றன. மதக் கோட்பாடுகள், உறவு தத்துவங்கள் எல்லாமே பரஸ்பரம் உறவுகொண் டிருக்கின்றன.

**புராதன காலத்தில் களவையும் கலையாகப் பாவித்துக் கற்று வந்தார்கள், தமிழில் களவுக் கலையைக் கூறும் மூல நூல் கிடையாது; ஆனால் சம்ஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்த்த கரவட நூல்கள் உண்டு. களவைக் கண்டுபிடிப்பதற்குப் பயன்படுமாறு களவுக் கலையைக் கற்றார்களாம். புராதன காலத்திய களவுக் கலையை விவரிக்கும் இந்த ருசிகரமான கட்டுரை சுதந்திராவில் வெளிவந்ததின் சாரம்.**

# களவுக் கலை

யு. வெங்கடகிருஷ்ண ராவ்

களவு ஒரு குற்றமாகக் கருதப் பட்டு வந்த போதிலும் அதை நம் முன்னோர்கள் ஒரு நுண்கலையாகவே மதித்து வந்திருக்கிறார்கள் என்பது 64 கலைகளில் களவையும் ஒன்றாக வைத்து, மன்னர்களும் மந்திரிகளும் அந்தக் களவுக் கலையைப் பயின்றார்கள் என்பதிலிருந்து தெரிகிறது. இந்தக் கலையை சௌப்திக பருவத்தில் அஸ்வத்தாமன் மிக சாதுர்யமாகக் கையாண்டதினால் இதன் பெருமை பன் மடங்கு அதிகரித்துவிட்டது.

களவைப் பெரும் குற்றமாக மதித்து கள்ளர்களுக்குக் கடுந் தண்டனை கொடுத்து வந்திருக்கிறார்கள். கிறிஸ்து காலத்துக்கு முன்னமேயே நம் வேதங்கள் களவைக் கண்டிப்பதில் சற்றுக் கடுமையாகவே இருந்திருக்கின்றன. அவ் வேதங்கள் களவு செய்வோருக்கு மரண தண்டனை கொடுக்கும்படி கூறுகின்றன. மரண தண்டனையிலும் தூக்கு போன்ற முறையில் இல்லாமல், கழுகு, காகம், நரி, ஓநாய் போன்ற பறவை மிருக இனங்களுக்கு இரையாகும்படி உயிருடன் விடவேண்டும் என்று கூறுகின்றன வேதங்கள். பிறகு வேதம் வகுத்தவர்கள் களவுக்குக் கொடுந் தண்டனையாகிய மரண தண்டனை கூடாது என்று தண்டனைகளின் தன்மையைக் குறைத்தனர். களவு செய்வதில் எந்த உறுப்பு ஈடுபட்டதோ அந்த உறுப்பை வாங்கி விட வேண்டியது. இந்தத் தண்டனை முறையினால் கள்ளர்கள் கையைத்தான் இழக்க நேர்ந்தது. களவில் கைதானே பெரும் பகுதி வேலையைச் செய்கிறது! இம் மாதிரி கொடிய முறையை அனுசரித்ததனால் களவுக் குற்றங்களும் குறைந்து விட்டன.

தண்டனைகள் அதிகக் கடுமையாகவே, கள்ளர்களும் தாங்கள் கையும் களவுமாக அகப்படாமல் இருக்க அரும்பாடு பட்டு புதுப் புது வழிகளில் தங்கள் தொழிலை நடத்த முயற்சி செய்தனர். ஆகவே பற்பல முறைகளைக் கையாளத் தொடங்கினார்கள்.

மிருச்ச கடிகம் என்ற சமஸ்கிருத நூலில் களவைப் பற்றிய

நுணுக்கமான விஷயங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. களவுத் தொழிலில் முன்னேற வழி சொல்லுவதோடு மட்டுமல்லாமல் இக்கட்டான நிலைமையைச் சமாளிப்பது எப்படி, கையுங்களவுமாகப் பிடிபட்டால் தப்பித்து ஓடுவது எப்படி என்ற விஷயங்களை மிக அழகாக எடுத்துரைக்கின்றது. திருடப்போகிறவர்கள் தொழில் முறைக்கு வேண்டிய கன்னக்கோல், போடவேண்டிய துவாரத்தை அளக்க அளவுக் கயிறு, விட்டில் பூச்சி போன்ற ஒருவிதமான விளக்குப் பூச்சி முதலியவற்றுடன் செல்ல வேண்டுமாம். விளக்குப் பூச்சி எதற்குத் தெரியுமா? கன்னம்போட்டாய் விட்டது. ஆனால் வீட்டினுள் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. எப்படிப் போவது? விளக்கை அணைக்க வேண்டும். இந்தப் பூச்சிகளை விட்டால் அவை அந்த விளக்கில் விழுந்து விளக்கை அணைத்துவிடுகின்றன. பாவம், தியாகம் என்றால் இந்தப் பூச்சிகள் செய்வதுதான் சரியான உயிர்த் தியாகம்! இதனால் வீட்டினுள்ளவர்கள் தூங்குகிறார்களா விழித்துக் கொண்டிருக்கிறார்களா என்றும் கண்டுபிடித்துவிடலாம். அணைந்த விளக்கை மீண்டும் ஏற்றாமல் இருந்துவிட்டால் வீட்டார் தூங்குகிறார்கள் என்ற முடிவுக்கு வரவேண்டியதுதான்.

வீட்டினுள் இருப்பவர்கள் தூங்காமல் இருந்தால் தூங்கவும் வைப்பார்கள் திருடர்கள். மந்திரம் ஓதி மனோவலிமையினால் வீட்டிலுள்ளவர்களை மயக்கி ஆழ்ந்த நித்திரையில் ஆழ்த்திவிடுவார்கள். அல்லது தாங்கள் வைத்திருக்கும் 'சொக்குப் பொடி'யைத் தூவவேண்டியதுதான் தாமதம், உடனே நல்ல தூக்கம் தூங்க ஆரம்பித்துவிடுவார்கள்.

இவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் சமயத்தில் அகப்பட்டுக்கொண்டு விட்டால் தப்பிக்கவேண்டுமே அதற்கு 'யோகரோசனை' என்கிற மாந்திரிகத் தைலத்தை உடம்பில் பூசிக் கொள்ளுவார்கள். பூசிக்கொண்டால் பிறருக்கு அவர்களுடைய உருவமே கண்ணுக்குப் புலப்படாது. கத்தியினால் வெட்டினால் கூட வெட்டுப்படமாட்டார்கள்.

லோபிகளாக உள்ள பணக்காரர்கள் தங்களுடைய பணத்தைத் தரையில் புதைத்து வைத்துவிட்டு நிம்மதியாக இருப்பார்கள். இதையும் கண்டுபிடிக்க ஒரு தந்திரம் செய்வார்கள் இந்த அசகாய சூரர்களாகிய திருடர்கள். மாந்திரிக வித்து ஒன்று வைத்திருப்பார்கள். அதை அவர்கள் சந்தேகப்படுகிற இடத்தில் போடுவார்கள். அந்த இடத்தில் புதையல் இருந்தால் அந்த வித்து பளிச்சென்று மின்னும். அதிலிருந்து புதையலைக் கண்டுபிடித்துவிடுவார்கள்.

திருடர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வழிகளும் கூறுகிறது அந்தப் புத்தகம். எப்பொழுதும் முன் ஜாக்கிரதையாக எல்லாக் கதவுகளையும் தாழ்ப்பாள் போடாமல் திறந்து வைத்திருக்க வேண்டும். யாராவது வரும் சத்தம் கேட்டால் ஓடி மறைய 'லகு'வாக இருக்க வேண்டுமல்லவா?

திருடர்கள் எப்பொழுதும் தங்களுடைய அறிவைத் தீட்டி வைத்துக்கொண் டிருக்க வேண்டும். எந்தச் சமயத்தில் என்ன நடக்கும் என்பது தெரியாதல்

லவா? சமயோஜிதம் போல நடக்க வேண்டும். சந்தர்ப்பத்துக்குத் தகுந்த மாதிரி தங்களிடம் உள்ள கருவிகளைக் கொண்டே காரியத்தைச் சாதிக்க வேண்டும். மிருச்சகடிகத்தில் வருகிற 'சர்விலகா' என்பவன் திருடச் செல்லுகிறான். கன்னம்போடத் தொடங்குகிறான். துவாரத்தின் அளவை அளக்க அளவுக்கயிறு கொண்டுபோக மறந்துவிட்டான். என்ன செய்தான் தெரியுமா? தன்னுடைய பூணூலை எடுத்து துவாரத்தை அளக்க உபயோகப்படுத்திக் கொண்டான். அந்தப் பூணூலைக் கொண்டு இரும்புப் பெட்டிகளையும்கூடத் திறக்கலாமாம்!

கனகசக்தி என்பவன் சுவரில் கன்னம்போட வழிகள் வகுத்துக் கூறுகிறான். சுவர்களின் தன்மைக்கேற்றவாறு, களிமண் சுவர், செங்கல் சுவர், கருங்கல் சுவர், மரச் சுவர் போன்ற பற்பல சுவர்களில் எப்படிக் கன்னம் போடுவது என்று விரிவாகக் கூறுகிறான். சுட்ட செங்கற் சுவரானால், செங்கற்களை ஒவ்வொன்றாக உருவி எடுத்துவிட வேண்டுமாம். களிமண் சுவர் என்றால் இலேசாகத் தண்ணீர் விட்டுக் கரைத்துவிடலாமாம்.

அர்த்த ராத்திரியில் 'பூச்சி பொட்டு' என்று பாராமல் காட்டு வெளிகளில் சுற்றுகிற திருடர்கள் விஷக்கடி மருந்து வைத்துக் கொள்ளவேண்டும். விரல்களில் தீண்டிவிட்டால் உடனே பூணூலை எடுத்து கொட்டு வாய்க்குமேலே இறுகக் கட்டிவிடவேண்டும். அப்படிச் செய்வதால் விஷம் ரத்த ஓட்டத்துடன் கலக்காமல் இருக்கும்.

திருட்டுத் தொழிலில் கூடப் பாவ புண்ணியத்துக்கு இடம் வைத்திருக்கிறார்கள்! பெண்களைத் துன்புறுத்தக்கூடாது; ஒழுக்க சீலர்களான மத்தியதர வகுப்பாரைக் கொள்ளையடிக்கக் கூடாது.

திருடர்கள் பூனைபோல் சத்தம் காட்டாமல் நடக்கவேண்டும்; பாம்பைப் போல் வயிற்றால் ஊர்ந்து செல்லவேண்டும்; மான் போல் துள்ளி ஓடவேண்டும்; வல்லூறைப் போலக் குறி தவறாமல் பொருளைக் கவர்ந்து செல்ல வேண்டும். தூங்குகிற மனிதனுடைய பலத்தை, பார்க்கிற ஒரு பார்வையிலேயே கண்டு பிடித்துவிட வேண்டும். தன் உருவை மாற்றிக் கொண்டு மாறு வேடத்தில் உலாவ வேண்டும். பல பாஷைகளையும் பல குரல்களில் பேசிப் பழக வேண்டும்.

'கிரந்தி பேதகாஸ்' என்று சொல்லப்படுகிறவர்கள் பணங்களை, முடிந்து வைத்திருக்கிறவர்களுக்குத் தெரியாமல் வெட்டியெடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். முடிச்சை வெட்டினவுடன் கண் மூடி கண் திறப்பதற்குள் மின் வெட்டென மாயமாய் மறைந்து விடுகிறவர்களுக்குப் 'பாதச்சராஸ்' என்று பெயர். தன்னந் தனியாகத் தனி வீடுகளில் திருடுகிறவர்களுக்கு 'ஐக்கரிகாஸ்' என்று பெயர்.

இக் காலத்திலுள்ள திருடர்கள் போல ஒழுங்கு தவறி நடக்க மாட்டார்கள் பழங்காலத்திருடர்கள். அவசியமேற்பட்டால் ஒழிய திருடமாட்டார்கள். களவையும் கலையென மதித்து அதைக் கற்றார்கள். கலை கலைக்காகவே என்ற நோக்கோடு களவைக் கற்று மறந்தார்கள்.

# பாரதி



# தர்சனம்

கு. அழகிரிசாமி

பாரதி தர்சனம் என்றால் பாரதி கண்ட தர்சனம் என்றும் பொருள்படும்; பாரதி நமக்குக் கொடுக்கும் தர்சனம் என்றும் பொருள்படும். பாரதி கண்ட தர்சனத்தில் என்னென்ன சீரிய லட்சியங்களெல்லாம் அடங்கியிருந்தனவோ, அந்த சீரிய லட்சியங்களின் முழுவடிமாகவே பாரதி இன்று நமக்குத் தர்சனம் அளிக்கிறார். ஆகவே பாரதி கண்ட தர்சனமும் பாரதி நமக்குக் கொடுக்கும் தர்சனமும் ஒன்றுதான். பாரதியை இந்த முறையில் தர்சிப்பதில் உள்ள பெருமை பாரதியை நேரில் கண்டு தர்சிப்பதில் கூட கிடையாது.

இன்று அரசியல் சுதந்திரம் பெற்றுவிட்டோம். ஆனாலும் பிரச்னைகள் ஓயவில்லை; மக்களின் கஷ்டங்கள் தீரவில்லை. என்றாவது இவை தீர்ந்தே ஆகவேண்டும். தேசம் நன்கு வளம்பெற்று, தேசத்தின் வளமெல்லாம் ஒரு சில கும்பலுக்குப் பறிபோய் விடாமல் பொதுமக்களுக்குப் பயன்படும் பொற் காலத்தையே பாரதியார் கனவுகண்டார். ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லாத இந்தியா, வீணில் உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்யும் இந்தியா—இது பாரதி கண்ட தர்சனம். வடமாலவன் குன்றத்திலிருந்து குமரி வரையில் பரவிய தமிழ்நாடு, 'சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம், வெறும் சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்' என்ற கூக்குரல் கேட்காத தமிழ்நாடு, தேமதுரத் தமிழோசையை உலகமெல்லாம் பரப்பி, பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் பெயர்க்கும் தமிழ்நாடு — இது பாரதி கண்ட தர்சனம்.

இந்த இந்தியாவும் இந்தத் தமிழகமும் மலராமல் இருக்கும் போது, பாரதியின் லட்சியத்துக்கு எல்லை கட்டுவது போலவும், பாரதியின் குரலை ஒடுக்குவது போலவும், இம்மட்டில் மக்கள் திருப்தி அடைந்து விடவேண்டும் என்று சொல்வது போலவும் பாரதியின் கனவு பலித்துவிட்டதாகச் சிலர் கருதுகிறார்கள். அத்துடன் பாரதியின் பாடல்கள் பரவுவதற்கு வழி செய்யாமல் பாரதியின் படத் திறப்புக்களில் மட்டும் கவனம் செலுத்துகிறார்கள் பிரமுகர்கள். வீரம் ததும்பும் பாரதி பாடல்களைத் தூங்கவைக்கும் தாலாட்டுப் பாடல்களாக்குகிறார்கள் பாடக சிரோன்மணிகள். இந்தக்காரியங்களால் பாரதியின் குரல் ஒடுங்கி விடுமோ என்ற பயம் உண்டாகக்கூடும். உண்மையில் இதனால் எல்லாம் பாரதியின் குரல் ஒடுங்கி விடப் போவதில்லை. பாரதியை யார் யார் எப்படிப் பயன் படுத்தினாலும், அவர் கனவு கண்ட இந்தியா, அந்த 'வானகம்' இங்கு தோன்றாமல் இருக்கப் போவதில்லை. ஏனென்றால் பாரதியின் குரல் அவ்வளவு வைரம் பாய்ந்த குரலாகவும், தர்மத்தின் குரலாகவும், இந்த தேசத்தின் குரலாகவும் இருக்கிறது.

---

இம் மாதத்தில் பாரதியார் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடினோம். பாரதியார் தினத்தன்று தோன்றிய ஒரு சிந்தனையே இக் கட்டுரை.




23-8-48-ல் சென்னை விமான நிலையத்தில் கவர்னர் ஜெனரல் ராஜாஜியை
கவர்னர் நை வரவேற்கிறார்

ராஜாஜி ராணுவ மரியாதையை ஏற்றுக்கொள்ளுகிறார்





படம்: என். ராமகிருஷ்ணா, மாயவரம்

மைசூர் அரசருடன் ராஜாஜி பவனி

சென்னை கோகுலம் கிராம நல உரிமைச் சங்கத்தில் ராஜாஜியும், ஸ்ரீமதி நையும்

படம்: பி. ரங்கநாதன், சென்னை





படம்: என். ராமகிருஷ்ண, மாயவரம்

மைசூரில் ராஜாஜி, மைசூர் அரசர் முதலியோர்

சுதந்திர தினத்தன்று டில்லி ஜம்மா மசூதியில் முஸ்லிம்கள் கூட்டத்தில் ராஜாஜி பேசுகிருர்





படம்: எஸ். பாலகிருஷ்ணன், கும்பகோணம்

அண்ணன்



படம்: எஸ். கந்தசாமி, சேலம்

தம்பி



படம்: பி. ரங்கநாதன், சென்னை

சென்னை, கோகுலம் கிராம நல உரிமைச் சங்கத்தில் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் மேன்மை தங்கிய ச. ராஜகோபாலாச்சாரியார்

# காந்திஜியும் லெனினும்

கிளேர் ஷெரிடன்

1920—ம் வருஷம் லெனினுடைய உருவச் சிலை அமைக்கும் பொருட்டு நான் ருஷ்யாவில் க்ரெம்லின் என்ற அவருடைய வாசஸ்தலத்திற்குச் சென்றேன். அவரும் காந்தியைப் போலவே, சும்மா உட்கார மறுத்துவிட்டார். இஃது ஒரு விசித்திரமான ஒற்றுமை. இவ்விருவரும் பலாத்காரத்தை எவ்வளவு தூரம் பிரயோஜனப்படுத்திக் கொள்ளலாமென்ற வகையில் வேறு பட்டவர்களாயிருக்கலாம். ஆனால் இரண்டு பேரும் லட்சிய புருஷர்கள்.

முதன்முதலாக, மகாத்மாவிடம் போய், "நான் உங்கள் உருவத்தை அமைக்க வேண்டும். கொஞ்சம் உட்கார்ந்துகொள்ளுங்கள்" என்று சொன்னேன். அதற்கு அவர் லெனின் சொன்னதுபோலவே "உங்களுக்காக நான் சும்மா உட்கார்ந்துகொண்டிருக்க முடியாது. நான் என் பாட்டில் வேலை செய்துகொண்டுதான் இருப்பேன். உங்கள் திறமையைக்கொண்டு நீங்கள் சித்திரம் வரைந்து கொள்ளலாம்" என்று சொன்னார்.

காந்தியடிகள் தரையில் உட்கார்ந்து கொண்டு கைராட்டினம் சுற்ற ஆரம்பித்தார். லெனினோ தமது உத்தியோக நாற்காலியில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தார். இந்த இரண்டு சமயங்களிலும் நான் மௌனமாகவே இருக்க வேண்டியதாயிற்று. ஆனால், பின்னர் இருவரும் என்னிடம் பரஸ்பர நட்புக் காட்டினர்.

ஒருநாள் காந்தியடிகள் லெனினைப் போலவே பரிகாசமாகச் சிரித்துக்கொண்டு "ஓ! வின்ஸ்டன் சர்ச்சிலுடைய சகோதரரின் பெண்ணா தாங்கள்!" என்றார். சர்ச்சிலின் உறவினர் ஒருவர் அவருடைய பரம சத்துருவுடன் சிநேகம் கொள்வதா! மேற்கண்ட வாக்கியத்தைச் சொல்லிவிட்டு அவர் மேலும் கூறினார்: "அவர் (சர்ச்சில்) என்னைப் பார்க்க மறுக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆனால் நான் உங்களைப் பார்த்ததில் எவ்வளவு சந்தோஷமடைந்திருக்கிறேன் என்பதை எனக்காகத் தாங்கள் அவரிடம் சொல்லுங்கள். சொல்லுகிறீர்களா?"

இதேமாதிரிதான் லெனினும், "உங்களுடைய சிறிய தகப்பனாரிடம் சொல்லுங்கள்" என்று சொன்னார்.

சிலை அமைப்பில் லெனினுடைய தலைப்பாகத்தையும் காந்தியினுடைய தலைப்பாகத்தையும் பூர்த்தி செய்து முடித்துவிட்டு முறையே, "இந்த உருவ அமைப்பைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?" என்று இருவரையும் கேட்டேன். இரண்டுபேரும் ஒரே விதமான பதிலைத்தான் கொடுத்தார்கள்: "எனக்குத் தெரியாது. என்னுடைய முகவிஷயமாக நானே தீர்ப்புச் சொல்ல முடியாதல்லவா? சித்திரக் கலையைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் உங்கள் வேலைப்பாடு நன்றாக இருக்கிறது."

கட்டுரையாளர் சிற்பக்கலையில் தேர்ச்சி பெற்ற ஓர் ஆங்கிலப் பெண்மணி. இரண்டு மாபெரும் தேசங்களின் தந்தையர்களிடம் நிலவிய ஓர் அதிசயமான ஒற்றுமையை வர்ணிக்கிறார். கமலா பிரசுராலயத்தாரின் மகாத்மா காந்தி என்னும் நூலிலிருந்து.

காதலியும் காதலனும் பெரும்பாலும் மேல் நாட்டுச் சரக்குகளாக இருந்தபோதிலும், நம் நாட்டுக் கணவனும் மனைவியும் தெரிந்துகொள்ளக் கூடிய விஷயங்கள் இக்கட்டுரையில் உள்ளன. இப்போது இருக்கும் அல்லது இனிப் பிறக்கப் போகும் காதலர்களுக்கும் இக் கட்டுரை பயன்படும். இது ஓர் ஆங்கிலக் கட்டுரையின் தழுவல்.

# இளங் காதலனுக்கு ஒரு வார்த்தை

ஜி. பி.

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாளில் ஒரு முறையாவது காதலிக்க வேண்டும். ஆனல் காதல் அனுபவம் ஒரே இன்பமாகவே இருந்துவிடாது. இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்து கொண்டுதானிருக்கும்.

நீ காதலிக்கும் பெண், உன்னை நிராகரித்துவிட்டால் அதனல் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது. அது உனக்கு நல்லதாகவே முடிந்தாலும் முடியும். எப்படியெனில் அவளைக் கல்யாணம் செய்து கொண்ட பிறகு அவள், நீ எதிர்பார்த்த அளவுக்கு நல்லவளாக இல்லாமல் போகலாமல்லவா? உன் காதல் விவகாரத்தில் வெற்றிபெற்று நீ காதலித்த, உனக்கு இஷ்டமான, பெண்ணையே கல்யாணம் செய்துகொண்டால் நீ அதிர்ஷ்டக்காரன் தான்.

நீ காதலிக்கிற பெண் அழகா, இல்லையா என்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. தோலளவே யாகும் அழகு. ஆனலும் ஒருத்தி உன் பார்வைக்கு அழகாக இல்லாவிட்டால் நீதான் காதலித்திருப்பாயா? மனிதன் அழகான பொருள்களைப் பார்க்கிற பொழுதோ, அல்லது தனக்குப் பிடித்த பொருள்களைப் பார்க்கிற பொழுதோ தன்னுடைய சொந்தக் கண் கொண்டுதான் பார்க்கிறன். பெண்களுக்குக் கல்யாணமாக வேண்டும் என்றல், அவர்கள் அழகிகளாக இருக்க வேண்டும் என்று சொல்லுவது உண்மை அல்ல. அப்படி யிருந்தால் உலகத்தில் அனேக பெண்களுக்குக் கல்யாணமாகியிருக்காது.

> அடுத்த இதழில்:
>
> மணமகளுக்கு ஒரு வார்த்தை
>
> என்னும் கட்டுரையைப் படியுங்கள்
>
> ஆசிரியர்: சக்தி

பெண்களுக்கு அழகைக் காட்டிலும் அறிவும், அடக்கமும்தான் வேண்டும். உன் காதலி எப்படி, புத்திசாலிதான? பொதுவாக நம் பேச்சுக்கு மதிப்புக் கொடுத்து, நமக்கு அடங்கி நடக்கும் பெண்களைத்தான் நாம் விரும்புகிறோம். மேலும் அடக்கமே உருவெடுத்த பெண்களையும், நம்மைப் புகழ்ந்து கொண்டிருக்கிற பெண்களையும், எப்பொழுதும் சிரித்த முகத்துடன் பேசிப் பழகுகிற பெண்களையும் தான் நாம் விரும்புகிறோம். உன்னுடைய காதலியிடத்தில் மேற்சொன்ன குணங்

கள் நிறைந்திருக்கின்றனவா? உன் காதலி, எத்தனையோ தடவைகள் சொல்லிச் சலித்துப் போன தமாஷ்களை நீ சொன்னலும் அதை அவள் ரசித்துச் சிரிக்கவேண்டும். நீ குஷியாக இருக்கிற பொழுது அவள் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கக் கூடாது.

நாம் நினைப்பதைக் காட்டிலும் பெண்கள் புத்திசாலிகள்தான். பெண்கள் ஒன்றுமறியாதவர்கள் போல இருப்பார்கள். ஆனல் நீ அவர்களுடைய வெளித் தோற்றத்தைக் கண்டு ஏமாறக்கூடாது. பெண்கள் கைகாரர்கள். ஆண்களை எடைபோட்டு வைத்திருக்கிருர்கள். ஆண்களின் பலவீனங்களைப் பயன்படுத்தியே தங்களுடைய காரியங்களைச் சாதித்து விடுகிருர்கள் பெண்கள். ஆகவே நீ அவர்களுடன் பழகும் பொழுது ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

பெண்களும் சுய கௌரவம் முதலியவற்றைக் கவனிக்கிறவர்கள்தான். அவர்களுடைய கௌரவத்துக்குப் பங்கம் விளைவிக்கும்படி நடந்துகொள்ளாதே. உன் காதலியின் அபிப்பிராயங்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். உன்னுடைய கூட்டுறவில் தானும் ஒரு 'மனுஷி' என்று அவள் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும்.

ஒத்த நலனும், ஒத்த கல்வியும், ஒத்த வயதும் உடைய காதலர்கள்தான் தங்கள் வாழ்நாள் முழுவதும் இன்ப வாழ்வு வாழ முடியும். உன்னுடைய காதலியின் வாழ்க்கைத் தரமும் உன் வாழ்க்கைத் தரமும் ஒன்ருக இருந்தால்தான் உங்கள் இருவரிடையேயும் சௌஜன்ய பாவம் நிலவ முடியும். ஒருவர் கருத்தை மற்றவர் போற்றவும், ஒருவரை மற்றவர் புரிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும்.

கல்யாணமென்பது சாமான்ய விஷயமல்ல. அது ஆயிரங் காலப் பயிர். அந்தப் புனிதமான விஷயத்தில் நீ பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். கல்யாணமான புதிதில் நீயும் உன் மனைவியும் ஒருவரை யொருவர் பிரிய இஷ்டப்பட மாட்டீர்கள். காட்சி இன்பத்திலேயே நீ சுவர்க்க இன்பத்தை அனுபவிப்பாய். ஒருவர் காரியத்தை மற்றவர் செய்வதிலே ஓர் இன்பம். எதுசெய்தாலும் இருவரும் சேர்ந்து செய்வதில் எல்லையற்ற ஆனந்தம். 'உன் இதயத் துடிப்பில் சேர்ந்து துடிக்க, உன் இன்ப வெள்ளத்தில் சேர்ந்து குதித்து விளையாட, ஓர் உயிரும ஈருடலுமாய்ப் பின்னிப் பிணைந்து கிடக்க ஒரு துணை கிடைத்தது' என்று நீ இன்ப வாரிதியில் திளைத்திருப்பாய். ஆனல் இந்தப் புது அனுபவம் கொஞ்ச காலத்துக்குத் தான்என்பதை நீ மறந்து விடக் கூடாது. காலப் போக்கில் அவள் தன் அழகை இழந்து விடுவாள். அவளுடைய உடற் கட்டும் சரீர இன்பமும் உனக்கு மன எழுச்சியைக் கொடுக்காது. அப்பொழுது அவளிடத்தில் ஆத்மார்த்த காதலைத்தான் விரும்புவாய். அதைத் தருவாளா உன் காதலி என்று சிந்தித்துப் பார்.

சரீர சுகத்தில் உள்ள இச்சை நாளாவட்டத்தில் மறைந்து விடும். உன்னுடைய உணர்ச்சிப் பெருக்கு அவிந்து அடங்கிவிடும். ஆனல் உன் மனைவி என்றென்றும் உன்னுடன்தான் இருப்பாள். கல்யாணமான புதிதில் அவளிடம் இருந்த கவர்ச்சி, அந்த இன்ப நாட்களில் அவ

ளிடம் நீ கண்ட மின்னொளி நடைமுறை வாழ்க்கையின் பகலொளியில் மங்கி மறைந்து விடும். அப்பொழுதான் உன் மனைவியை நீ நேசிக்கவேண்டும். உங்களிருவரிடையே உள்ள பிணைப்பு இறுகவேண்டும்.

உன் வீடு செழிக்க, வீட்டில் விளக்கேற்றவந்த லட்சுமி போல் இருக்கவேண்டும் உன் மனைவி. உன்னைப் பார்த்து 'அதிர்ஷ்டக்காரன்' என்று மற்றவர்கள் சொல்லும்படி அவள் இருக்கவேண்டும். கடைசியாகச் சொல்லுகிறேன், எல்லாவற்றைக் காட்டிலும் உன் மனைவி ஹாஸ்ய ரசனை உள்ளவளாக இருக்கவேண்டும். ஹாஸ்ய ரசனை இல்லாதவளுடன் வாழ்வதே முடியாத காரியம். சிரிப்பில்லாத வாழ்க்கை அலுப்பூட்டும் சூன்யம்தான். களிப்பூட்டும் இன்பச் சிரிப்பு வீட்டுக்குச் சூரிய ஒளி மாதிரி. இளைஞனே, உன் காதலியிடம் இந்தக் குணங்கள் இருக்கின்றனவா? அறிவுத் தெளிவு, அழகிய தோற்றம், புன்னகை தவழும் மதிமுகம், ஒய்யாரமான உளப்பாங்கு கொண்டு உன் காதலி இருப்பாளாக!

✲

## நைஜாம் தர்பாரில் ஒரு காட்சி

ரோமேஷ் தாபர் என்பவர் "ஹைதராபாத்தில் சண்டமாருதம்" என்னும் ஒரு சிறு ஆங்கில நூலில் கீழ்கண்ட சில விபரங்களைக் குறிப்பிடுகிறார்:

ஹைதராபாத்தின் ஒரு கோடி எழுபது லட்சம் மக்கள் மீது ஒரு சிறு கும்பல்தான் ஆட்சி செலுத்துகிறது. (ஆளும் வர்க்கமாகிய) பிரபுத்துவக் கும்பலில் 1100 ஜாகிர்தார்களும், ஜமீன்தார்களும், தேஷ்முக்குகளும், ஒரு சில தொழிற்சாலை முதலாளிகளும் இருக்கின்றனர். முதலாளிகள் ஹைதராபாத்தின் மொத்த நிலப்பரப்பில் 5-ல் 3 பகுதியை அதாவது மூன்று கோடி ஏக்கர் நிலத்தையும், சகல தொழிற்சாலைகளையும் தங்கள் சொந்தச் சொத்தாகக் கொண்டிருக்கின்றனர். அரசாங்க பட்ஜெட் தொகையாகிய 20 கோடி ரூபாயில் பாதி ரூபாய் அவர்களின் வருஷ வருமானமாக உள்ளது. இது மட்டுமல்லாமல், 80 கோடி ரூபாய் கடன் வாங்கும் நிலையை விவசாயிகளுக்கு உண்டுபண்ணி, வருஷத்திற்கு 200-லிருந்து 250 சதவீதம் வரை வட்டி வாங்குகிறார்கள்.

ஜன்ன ரெட்டி பிரதாப ரெட்டி என்பவருக்கு 1,30,000 ஏக்கர் சொந்தம். கல்லூர் குடும்பத்துக்கு 80,000 ஏக்கர் சொந்தம்.

ஹைதராபாத் மன்னருக்கு பட்ஜெட்டிலிருந்தும், சொந்த சொத்திலிருந்தும், வேறுபல வழிகளிலும் கிடைக்கும் வருமானம் ஒரு நாளைக்கு 4 லட்சம் ரூபாய். அவரிடம் 600 கோடி ரூபாய் பெறுமானமுள்ள தங்கமும் வைரங்களும் உண்டு.

(அதே சமயத்தில்) ஹைதராபாத் தொழிலாளியினுடைய மாத வருமானம் ரூ. 18.

பெண்களின் மாத வருமானம் ரூ. 5. பியூன்களுக்கு மாதம் ரூ. 12-லிருந்து ரூ. 15 வரை சம்பளம்.

மற்ற சிறு உத்தியோஸ்தர்களுக்கு ரூ. 30-லிருந்து 60 வரை சம்பளம். ரூ. 100 வாங்குகிறவர்கள் மிகக் கொஞ்சம். (ஆனால்) 1500 சிவில் ராணுவ உத்தியோகஸ்தர்கள் மட்டும் வருஷத்தில் 5 கோடி ரூபாய் பெறுகிறார்கள். இங்கே லஞ்சங்களும் மோசடிகளும் வேறு தாண்டவமாடுகின்றன.

இந்திய சரித்திரத்தை மன்னர்களின் போராட்ட சரித்திரமாகவே எழுதி வைத்துவிட்டார்கள். நம் கலாசார வளர்ச்சியின் சரித்திரமாக அது இல்லை. நம் பிதிரார்ஜிதத்தை நாம் பெறக்கூடிய வகையில் நம் சரித்திரத்தை எழுத வேண்டும் என்கிறார் கட்டுரையாளர். இது ஓர் ஆங்கிலக் கட்டுரையின் தழுவல்.

# கலாசாரப் பிதிரார்ஜிதம்

○

'கலைஞன்'

சமீப காலமாக நம்மவரிடையே நம்முடைய கலாசாரப் பிதிரார்ஜிதத்தைப் பற்றிய பேச்சு அதிகரித்துள்ளது. நமக்கு நம் நாட்டின் கலாசாரப் பெருமையைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையிருந்தும், நம்மீது அன்னிய அரசாங்கம் சுமத்திய கல்வி முறையினால் அவ்வாசை நிறைவேறாமல் போய் விட்டது. ஆனால் இனிமேல், நம் நாட்டின் பண்பாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ளுவது அவசியம். இந்திய சரித்திரத்தை எழுதும் பொறுப்பைப் போலவே இந்திய கலாசாரத்தைப் பற்றி எழுத வேண்டிய பொறுப்பும் நம் அறிஞர்களுக்கே ஏற்பட்டிருக்கிறது. சமீபத்தில் ராமகிருஷ்ணர் நூற்றாண்டு விழாவின் போது வெளியிட்ட 'இந்திய கலாசாரப் பிதிரார்ஜிதம்' என்ற புத்தகமும், ஜவாஹர்லால் நேரு எழுதிய சரித்திர சம்பந்தமான புத்தகங்களும் நம்மவரிடையே தோன்றியுள்ள கலாசார உள்ளுணர்வைக் காட்டுகின்றன.

நம்முடைய கலாசாரத்தைப் பிறநாட்டார் புகழ்ந்து பேசுவதை மட்டும் நாம் விரும்பக் கூடாது. வருங் காலத்தில் உன்னதமான ஒரு நாகரிகம் என்பது, விஞ்ஞான முன்னேற்றத்தால் மிகக் குறுகலாகத் தோன்றும் இவ்வுலக மக்களில் சிறந்த அறிஞர்கள் என்று கருதப்படுபவர்களால் உருவாக்கப்பட்டதாகத் தான் இருக்கும். ஆகவே நம்முடைய குறைவு நிறைவுகளில் பங்கு கொண்டு நம்மோடு அனுதாபத்தோடு பழகுகிறவர்களை நாம் வரவேற்கிறோம்.

நம்முடைய கலாசாரத்தைப் பகுத்தறியும் பொழுது, பிற நட்டார் நம்முடைய கலாசாரத்தைப் பார்க்கிற சந்தேக நோக்கைப்பற்றியும், நம் நாட்டவர்கள் நம் கலாசாரத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் மூட நம்பிக்கையைப் பற்றியும் நாம் கவலைப்படாமல் எந்தவித விருப்பு வெறுப்பு உணர்ச்சிக்கும் இடம் தாராமல் நடுநிலைமையான நோக்கோடு ஆராய்வது நல்லது.

நம்முடைய 'கலாசாரப் பிதிரார்ஜிதம்' என்கிற பொழுது நாம் எதைக் குறிக்கிறோம்? நம்மிடையே பழங் கதைகள் பேசி, கடந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இதிகாச புராணங்களையும் மற்றக் கதைகளையும் போற்றிப் புகழ்வதில் பயன் என்ன? பழங்கால வாழ்க்கை முறையைத் தெரிந்துகொள்ளுவதால் தற்கால வாழ்வுக்குப் பயன்படுமா?

பழங்கால நாகரிகப் பெருமையைப் பற்றிப் பேசி, நிகழ்

காலத்தை வீணுக்குகிறேம். மேலெழுந்த வாரியாகப் பார்த்தோமானல் பழங்கால ஹிந்து, கடந்த காலத்தைப்பற்றிக் கவலைப்படாமல் நிகழ் காலத்தைப் பெரிதும் பயன்படுத்திக்கொண்டு இன்ப வாழ்வு வாழ்ந்தான் என்று தோன்றும். ஆனல் அப்படியொன்றும் இல்லையென்றே சொல்ல வேண்டும். இந்த விஷயத்தைப் பற்றித் தீர்க்கமாக ஆராய்வது தான் நம்முடைய கலாசார வளமுறையைப் பற்றியும் சரித்திரத்தைப் பற்றியும் உண்மையான விளக்கம் கூறுவதாக ஆகும்.

சரித்திரம் எழுதுகிறவர்கள் முன் ஒரு சமயம் நடைபெற்ற பழையவிஷயங்களைப்பற்றி எழுதுகிருர்கள். ஆகவே அவர்கள் மேலோட்டமாகச் சில குறிப்பிட்ட சரித்திர உண்மைகளை, அப்பொழுது அரசாண்ட அரசன் அல்லது ராணியைப்பற்றி மட்டுமே எழுதி விளக்க முயல்கிருர்களே யொழிய, மக்கள் செய்த புரட்சிகளையும், மகத்தான போராட்டங்களையும் விட்டுவிடுகின்றனர். இதனல் கண் காட்சிச் சாலைகளில் வைக்கப்பட் டிருக்கும் சரித்திர சம்பந்தமான காட்சிப் பொருள்களிலும், நம்மிடையே பலகாலமாகவழக்கத்திலிருந்து வரும் ஒருசில கட்டு திட்டங்களிலும்தான் நம்முடைய கலாசார வளமுறை இருக்கிறதென்று தவருக எண்ணுகிறேம்.

நாம் வாழ்க்கையின் வாரிசுகளாக இருக்கிறவரையில், வாழ்க்கைச் சக்திகளாகிய பொருளாதாரம், அரசியல், சமூகம், கலாசாரம், மதம் போன்ற பல்வேறு சக்திகளும் ஒன்றேடு ஒன்று முட்டி மோதி ஒன்றுபட்ட ஒரு கலப்படத்தி லிருந்து உதித்தவர்களாக இருக்கிறவரையில், கலாசார வளமுறையைச் சமூக ரீதியாகத்தான் நோக்க வேண்டும்.

மனிதன் நிலத்தைப் பண்படுத்தி பயிர் செய்வதிலும், பட்டுப் பூச்சி வளர்த்து அதிலிருந்து பட்டு உற்பத்தி செய்வதிலும், பூஞ்செடிகள் வளர்த்துப் பூக்கச் செய்வதிலும்தான் கலாசாரம் வித்தூன்றியது. கலாசாரம், திட்டமிட்டுச் சொல்ல முடியாத ஏதோ ஒரு கற்பனைப் பொருளாக இருந்தாலும், அது சாதாரணமக்களுடைய உள்ள உணர்ச்சிகளிலும், அவர்களுடைய வாழ்க்கை அபிலாஷைகளிலும்தான் உருப் பெற்றது.

அப்படி யிருந்தும் நம்முடைய மூதாதையர்கள் பட்ட கஷ்டங்களையோ, செய்த போராட்டங்களையோ, அவர்களுடைய வாழ்க்கையின் மதிப்பீட்டையோ, நோக்கங்களையோ நாம் அப்படியே கலாசாரம் என்கிற பெயரால் ஒத்துக்கொள்ளுவதில்லை. நம்முடைய தேவைக்குத் தகுந்த முறையில், அவற்றைக் கிரஹித்து நம்முடைய வாழ்வு முறைக்குப் பொருந்துமாறு அவற்றை மாற்றி அமைத்துக்கொள்ளுகிறேம்.

நம்முடைய சரித்திரப் பெருமைகளையும் பிதிரார்ஜித கலாசார சொத்தையும் பற்றிப் பெருமையாக நினைத்து, அவை முன்னேர்களின் கொள்கை, கோட்பாடு என்று பெருமைபடப் பேசி அவற்றை அப்படியே நடைமுறையில் கொண்டுவருவதால் நம் வாழ்வு மறுமலர்ச்சி அடையும் என்று கருதுவது கூடாது. ஆனல் அந்தச் சரித்திர உண்மைகளையும், நிகழ்ச்சிகளையும் மனித வர்க்கத்தின் வெற்றி என்று கொண்டு அவற்றை நம் வாழ்க்கையில் திதர்சனமாகப்

பரீட்சை செய்து அவை எவ்வளவு தூரம் நமக்குப் பயன் அளித்திருக்கின்றன என்று கண்டு பிடிக்க வேண்டும். பழங்கால இலக்கியத்தையும், கலையையும் நாம் நமது தற்கால வாழ்க்கையில் பிணைக்க வேண்டும், அப்படிச் செய்தோமானால், நம் தேசப் பெருமைக்குச் சான்றாக விளங்கும் கண்காட்சிச் சாலைகளில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் காட்சிப் பொருள்கள் தான் நம்முடைய கலாசாரப் பிதிரார்ஜிதம் என்பது பொய். நம் வாழ்வின் சாரம்தான் கலாசாரம் என்றாகிவிடும்.

சரித்திர ஆராய்ச்சியாளர் இந்திய இதிகாச புராணங்களிலும், கிராமியப் பாடல்களிலும் பரிணமிக்கும் சரித்திர உண்மைகளை ஒதுக்கிவிட்டே வந்திருக்கின்றனர். அதனால்தான் பலர் இந்தியாவுக்குச் சரித்திரமே கிடையாது என்று கருதுகின்றனர்.

இதற்குக் காரணம், இந்திய நாகரிகத்தைப்பற்றிச் சொல்லும் பொழுது மக்கள் ஆதியில் சிறு சிறு கூட்டங்களாக, தங்களுக்கென்று சில பழக்க வழக்கங்களுடன், ஏதோ சில காரியங்களைச் செய்துகொண்டு வாழ்ந்து வந்த உண்மைகளைக் கூறாமல் பொதுப்படையாக இந்திய நாகரிகத்தைப் பற்றி மேலெழுந்த வாரியாக சொல்லிவிடுவதுதான்.

நம்முடைய கலாசார வளமுறையைப்பற்றிச் சொல்லும் பொழுது நம்முடைய தற்கால வாழ்க்கை முறையையும் ஒரு சிறிது கவனிக்க வேண்டும். அப்படி அல்லாமல் சரித்திர உண்மைகளைக் கொண்டே, அவற்றின் அடிப்படையில் நம் கலாசார வளமுறையை விளக்கப் புகுந்தால் அதில் வெற்றி பெறுவது துர்லபம். ஏனெனில் நம்முடைய பழங்கால நாகரிகம், இந்துமத வேதாந்த நெறிப்பட்டதாக இருக்கும். சாதாரண மக்களுக்கு அது புரியாவிட்டாலும் அதை எதிர்க்காமல், இறைவன் அடிசேர வழி கூறுகிறது என்று மதித்து வந்தார்கள். அதே சமயத்தில் அதனுடைய நியதிகளுக்கு விரோதமாக, தொழில் அபிவிருத்தி அடைந்த தற்கால நாகரிகத்துக்கும் இடம் அளித்து வருகிறார்கள்.

தற்காலத்தில் இருக்கும் சரித்திரப் புத்தகங்கள் கலாசாரப் பண்பைப் பிரதிபலிப்பதாக இல்லை. அவ்வப்போது இந்தியாவின்மீது படையெடுத்து வென்ற மன்னர்கள் இந்திய சரித்திரத்தைத் தங்களுக்குச் சாதகமாக எழுதிவைத்துப்போய்விட்டனர். உதாரணமாக ஆரியர்கள் வந்த பிறகு வேதங்கள் எழுதிவைத்தனர். அவர்களுக்குப் பிறகு ராமாயணம் மகாபாரதம் முதலிய இதிகாச புராணங்களை எழுதிவைத்தனர். பிறகு இந்தியாவின் மீது படையெடுத்த ஹூணர்கள், முகம்மதியர்கள் முதலியவர்களும் சரித்திரம் எழுதிவைத்துச் சென்றனர். தற்கால சரித்திரக்காரர்கள் மகஞ்சதாரோ நாகரிகத்திலிருந்து எழுதத்தொடங்குகின்றனர். மேற்சொன்ன சரித்திர வரலாறுகளில் வேதாந்த வாடை அடிக்கிறது. மத்திய கால சரித்திர வரலாற்றில் சைவ சமயப் பெருமைகளும், வைஷ்ணவ சித்தாந்தங்களும் பெரிதும் இடம் பெற்றிருக்கின்றன.

இந்தியா நாட்டினுடைய ஆதி மனிதர்களின் வாழ்க்கைப் போராட்டங்களைப் பற்றியும்

மரங்களைக் கடவுளாகப் பாவித்து அவ் வுருவங்களைக் கற்களில் வடித்து அந்த ஆதி மனிதர்கள் வணங்கியதைப் பற்றியும் மேற் சொன்ன சரித்திரக்காரர்கள் குறிப்பிடவில்லை. மனித உள் ளத்தை உருக்கும் மகாபாரதத் தில் உள்ள பல நிகழ்ச்சிகளை இந்தச் சரித்திர விற்பன்னர்கள் எங்கே படித்திருக்கப் போகி ருர்கள்? பல்வேறு காலங்களில் மக்களிடையே வழங்கி வந்த கிராமியக் கதைகளிலும், கற்ப னைக் கதைகளிலும் பொதிந்துள்ள உயர்ந்த கருத்துக்களை இந்தச் சரித்திரக்காரர்கள் படித்திருக் கவா போகிருர்கள்?

சரித்திரக்காரர்கள் பிரமாதப் படுத்தும சரித்திர வரலாற்றைக் காட்டிலும், உழுது பயிர் செய் யும் உழைப்பாளியும், பொம்மை செய்யும் குயவனும் வாழ்க்கை யைப் பற்றிய உண்மையான நிலையை நன்கு எடுத்துக்கூறு வார்கள். கிருஷ்ண லீலைகளைப் பற் றிக் கூறும் பாடல்களும், பட விளக்கங்களும் பண்பட்ட உள் ளத்தைச் சரித்திர விமர்சனத் ததைக் காட்டிலும் அதிகமாகக் கவருகிறது. கடந்த கால கலா சாரத்தில் காண்கிற மனிதப் பண்பாடு, குண விசேஷங்கள், வாழ்க்கை நுணுக்கங்கள் முத லியவற்றைத் தற்கால கலா சாரத்தோடு பிணைத்து நம் வாழ் வைச் செம்மையுறச் செய்து கொண்டால்தான் நம்முடைய கலாசாரப் பிதிரார்ஜிதத்தை நாம் நன்கு பயன்படுத்திக் கொண்ட வர்களாக ஆவோம்.

ஹிந்துக்கள் சரித்திரம் எழுதி வைக்கவில்லை என்பது உண்மை தான். ஆனல் அவர்களிடையே கர்ண பரம்பரையாக வழங்கி வரும் பாடல்களும் கதைகளும் சரித்திரத்தைக் காட்டிலும் சக்தி வாய்ந்தவையாக உள்ளன.

மேலெழுந்த வாரியாகச் சரித் திரத்தைப் படிப்பதா அல்லது ஊன்றிப் படிப்பதா என்ருல், பின் சொன்னவாறு படிப்பது தான் நல்லது. மேலெழுந்த வாரி யாகப் படித்தால் சரித்திரத்தில் சங்கர பாஷ்யத்தைத் தவிர வேறு உருப்படியான விஷயத்தைக் காண முடியாது.

உலக வழக்கோடு நம் சரித்தி ரத்தை ஆராய்ந்தால் நமது வாழ்க்கை, போராட்டங்கள் நிறைந்ததாகவும், மனித வர்க்கத் தின் குறைவு நிறைவுகள் உள்ள தாகவும், அதாவது மனித சாதி யின் உண்மைக் கதையாகவுமே இருக்கும். இந்திய மக்கள் எப் பொழுதுமே ஒரே கடவுள், ஒரே தலைவன், ஒரே புத்தகம் என்ற கொள்கைகளையும் கோட்பாடு களையும் ஆதரித்ததே கிடையாது. மத்திய காலத்தில் தோன்றிய மதாச்சாரியர்களாகிய கபீர், சைதன்யர், நானக், நாமதேவர், துக்காராம் முதலிய தலைவர்கள் 'மனிதமத'த்தைஸ்தாபித்தவர்கள் என்றே சொல்லலாம். கள்ளங் கபடமற்ற உள்ளம் படைத்த மக் களுக்கு அம் மதாச்சாரியார்கள் தங்களால் இயன்றதைச் செய் தார்கள்.

இந்தியாவின் பழங்குடி மக் கள் தாங்கள் இருந்த இடத்தை விட்டு நகராமல் இருந்தார்கள் என்றும், பிறகு வந்த நிலச்சுவான் தாரி முறையும் அவர்களுடைய நிலைமையில் ஒருவித மாறுதலும் செய்யவில்லை என்றும் சொல்லு கிருர்கள். ஆனல் இது உண்மை யாய் இருந்தால், அவர்கள் சிருஷ் டிந்த சித்திரங்களில் மாறுபாடு அதிகம் இருக்க என்ன காரணம்? புத்த மதம் பிறக்கக் காரணம்

என்ன? பிராம்மணிய வேதாந்த சித்தாந்தங்கள் பிடிக்காமல், மக்கள் புதிய ஒரு மதத்தைக் கண்டுபிடிக்க ஆர்வம் காட்டியதே புத்த மதத்தோற்றத்துக்குக் காரணம். பலதிறப்பட்ட வேதாந்த போதனைகளுக்குப் பிறகு, அஜந்தாவின் குகைச் சித்திரங்களும், காஞ்சியின் கல் வெட்டுக்களில் வண்ணக் கொங்கையும், மது ஜாடியுடன் போட்டியிடும் துடி இடையும் கொண்ட லாவண்ய சித்திரங்களும் எப்படி உருவாயின? குப்த வம்ச அரசர்களுக்குப் பிறகு இத்தகைய பிரமிக்கத்தக்க கலை உணர்ச்சி எப்படித் தோன்றியது? கிராமியப் பண்பாடும், கிராமியப் பாடல்களும் சில காலம் மங்கி யிருந்தன. பிறகு 15-ம் நூற்றாண்டில் எப்படி மீண்டும் தலைதூக்கிச் செழிப்புற்றன? ஆனால் ஏன் அவை இக் காலத்தில் பின்னணிக்குச் சென்றிருக்கின்றன?

இதற்குக் காரணம் நம்முடைய தற்போதைய சமுதாய வாழ்வுதான். நம்முடைய மூதாதையர்களுடைய கற்பனைத் திறனையும் அவர்கள் உருவாக்கிய சக்திகளின் தன்மையையும் பூரணமாக ஆராய்தல் வேண்டும். அப்படிச் செய்வதுதான் பொதுவாக எதையும் ஒன்றுபோலக் கருதும் மனப்போக்கை மாற்ற வழி. அப்படிச் செய்யாதவரையில் இந்திய சரித்திரம் எழுதப்பட வில்லை என்றுதான் கருத வேண்டும். இந்தியக் கலாசாரமும் உண்மை வாரிசுகளுக்காக அதுவரை காத்திருக்க வேண்டி யிருக்கும்.

*

## அவர் தந்திரம்

மாக்டேவிஷ் என்பவர் லண்டனில் ஒரு காரை வாடகைக்குப் பிடித்துக்கொண்டு, டிரைவரைப் பார்த்து, "வாடர்லூ ஸ்டேஷனுக்குக் காரை விடப்பா" என்றார். மாக்டேவிஷ் ஊருக்குப் புதியவர் என்று விரைவில் தீர்மானித்துவிட்டான் டிரைவர். ஆகவே அதிகமான வாடகை வாங்கவேண்டும் என்று நினைத்து, காரை நேராக வாடர்லூ ஸ்டேஷனுக்கு விடாமல் எங்கெங்கோ சுற்றிச் சுற்றி ஓட்டிக்கொண்டு வந்து கடைசியில் மூன்று மணிநேரம் கழித்துக் குறிப்பிட்ட இடத்துக்கு காரைக் கொண்டுவந்து நிறுத்தினான். மூன்று மணிநேரம் ஊர் அழகைப் பார்த்துக்கொண்டுவந்த மாக்டேவிஷ் காரைவிட்டு இறங்கி நேராக அங்கே நின்ற ஒரு போலிஸ்காரனிடம் போய், "யூஸ்டனிலிருந்து இங்கே வர எவ்வளவு வாடகை?" என்று கேட்டார்.

போலிஸ்காரன் உள்ள வாடகையைச் சொன்னான். அந்தத் தொகையை அவனிடம் கொடுத்து "இந்த வாடகையை டிரைவரிடம் கொடுத்துவிடுவீர்களா?" என்று சொல்லிவிட்டுக் கம்பி நீட்டிவிட்டார். மாக்டேவிஷ்.

—வால் ஸ்ட்ரீட் ஜர்னல்

## இனாமும் கடனும்

கடனைக் கொடுப்பதைவிட இனாமாகக் கொடுத்துவிடுவது மேல். ஏனென்றால் இரண்டும் ஒன்று போலவே இருக்கின்றன.

—எவ்ரிபடீஸ் டைஜஸ்ட்

# இந்தியப் போக்குவரத்து

சி. என். வக்கீல்

நம் நாடு சுதந்திரம் பெறுவதற்குமுன் எழுதப்பட்ட முக்கியமான கட்டுரை இது. போக்குவரத்து சாதனங்களில் என்னென்ன புரட்சிகளை எல்லாம் நம் சுதந்திர அரசாங்கம் இன்று செய்ய வேண்டியிருக்கிறது என்பதையும் இக் கட்டுரையின் மூலம் நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

இந்தியாவிலுள்ள ரயில் பாதையின் மொத்த நீளம் 41,000 மைல்கள். இதில் சுமார் 12,000 மைல் நீளமுள்ள ரயில் பாதை ராணுவ உபயோகத்தை உத்தேசித்தும், 39,000 மைல் நீளமுள்ள பாதை வியாபார உபயோகத்துக்குமாக இருந்து வருகின்றன.

நம் நாட்டின் நிலப்பரப்பு, ஜன நெருக்கம் முதலியவற்றைப் பார்க்கிறபொழுது நம் நாட்டின் ரயில் பாதை மற்ற நர்டுகளின் ரயில் பாதைகளைக் காட்டிலும் எவ்வளவு குறைவாக இருக்கிறது என்பதைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்கும்.

| நாடு | பரப்பு (ஆயிரக் கணக்கில்) | ஜன சங்கியை (கோடிக் கணக்கில்) | 1832-ல் ரயில் பா. நீளம் (ஆயிரக் கணக்கில்) | ஒரு மைல் நீளமுள்ள ரயில் பாதையினால் பயனடையும் பிரதேசம் (சதுர மைல்கள்) | ஒரு மைல் நீளமுள்ள ரயில் பாதையினால் பயனடையும் மக்கள் |
|---|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 3,738 | 12.3 | 237 | 15.8 | 523 |
| இங்கிலாந்து | 94 | 4.6 | 20 | 4.7 | 2,300 |
| கானடா | 3,694 | 1 | 44 | 84 | 227 |
| ஆஸ்திரேலியா | 2,974 | .7 | 28 | 106 | 236 |
| தென் ஆப்பிரிக்கா | 473 | ·8 | 14 | 53 | 588 |
| இந்தியா | 1,575 | 33.8 | 41 | 38 | 8,244 |

இந்த நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்தே ரயில் பாதையின் முக்கியத்துவம் வளர ஆரம்பித்துவிட்டது. மக்கள் உல்லாசப் பிரயாணம் செய்வதையும் மாணவர்கள் கல்வி சம்பந்தமான பிரயாணம் செய்வதையும் ரயில்வே கம்பெனிகள் ஆதரித்து வந்தன. தொடக்கத்தில் சாமான் போக்குவரத்துக்கள் குறைவாக இருந்தபோதிலும் நாளா வட்டத்தில் அதிகமாகிவிட்டன.

நம் ரயில்களில் முதல் இரண்டு வகுப்புகளும் எல்லாச் சௌகரியங்களுடன் மேலை நாட்டு வண்டிகளைப் போல இருக்கின்றன. ஆனால் ரயில்வேக் கம்பெனிகளுக்குப் பிரயாணிகளால் வருகிற வருமானத்தில் தொண்ணூறு சதவிகிதம் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளால்தான் வருகிறது. அப்படியிருந்தும் மூன்றாம் வகுப்பு மிகவும் கேவலமான நிலையில் இருக்கிறது. இந்தக் குறையைப் போக்க முயலவேண்டும்.

யுத்த காலத்தில் ரயிலில் நெருக்கடி அதிகமாகி விட்டது.

காரணம் கடற்கரை கப்பல் போக்குவரவு குறைந்துவிட்டது. அதில் ஈடுபட்டிருந்த கப்பல்கள் யுத்த சேவைக்குச் சென்றுவிட்டன. பெட்ரோல் பங்கீட்டு முறையினல் பஸ் போக்குவரவு குறைந்துவிடவே ஜனங்கள் ரயில் பிரயாணத்தை நாடினர்கள். மேலும் பிரயாணிகளைக் காட்டிலும் மனித வாழ்க்கைக்கு அவசியமான உணவுப் பொருள்களுக்கு அதிக சலுகை காண்பித்தார்கள். இந்த யுத்த காலத்தில் ரயில்வேக் கம்பெனிகளுக்குவந்த வருமானம் சாதாரண காலங்களில் வந்த வருமானத்தைக் காட்டிலும் ஏழெட்டு மடங்கு அதிகமாயிருந்தது.

இவ்வளவு வருமானம் மிக்க இந்த ஸ்தாபனத்தை அரசாங்கமே பொறுப்பு ஏற்று ஏன் நடத்தக்கூடாது? தனிப்பட்ட கம்பெனிகளின் கையில் இருந்தால் அவர்கள் நாட்டின் நன்மையை உத்தேசிக்காமல் மக்களின் சௌகரியத்தைச் சிறிதும் சிந்திக்காமல் தங்களுக்கு நிறைய வருமானம் வரவேண்டும் என்கிற ஒரே பேராசைக் கொள்கையோடுதான் வேலை செய்வார்கள்.

ரயில்வே ஸ்தாபனம்தான் ஒரு நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தப் பெரும் உதவியாய் இருக்கிறது. நம் இந்திய ரயில்வே கம்பெனிகளின் முக்கிய நோக்கம் இங்கிலாந்தின் வியாபாரத்தைப் பெருக்குவதாகத்தான் இருந்து வந்தது. ஆகவே, துறைமுகத்துக்கோ, அல்லது துறைமுகத்திலிருந்தோ சாமான்கள் ஏற்றிச் செல்லுவதற்குத் தனிச் சலுகைகளும், குறைந்த கட்டணமும் வைத்திருந்தார்கள். நம் உள்நாட்டு வியாபாரமும், தொழில் அபிவிருத்தியும் முன்னேற்றமில்லாமல், தேங்கிக் கிடந்தன. இந்திய அரசாங்கம் இந்தக் குறையைப் போக்கும் என்று எதிர்பார்ப்பது நியாயம்தான். ஆனல் இன்னும் இந்த விஷயத்தில் சிரத்தை காட்டாமல் இருக்கிறது ஏனே?

1935-ம் வருஷத்திய இந்திய அரசாங்க சட்டத்தின்படி மத்திய அரசாங்கமும், ஏனைய மாகாணங்களும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. அதன்படி மொத்த வருமானத்தில், மத்திய அரசாங்கம் கொடுக்க முடிந்தால் வரிப்பணம் மட்டும் கொடுக்க வேண்டும். ஆனல், நடைமுறையில் ரயில்வே பட்ஜெட்டில் துண்டு விழவே, மாகாணங்களுக்கு இந்த ஒப்பந்தத்தின்படி ஒரு நன்மையும் ஏற்படவில்லை. அதே சட்டத்தின்படி இந்தியச் சமஷ்டி ஏற்பட்டவுடன், இந்திய ரயில்வேக்களைக் கவனித்துக் கொள்ள ரயில்வே சமஷ்டி ஒன்று நிறுவப்படும் என்றுமிருந்தது. அந்தச் சட்டம் நடைமுறையில் வராததால் இப்பொழுது அந்தச் சமஷ்டி செய்ய வேண்டிய வேலையை, தற்சமயம் அமலில் இருக்கும் ரயில்வே போர்டு கவனித்து வருகிறது. இந்த மாதிரித் திட்டத்தின் கருத்து என்னவென்றல் ரயில் பாதைகள் அரசாங்கத்துக்கு அடிமையாக இல்லாமல் நல்ல லாபம் சம்பாதிக்கக் கூடிய வியாபார ஸ்தாபனமாக இருக்க வேண்டும் என்பதுதான். ஆனல் இதன் உண்மை நோக்கம் என்னவென்றல், இந்தியக் கைத்தொழில்களுக்கு ஆக்கம் தராமல் இருக்கவேண்டும். மேலும் அவசரச் சமயங்களில் ராணுவத்தைத் திரட்டி கலக ஸ்தலத்துக்கு

கொண்டு போகவும் சாத்திய மாக இருக்க வேண்டும் என்பது தான்.

மற்ற நாடுகளில் ரயில் பாதை யின் உதவியால் தங்கள் நாடு களில் உற்பத்தியாகும் விவ சாயப் பொருள்களையும், கைத் தொழில் சாமான்களையும் தங்கள் நாடுகளுக்குள்ளேயே எல்லா இடங்களுக்கும் அனுப்பி மக்கள் சுதேச சாமான்களை வாங்கவே தூண்டுகிறார்கள். பிறநாடுகளைப் பார்த்தாவது நாமும் முன்னேற வேண்டும்.

ரயில்வே ஸ்தாபனப் பொறுப்பை அரசாங்கமே ஏற்று நடத்தினால் எண்ணற்ற மக்க ளுக்கு உடல் உழைப்புத் தொழி லாளி முதற்கொண்டு மூளை முயற் சித் தொழிலாளி வரையிலும், குமஸ்தா முதற்கொண்டு, நிர்வா கத்தின் தலைமை பீடத்தில் உட் கார்ந்திருக்கிறவன் வரையிலும், உள்ள ஸ்தானங்களில் இடம் தந்து வேலையில்லாத் திண்டாட் டத்தைப் போக்கலாம்.

இந்திய ரஸ்தாக்களும் முற் போக்கடையவில்லை. 1938-ம் வருஷக் கணக்கின்படி நகரசபை களின் மேற்பார்வையில் இருக் கும் ரஸ்தாக்களின் மொத்த நீளம் 19,000 மைல். மற்றவை 65,000 மைல். நாகரிகப் பட்டணங்களில் உள்ள ரஸ்தாக்கள் நல்ல நிலைமை யில் வைத்துப் பாதுகாக்கப்படு கின்றன. என்ன இருந்தாலும் மோட்டாரில் உடம்பு வலிக்கா மல் சவாரி செய்யக்கூடிய ரஸ் தாக்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவுதான்.

நகரங்களைப் பிணைக்கும் ராஜ பாட்டைகளேயன்றிச் சிறுநகரங் களைச் சேர்க்கும் ரஸ்தாக்களும் இருப்பதால் பஸ் சர்வீஸ் போடப்பட் டிருக்கிறது. சில இடங்களில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு ரயில், பஸ் ஆகிய இரண்டு பிரயாண வசதி களும் இருப்பதால், அந்த இரண்டு ஸ்தாபனங்களுக் கிடையேயும் போட்டி ஏற்படு கிறது சர்வசாதாரணமாகி விட் டது. இந்தப் போட்டியினால் இரண்டு ஸ்தாபனங்களும் பொருளாதாரத் துறையில் நஷ் டத்துக்கு ஆளாகின்றன. இதைத் தவிர்க்க இந்த ஸ்தாப னங்கள் இரண்டையும் அர சாங்கமே மேற்பார்த்து ஒன்று டன் மற்றொன்று போட்டியிட்டு அசௌகரியம் ஏற்படுத்திக் கொள்ளாமல் இருக்கச் செய்ய வேண்டும்.

நம் நாடு ஒரு விவசாய நாடு. கிராமங்களுக்குச் செல்லும் பாதைகளைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். செப்பனிடப்பட்ட ரஸ்தாக்கள் இல்லாமல் மோட் டார் முதலிய இயந்திர சாதனங் கள் போக முடியாததால் தானி யப் போக்கு வரத்துத் தடைப் படுகிறது.

நகரங்களில் உள்ள ரஸ்தாக் கள், நகரங்களைச் சேர்க்கும் போக்கு வரவுக்கு உபயோக மாய் இருக்கும் பெரிய ரஸ்தாக் கள், கிராமிய ரஸ்தாக்கள் முத லிய வற்றைச் செப்பனிட்டுப் புதுப்பிக்கும் பொறுப்பை முறையே நகர சபைகள், மாகாண அரசாங்கம், ஜில்லா போர்டு முதலியன ஏற்றுக் கொள்ளுகின்றன. நகரசபைக ளும் ஜில்லா போர்டுகளும் தங்க ளுடைய ஆதிக்கத்திலுள்ள பிராந் தியங்களில் கல்வி, சுகாதார சமூக முன்னேற்ற விஷயங்களி லும் சிரத்தை காட்ட வேண்டி யிருப்பதால், ரஸ்தாவை நன்றாகக்

கவனிக்க போதிய பணவசதி இல்லை.

இதிலும் நாம் மேல் நாடுகளைப் பின்பற்ற வேண்டியதுதான். மேல் நாடுகளில் நாட்டு முன்னேற்றத்துக்கு ரஸ்தாக்கள் அவசியம் என்று ரஸ்தாக்களைச் சீர்படுத்த,புதிய ரஸ்தாக்கள் போட, நாட்டு வருமானத்தின் பெரும் பகுதியைச் செலவழிக்கின்றனர். இதற்கு வேண்டிய பணத்தை, வியாபார, கலால் வரிகளின் மூலம் சேர்க்க வேண்டும். ரஸ்தாக்கள் அமைப்பதோடு மட்டும் நின்று விடாமல் ரஸ்தாக்களை உபயோகப்படுத்த மோட்டார்களையும் உற்பத்தி செய்ய வேண்டும்.

இப்பொழுது இருக்கும் ரயில் பாதைகளும், ரஸ்தாக்களும் போதுமானதாகத் தோன்றினும், நம் நாடு பொருளாதாரத் துறையில் முன்னேறி பிற நாடுகளுடன் சரிநிகர் சமானமாக நிற்க, அவற்றில் மகத்தான மாறுதல்களும் புரட்சிகளும் தேவை. ரஸ்தாக்களும், ரயில் பாதைகளும் மட்டுமின்றி உள் நாட்டில் ஆறுகளையும் போக்குவரத்துச் சாதனங்களாக மாற்றுவதோடு மட்டுமல்லாமல், கரையோரக் கப்பல் போக்குவரத்தையும் கவனிக்க வேண்டும். தனி இன, மனித சலுகைகளைப் பார்க்காமல் நாட்டு முன்னேற்றத்தை மட்டும் குறிக் கோளாகக் கொண்டு நாட்டின் நலனைப் பெருக்க வேண்டும். இந்த விதமான புரட்சிகரமான மாறுதல்களைச் செய்ய மத்திய அரசாங்கம், மக்களுடைய நலனை, நல்வாழ்வைக் கருதும் சுதந்திர அரசாங்கமாக இருக்கவேண்டும்.

*

### அப்படியானால் நஷ்டமா?

ஒருவர் ஒரு வீட்டுக்குப் போயிருந்தார். அந்த வீட்டுக்காரியின் பிள்ளைகள் மூவரும் அங்கு கிடந்த நாற்காலி மேஜைகளைச் சேதப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த மூவரில் ஒருவன் ஒரு மேஜையின் மேல் வீணாக ஆணிகளை அடித்துக்கொண்டிருந்தான். இதைப் பார்த்ததும் அவர் வீட்டுக்காரியிடம், "உங்கள் குழந்தைகளை இப்படி விளையாட விடுவது, பொருள் நஷ்டமல்லவா?" என்று சொன்னார். அதற்கு, "நான்தான் மொத்த விலைக்கு ஆணிகளை விலைக்கு வாங்கி விடுகிறேனே, அதில் நஷ்டம் எப்படி வரும்?" என்று சொன்னாள் வீட்டுக்காரி.

—புளூபேர்டு பிரீப்ஸ்

### கேட்டது அதுதான்

ஒரு சங்கீதக்கச்சேரியில் ஒரு பாடகர் ஓயாமல் பாடிக்கொண்டிருந்தார். அவர் பாட்டு சபையோருக்குக் கர்ண கடூரமாக இருந்தது. சகிக்கவே முடியவில்லை. பாடகர் நிறுத்துவதாகவும் இல்லை. உடனே சபையிலிருந்து ஒருவன் எழுந்து, "உங்களுக்கு 'ஓயாத அடை மழை' என்ற பாட்டுத் தெரியும் அல்லவா?" என்று கேட்டான். "தெரியும்; பாடட்டுமா?" என்று கம்பீரமாகச் சொன்னார் பாடகர். "பாட வேண்டாம். தெரியுமா என்று கேட்டேன்" என்றான் அந்த ஆசாமி.

—எஸ். ஏ. உமன்ஸ் வீக்லி

மகான்களுடைய செயல்களைப் பற்றி அரிய நீதிபோதனைகளைப் புகட்டும் கதைகளை எல்லா நாட்டினரும் புனைந்திருக்கின்றனர். இங்கே காந்திமகான் உண்ணாவிரதம் முடித்தபோது ஒரு ஹரிஜனச் சிறுவனிடம் ஆரஞ்சுப் பழ ரசம் வாங்கி அருந்தியதாகவும், அப்போது ஹரிஜனச் சிறுவனிடம் பெரிய மாறுதல் ஏற்பட்டதாகவும் கூறி ஓர் அற்புதமான நாடகத்தைக் கற்பனை செய்திருக்கிறார் ஆசிரியர். உருக்கமான இந்த நாடகத்தை ஹிந்தியிலிருந்து மொழிபெயர்த்தவர் ஸ்ரீ. பி. ராஜேந்திரலால்.





# உலர்ந்த பழங்கள்



## சேத் கோவிந்ததாஸ்

### காட்சி 1

[ஏர்வாடா சிறையின் முற்றம். ஒரு பக்கத்தில் சிறைக் கூடங்களின் தோற்றம். மற்றொரு புறத்தில் சிறைச் சாலையின் உயர்ந்த மதில்கள். முற்றத்தின் நடுவே குளிர்ந்த நிழலைத் தரும் ஒரு மாமரம். அதன் கீழ் ஒரு கட்டிலில் மகாத்மா காந்தி படுத்துக் கொண்டிருக்கிறார். கட்டிலின் அருகே கீழே விரிக்கப்பட் டிருந்த பாய்களின்மேல் கஸ்தூரிபாய் காந்தி, வல்லபாய் பட்டேல், சரோஜனி நாயுடு, மகாதேவ தேசாய், பியாரேலால், விட்டோபா முதலானோர் உட்கார்ந்திருக்கிறார்கள். விட்டோபா கிட்டத்தட்ட 15 வயதான ஒரு ஹரிஜன். கறுத்து மெலிந்த சரீரம். உடுத்திருப்பது கந்தலான துணி. அதில் இங்கும் அங்கும் தையல்கள். காந்திஜியின் கட்டிலுக்கு அருகே உட்கார்ந்து கொண்டு அவருடன் பேசிக்கொண் டிருக்கிறான்.]

விட்டோபா: நான் மிகுந்த நம்பிக்கையுடன் தங்களிடம் வந்தேன் பாபுஜி!

காந்திஜி: (கல கலவென்று சிரித்துக்கொண்டே) ஆம், நான் அறிவேன்.

விட்டோபா: நான் வெறுங் கையுடன் திரும்பிச் செல்ல வேண்டுமென்பது தங்கள் விருப்பம் போலும், பாபுஜி?

காந்திஜி: (இன்னும் உரக்கச் சிரித்துக்கொண்டே) கை வெறுமையாகத்தா னிருக்கும். ஆனால் நான் உறுதி சொல்லி இருக்கிறேன் அல்லவா? அந்த உறுதி மொழியைப் பற்றி என்ன பயம் உனக்கு?

விட்டோபா: (ஏமாற்றமும், கவலையும் கலந்த முகக் குறிப்புடன்) உறுதிமொழி.........ஆம், பாபுஜி....உண்மைதான்... ஆனால் ...ஆனால்!...

மகாதேவ தேசாய்: (மணி பார்த்துக்கொண்டே) உனக்குக் கொடுக்கப்பட் டிருந்த சமயம் முடிந்துவிட்டது, அப்பா.

விட்டோபா: (இரக்கமில்லா நெஞ்சத்தாளைப் பார்ப்பதுபோல் விழித்துப் பார்த்துவிட்டுப் பிறகு காந்திஜியின் பக்கமாய்த் திரும்பி) ஆனால் இது நிச்சயமாகிவிட்ட படியால்...

காந்திஜி: (சிரித்துக் கொண்டே அவன் வாக்கியத்தை

முடிக்கு முன்) எனது உண்ணு விரதம் முடிகிற தினத்தன்று உனக்கு என் 'சிபார்சு'க் கடிதம் கிடைக்கும். (பிறகு தேசாய்க்குச் சைகை காட்டிக் கொண்டே) இப்போ நீ சிறை அதிகாரியின் கட்டளையை மதித்து நடக்க வேண்டும்.

[விட்டோபா மிகுந்த அவநம்பிக்கையுடன் காந்திஜியின் பாதங்களைத் தொட்டு வணங்குகிறுன். பிறகு போவதற்காகத் திரும்புகிறுன்.]

காந்திஜி: (ஏதோ யோசித்துக் கொண்டு சற்று உரத்த குரலில்) உன் பெயரென்ன சொன்னுய்? விட்டோபா தானே? விட்டோபா, நான் பிழைப்பது கடினமாயிற்றே, இறந்து போனுல் கொடுத்த வாக்குறுதியும் போய் விடுமே என்று கலங்குகிருய் நீ! நான் சாகமாட்டேன், பிழைத்துக் கொள்வேன். இன்னும் உயிர் வாழ வேண்டுமென்பது தான் என் விருப்பம். மேலும் என் உண்ணுவிரதம் முடிவடையும் போது நீ எனக்காகக் கொண்டு வரப்போகும் ஆரஞ்சுப் பழ ரசத்தை உட்கொண்டு தான் நான் என் உபவாசத்தை முடித்துக் கொள்ளப் போகிறேன்.

[விட்டோபாவுக்குப் பேசுவதற்கு நா எழவில்லை. வெட்கப்படுகிறுன்.]

காந்திஜி: தெரிந்ததா இப்போது? பாடசாலையில் மேலும், வாசிப்பதற்காக உனக்கு உதவி வேண்டும். அதற்காக ஒரு 'சிபார்சு'க் கடிதம் வேண்டுமென்று நீ என்னிடம் வந்தாய். ஆனுல் நானே உன்னிடம் ஆரஞ்சுப் பழங்களைக் கேட்கிறேன். கேட்க வந்த இடத்தில் கொடுக்க நேரிடுகிறதல்லவா? (பிறகு உரக்கச் சிரித்துக் கொண்டு) விட்டோபா, நான் ஒரு பனியா (வியாபாரி) ஒரு பக்கா பனியா!

விட்டோபா: (தளுதளுத்த குரலில்) பாபுஜி...பாபுஜி...

## காட்சி 2

[புனைவில் ஹரிஜனங்கள் வாழும் பகுதியில் விட்டோபாவின் குடிசை. நேரம்: காலை. வளைந்த கொம்புகளும், உடைந்த ஓடுகளும், பழைய தகரத் துண்டுகளும் நிறைந்த கூரை. குடிசையின் தளம் சாணத்தால் மெழுகப்பட்டு சுத்தமாயிருக்கிறது. முறிந்துபோன ஒரு கட்டிலும், மூலையில் உரல் திரிகைக்கல் முதலானவையும் கிடக்கின்றன. அம்மையும் அப்பனும் கிழிந்த துணிகளைச் சுற்றிக்கொண்டு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கின்றுர்கள். நான்கு வயதான ஒரு குழந்தை திரிகைக் கல்லுடன் விளையாடிக்கொண் டிருக்கிறது. ஒன்றரை வயசுக் குழந்தை ஒன்று அங்கு மிங்குமாகச் சுற்றிக்கொண் டிருக்கிறது. தாய் தன் ஆறு மாதக் குழந்தைக்குப் பாலூட்டிக்கொண் டிருக்கிறுள். குடிசையைப் பார்ப்போருக்கு விட்டோபாவின் குடும்பம் எவ்வளவு வறுமையில் ஆழ்ந்து கிடக்கிறதென்று புலப்படாமற் போகாது.]

தந்தை: தொடங்கும்போது நாலாவது வகுப்பு என்று சொன்னே! பிறகு 'மிடில் பாஸ்' பண்ணிவிட்டா போதும் என்று சொன்னே. இப்போ 'என்டிரன்ஸ்' பற்றிப் பேச ஆரம்பிச்சுட்டே. (இருமிக் கொண்டே) முடியாது அப்பனே, முடியாது. என்னிடம் ஒரு பைசா கூட இல்லை.

தாய்: வீட்டில் அரிசி இல்லை. துணி இல்லை. அப்படியிருக்க மகனே, உன் பள்ளிக்கூடச் செலவுக்காகப் பணம் எங்கிருந்து வரப்போகுது. உன் அப்பாவைப் பார்த்தியா? வயசு இன்

னும் நாற்பதுகூட ஆகவில்லையே கண்ணே! துரும்புபோல் இளைச்சுப் போய்விட்டாரே! பகலெல்லாம் வேலை. இரவெல்லாம் 'கொள்ளு கொள்ளு' என்று ஓயாத இருமல். எவ்வளவு நாளைக்குத்தான் அவர் இன்னும் சம்பாதித்துக்கொண் டிருப்பார், அப்பனே?

தந்தை: உன் அக்கா எல்லோருக்கும் மூத்தவள். கல்யாணம் ஆகும் வரையிலும் ஏதோ சம்பாதிச்சு குடும்பத்துக்கு உதவிக்கொண்டிருந்தாள். இனி உன்னிடத்தில் தான் நான் என் ஆசை எல்லாம் வைச்சுக்கொண் டிருக்கேன். ஆனால் உன் கவனமெல்லாம் படிப்பு படிப்பு என்று எங்கேயோ யிருக்கிறது. (இருமுகிறான்) என்ன செய்யட்டும்!

தாய்: மகனே! நீ படிச்சுப் பெரியவனானாலும் ஆடு மாடுகளைத் தானே மேய்க்க வேண்டும். இந்தத் தேசத்திலே நாம் எல்லோரும் கீழ்ச் சாதி மக்கள் தானே? நம்மால் என்ன செய்துவிட முடியும்?

விட்டோ: அம்மா! என்னால் பொறுக்க முடியவில்லை—நிறுத்துங்கோ பேச்சை. படித்த பிறகு என்ன செய்யப் போகிறேனோ, இப்போது சொல்ல முடியாது. ஆனால் இப்போ நாம் ஹரிஜனங்கள். தெரிந்து கொண்டீர்களா ஹரிஜனங்கள் என்பதை?

தந்தை: (வெறுப்புடன் நகைத்துக் கொண்டே) காந்திஜி நமக்கு ஹரிஜன் என்ற பேரைக் கொடுத்திட்டாரு. எல்லா சாதியாரைக் காட்டிலும் ஒசந்துவிட்டோம் இப்போ. ஏன், பகவானின் சாதியார் ஆய்விட்டோமல்லவா? நம்மோடு சேந்தா, பகவான் தாழ்ந்து போனாலும் போகலாம். ஆனால் நாம் ஒருபோதும் ஒசந்தசாதி ஆகிவிடப்போவதில்லை. அப்பா. இப்போது நம்மைப் பங்கி என்றும் சக்கிலி என்றும் பேசுறாங்கோ. கொஞ்ச காலம் போனா ஹரிசனங்கோ என்று நம்மைத் திட்டுவாங்கோ. (இருமுகிறான்)

தாய்: மகனே, வேலை ஏதாவது செய்து உன் தகப்பனுக்கு உபகாரம் செய். நானோ குழந்தைகளை வச்சுக்கொண்டு தட்டழிகிறேன். அந்த ஒரு உசிர் எத்தனை நாளைக்கு நம்மெல்லோரையும் காப்பாத்தப் போவுது?

தந்தை: (இருமிக்கொண்டே) அப்படியிருந்தும் எவ்வளவு வேலை செய்துகொண் டிருக்கே அம்மா?

(சில ஹரிஜன் பிள்ளைகள் நுழைகிறார்கள் வீட்டுக்குள்)

முதல் பையன்: அடே விட்டோ, கேட்டாயா சமாசாரம்!

விட்டோ: என்னடா அது?

இரண்டாவது பையன்: காந்தியின் உண்ணாவிரதம் இண்ணைக்கு முடியுதாம்.

விட்டோ: அப்படியா, நல்லது.

மூன்றாவது பையன்: இண்ணைக்கு ஹரிஜன் பிள்ளைகளுக்கெல்லாம் லட்டு கொடுப்பாங்களாம்!

முதல் பை: அடே, உனக்கு மட்டிலும் 5-சேர் மிட்டாய் கிடைக்குமடா.

இ. பை: ஆம் நீ ஜெயிலுக்குப் போய் அவரைப் பார்த்தாயல்லவா?

தாய்: இவன், ஏன் ஜெயிலுக்குப் போகிறான்?

தந்தை: அப்படி என்ன குற்றம் செய்தான்?

இ. பை: குற்றம் ஒண்ணும் செய்யலே தாத்தா. காந்தி

யைப் பார்க்கப் போயிருந்தான் ஒருநாள்.

மூ. பை: நல்லது வாங்கோடா, நாமெல்லாரும் ஏர்வடா போவோம். விட்டோ நீயும் வாராயா? மிட்டாய் கிடைக்கும் ரொம்ப ரொம்ப.

விட்டோ: (சற்று யோசிக்கிருன்) அப்பா. எனக்கு நாலணு தாங்கோ.

தந்தை: (ஆச்சரியத்துடன்) என்ன சொன்னே!

விட்டோ: நாலணு வேணும் அப்பா.

தந்தை: நாலணு-16 பைசாவா? 48 சல்லிக்காசுகளா வேண்டும்! (இருமுகிருன்)

விட்டோ: ஒரு கப்பு ஆரஞ்சுப் பழம் சாறு எடுக்க எத்தனை பழம் வாங்கவேண்டும் அப்பா? நாலணுவுக்கு வாங்கினுப் போதுமல்லவா?

தந்தை: வெறுங் கடலைகூட வாங்க என்னிடம் காசில்லே. உனக்கு ஆரஞ்சு ரசம்; அதுவும் ஒரு கப்.

பள்ளிப் படிப்பின் பலன் அப்பா இது. தகப்பன் செக்கு மாடுபோல் உழைக்கிருன். தாய் காஞ்சு போன ரொட்டித் துண்டுக்குத் தவியாத்தவிக்கிரு. குழந்தை சொட்டுப் பாலுக்கு அலறிக் கிடக்குது. உனக்கு நாலணு ஆரஞ்சுப்பழம். நல்லா இருக்கு வேடிக்கை!

விட்டோ: எனக்காக அல்ல அப்பா!

தந்தை: வேறு யாருக்கு?

விட்டோ: காந்திஜி என்னுடைய ஆரஞ்சுப்பழங்களின் ரசத்தை உண்டு உண்ணுவிரதத்தை முடித்துக்கொள்ளப் போகிருர்.

தந்தை: அடே உனக்கு மூளைக் கோளாறு ஒண்ணும் இல்லையே? ஏன் இப்படி உளறுகிறே?

விட்டோ: ஆம், அப்பா அப்படியே என்னிடம் சொல்லியிருக்கார். சீக்கிரந் தாருங்கோ. இல்லாவிட்டால் நேரமாகிவிடும்.

தந்தை: அடே, காந்தியின் உபவாசத்திற்காக நான் எங்கேயடா நாலணு சேர்த்து வைத்திருக்கேன்?

விட்டோ: இந்த ஒரு தடவை. இனிமேல் கேட்கவே மாட்டேன். பள்ளிக்கூடத்தையும் விட்டுவிடுகிறேன். இனிமேல் வேலைசெய்து உங்களுக்கு உபகாரம் செய்வேன். இப்போ மட்டிலும் நாலணு கொடுத்து உதவுங்கோ!

தந்தை: நாலு பைசாகூட இப்போ வீட்டிலே இல்லையே, மகனே!

விட்டோ: அம்மா, உன்னிடமிருந்தால் தரமாட்டாயா?

தாய்: மகனே, என்னிடமிருந்தால் நீ இப்படித் தவிப்பதைப் பார்த்துக்கொண்டிருப்பேனு?

[விட்டோபாவின் கண்களில் நீர் ததும்புகிறது. தாயும் தந்தையும் அவனைப் பார்க்கிருர்கள். சில நிமிஷம் அமைதி—பிறகு விட்டோபா திடீரென்று வெளியே செல்கிருன்.]

தந்தை: அடே விட்டோ! எங்கேடா போகிருய்......அடே விட்டோ!!

[விட்டோபா பழம் வாங்கணும்; ஏர்வாடா போகணும்; நேரமாய் விட்டதே, என்ன செய்வேன்! என்று சொல்லிக் கொண்டே விரைந்து போகிருன்.]

தந்தை: (இருமிக்கொண்டே மனைவியை நோக்கி) இவனுக்குப் பைத்தியம் பிடித்துப் போச்சா என்ன? ஆ தெய்வமே!

காட்சி 3

[புற நகரத்தில் ஒரு பழக்கடை. காந்திஜியின் உண்ணாவிரத முடிவு நாள். காலை நேரம். ஆரஞ்சுப்பழங்களின் விலை நிமிஷத்துக்கு நிமிஷம் ஏறிக்கொண்டே போகிறது. பஜாரில் பழங்களும் கிடைப்பது கஷ்டமாகிவிட்டது. மார்வாடி, குஜராத்தி, பார்ஸி வகுப்பைச் சேர்ந்தவர்கள் விலைகளைக் கவனிக்காமல் கூடை கூடையாகப் பழங்களை அள்ளிக்கொண்டு போகிறார்கள். அப்போது விட்டோபா ஒரு கடைக்காரனிடம் விரைந்து செல்கிறான்.]

விட்டோ: ஒரு கப் ரஸம் எடுப்பதற்கு எத்தனை ஆரஞ்சுப் பழங்கள் வேண்டுமையா?

கடைக்காரன்: ஒவ்வொன்றாக வாங்கிச் சாறு பிழிந்துபார். கப் நிறைந்துவிட்டால் எத்தனை பழங்கள் வேண்டுமென்று தெரிந்துவிடுமல்லவா? (என்று சொல்லிக்கொண்டே சிரிக்கிறான்.)

விட்டோ: இந்த ஏழைக்கு ஒரு கப் நிறைய ரஸம் வேண்டும். அவ்வளவு பழங்கள் தான் தேவை.

க. கா: பஜாரில் உள்ள பழங்கள் எல்லாம் காலி. உயர்ந்த ரகப் பழங்கள்தான் என்னிடம் இருக்கிறது. எட்டணாவுக்கு மூன்று.

விட்டோ: எட்டு அணாவுக்கு மூன்றா?

வேறு க. கா: விடியும்போதே வரக்கூடாதா?

விட்டோ: பைசா, இப்போதே கொடுக்க வேண்டுமோ?

க. கா: இது பழக்கடை அப்பா. திருட்டுச் சாமானைக் கைமாற்றும் கள்ள மார்க்கட்டு அல்ல கடன் கொடுப்பதற்கு, தெரிஞ்சுகிட்டாயா?

[விட்டோபா கடைக்காரன் காதில் ரகசியமாக ஏதோ சொல்கிறான், கடைக்காரன் விழுந்து விழுந்து சிரிக்கிறான்.]

முதல் க. கா: அடே அப்பா வயிறு வெடிச்சுப் போகும் போலிருக்கே! இப்படி ஏனப்பா சிரிக்கிறே! சில மனுஷா விடாமல் சிரிப்பாங்கோ; சிலர் விடாமல் அழுவாங்கோ; 'ஹிஸ்டிரியோ' என்னவோ பேர் சொல்லுவாங்களே?

பக்கத்தில் நிற்பவர்: அதற்கு 'ஹிஸ்டிரியா' என்று சொல்வார்கள்.

இரண்டாவது க. கா: என்ன ஐயா சேதி? சொல்லிவிட்டுச் சிரி ஐயா!

முதல் க. கா: (விட்டோபாவைச் சுட்டிக் காட்டி) இந்த மகான் கொண்டுபோகும் ஆரஞ்சுப் பழ ரசத்தைக் காந்திஜி இன்று சாப்பிட்டுத் தமது உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்ளப் போவதாய் உறுதி சொல்லியிருக்கிறாராம். இதைக் கேட்டால் சிரிப்பு வருமா வராதா சொல்லுங்கள் (என்று சொல்லிக்கொண்டே சிரிக்கிறான்.)

விட்டோ: (ஈனக் குரலில்) உங்களில் யாராவது என்னுடன் வந்து நான் சொல்வது உண்மையா, பொய்யா என்று பாருங்கள். நான் சொல்வது உண்மையானால் பைசாவை இழந்து விடுவீர்களா?

மூன்றாவது க. கா: அடே இப்படி எத்தனை சோதாக்கள் புறப்பட்டிருக்கிறீங்கோ? காந்தியாம்; இவர் தரும் ரசத்தை உண்பாராம்; என்னவெல்லாம் கதை அளக்கிறாங்கோ பார்த்தீங்களா?

ஒரு கிறிஸ்தவர்: (கடைக்காரனிடம்) ஆரஞ்சு இருக்கிறதா?

நான்காவது க.கா : உயர்ந்த சாதிப் பழங்களே கிடைக்கும். டஜன் ரூ 2.

கிறிஸ்தவர்: அடே அப்பா டஜன் இரண்டு ரூபாயா?

நா. க கா: கொஞ்ச நேரத்தில் ரூ. 3 ஆகிவிடும்.

கிறிஸ்தவர்: சரி உம்மிடத்தில் இருப்பதை எல்லாம் கொடும்.

விட்டோ: (சோர்ந்த முகத்துடன் ஐந்தாவது கடைக்காரனிடம் சென்று) ஐயா எனக்கு மூன்று பழங்களைக் கொடுத்தால்......

ஐ. க. கா: சும்மாவா? இது வியாபாரஸ்தலம் அப்பா. தர்ம சத்திரமல்ல; தெரியுதா?

[பெருமூச்சு விட்டுக் கொண்டே விட்டோபா அவ்விடத்தை விட்டுச் செல்கின்றான்.]

காட்சி 4

[ஒரு வீட்டின் முன் பி. டி. தேசாய் பி. எ., எல். எல். பி. அட்வொகேட், என்று போர்டு தொங்குகிறது. மிகுந்த பரபரப்புடன் விட்டோபா அவ் வீட்டுக்குள் நுழைகிறான்.]

விட்டோ: அட்வொகேட் சாகிப், அட்வொகேட் சாகிப்.

[ஐரோப்பிய உடைகளைத் தரித்துக் கொண்டு ஒரு கனவான் உள்ளேயிருந்து வருகிறார்.]

விட்டோ: அட்வொகேட் சாகிப்!

அட்வொகேட்: என்ன? கேஸ் ஏதாவது கொண்டு வந்திருக்கிறாயா? நீ சக்கிலியனா?

விட்டோ: ஆம், சாகிப் நான் ஒரு சக்கிலியன்தான்......ஆனால்

அட்வொகேட்: குடிவெறியால் ஏற்பட்ட சண்டையா அல்லது கொலையா?

விட்டோ: இல்லை சாகிப்.

அட்வொகேட்: சாதாரணச் சண்டையா? நான் முதலாவது பீஸ் வாங்கிக்கொள்ளாமல் வழக்காடுவது கிடையாது. நீ ஏழை; ஆகையால் ஏதாவது ரூபாய் ஒன்றோ, அரையோ நாலணாவோ கொடு முதலாவது.

விட்டோ: அப்படி ஒன்றும் இல்லை சாகிப்,

அட்வொகேட்: பிறகு என் நேரத்தை ஏன் வீணாக்குகிறாய்? டாம் ஸ்டுபிட்!

விட்டோ: நான் பாபுவுக்காக......

அட்வொ: எந்த பாபு......

விட்டோ: மகாத்மா காந்தி.

அட்வொ: அடே போடா பைத்தியம்! அவர் பட்டினி கிடந்து சாகப்போகிறார்...... (என்று சொல்லிக்கொண்டே உள்ளே போகிறார்)

விட்டோ: இல்லை இல்லை, சொல்வதை சற்றுக் கேளுங்கள் சாகிப்.

[அட்வொகேட் சாகிப் திரும்பிப் பாராமலே உள்ளே போய்விடுகிறார். ஏமாற்றமடைந்த விட்டோபா அடுத்திருந்த ஒரு டாக்டரின் வீட்டுக்குள் நுழைந்துவிடுகிறான். சி. ஆர். போபட்கார் எம். பி. பி. எஸ். என்ற போர்டு தொங்குகிறது]

விட்டோ: டாக்டர் சாகிப்!

டாக்டர்: என்ன காலரா கேஸா? பார்த்தால் சக்கிலி போல் தோன்றுகிறதே!

விட்டோ: ஆம் சாகிப்; நான் ஒரு சக்கிலிதான்.

டாக்டர்: நீங்கள் அசுத்தமாயிருக்கிறீர்கள். செத்த பிராணிகளின் மாமிசம் சாப்பிடுகிறீர்கள். கெட்ட தண்ணீரைக் குடிக்கிறீர்கள். இதனால்தான் உங்களிடையே காலரா பரவுகிறது. இது செப்டம்பர், காலராக் காலம், ரூ 5. பீஸ்வாங்காமல் காலரா கேசுகளைக் கவனிக்க மாட்டோம்.

விட்டோ: நான் தங்களை நோயாளியிடம் அழைத்துச் செல்ல வரவில்லை.

டாக்டர்: இல்லை என்றால் சர்ட்டிபிக்கெட் ஏதாவது வாங்க வந்தாயா? இரகசியம் ஏதாவது சொல்லவேண்டுமா?

விட்டோ: அப்படி ஒன்றும் இல்லை சாகிப். நான் பாபுஜியின் உண்ணாவிரதத்தின்......

டாக்டர்: யார் பாபு? என்ன விரதம்?

விட்டோ: காந்திஜி இப்போ உண்ணா விரதமொன்றை ஆரம்பித்திருக்கிறார் தெரியாதா?

டாக்டர்: எனக்கு ஒன்றும் தெரியாது. பத்திரிகை வாசிப்பதற்குக் கூட நேரம் கிடையாது. (என்று சொல்லிக் கொண்டே எழுந்து உள்ளே போய்விடுகிறார்.)

காட்சி 5

[புனாவில் வேறொரு பஜாருக்குச் செல்கிறான் விட்டோபா. தெருவின் இரு புறங்களிலும் பழக்கடைகளின் வரிசை. விட்டோபா ஒரு பழக் கடைக்காரனிடம் போகிறான்.]

விட்டோ: இன்று சாயங்காலத்துக்குள் எட்டணாவையும் கட்டாயமாகத் திரும்பத் தந்து விடுவேன்.

க. கா: (கோபத்துடன்) சொன்னேன் ஒரு தடவை, இரண்டு தடவையும் சொல்லி விட்டேன். இங்கே பணக் கொடுக்கல் வாங்கல் கிடையாது.

விட்டோ: தாங்கள் சொல்வது சரிதான். ஆனால் எட்டு அணா கொடுத்தால் என்ன குறைந்துபோகும் தங்களைப் போலொத்தவருக்கு?

க. கா: அடே, போகிறாயா? உதை வேண்டுமா?

வேறொருவன்: பேரணி ஆவதற்கு முன்பே இப் பிச்சைக்காரர்களின் தொல்லை ஆரம்பமாகி விட்டதப்பா?

விட்டோ: பிச்சை வாங்கிப் பிழைப்பது என் தொழில் அல்ல. என்னைப்போன்றவர்கள் நிதமும் எல்லாப் போதும் இப்படி வர மாட்டார்கள். நான் கொண்டு வரும் பழங்களின் ரசத்தினால் இன்று காந்திஜி தமது உண்ணா விரதத்தை முடிக்கப் போகிறார். கேவலம் எட்டு அணாதான் வேண்டும்!

ஒரு க. காரன்: பிச்சை வாங்குவது பிழைப்பதற்கு ஒரு புதிய வழியாகிவிட்டது இப்போது!

வேறொருவன்: இங்கிலாந்தைப் போலவே நாம நம் நாட்டிலும் பிச்சைக்காரர்களை அடக்க வேண்டும். நம்முடைய எம். எல். ஏ. இடம் எத்தனையோ தடவை இவ் விஷயமாய் ஒரு 'பில்' கொண்டு வரவேண்டுமென்று சொன்னேன். கேட்கிறார்களில்லையே!

விட்டோ: மூன்றே மூன்று பழங்கள்தான் ஐயா, ஒரு கப் ரசம். என்னோடு வந்துதான் கொஞ்சம் பாருங்களேன், பாபுஜி என் கையால் ரஸத்தை வாங்கிக் குடிக்கிறாரா இல்லையா என்று!

[இதை ஒரு முஸ்லிம் கடைக்காரன் கவனித்துக்கொண்டிருக்கிறான். பையனிடம் அவனுக்கு அனுதாபம் உண்டாகிறது.]

முஸ்லிம் க. கா: உன்னிடத்தில் எனக்குக் கொஞ்சம் நம்பிக்கை உண்டாகிறது. இதோ எடுத்துக்கொள் (என்று சொல்லி எட்டணா கொடுக்கிறான்.)

[அணாவைப் பெற்றுக்கொண்ட விட்டோபாவின் முகத்தில் ஒரு புதிய ஒளி வீசிற்று. உலகெங்குமுள்ள செல்வங்களுக்கெல்லாம் முதல்வனாகிவிட்டதாய் உள்ளம் பூரிப்பது போலிருந்தது அவனது

# இந்த ஸோப் உங்கள் அஜீரணத்தைக் குணப்படுத்தாது!



காந்தி ஸோப் உங்கள் சருமத்தை வழவழப்பான வெல்வெட்டாக மாற்றி விடு மென்றுவது, காதலுக்குக் காரணமாகு மென்றுவது நாங்கள் உறிதி மொழி கூற வில்லை. இவ்வித குணங்கள் உண்டென்று சொல்லிக் கொண்டோமானுல் அடுத்த படியாக காந்தி ஸோப் அஜீரணத்தைப் போக்க வல்லது என்று கூடச் சொல்ல வேண்டியிருக்கும்.

ஆனுல் காந்தி ஸோப்

- ஓர் உயர்தர ஸ்தான ஸோப் என்றும்
- அது அழுக்கை நன்ருகப்போக்கடிக்கும் என்றும்
- அது மிருதுவான சருமத்துக்கும் எரிச்சலையாவது கெடுதலையாவது உண்டாக்காது என்றும்
- திருப்தி அடையும்படியான அளவுள்ள வாசனை யுடையதென்றும் உறுதியாய் சொல்லுவோம். நீங்கள் இதை உபயோகிக்க பிரயத்னப்படு கிறீர்களா ?

இதர உயர்தர ஸ்வஸ்திக் தயாரிப்புகள் சீகைக்காய் சோப், பரிமள ஆமணக்கெண்ணை. ஸ்வஸ்திக் க்ஷவர ஸோப், சல வை ஸோப்புகள் கோவானின் மார்க் வனஸ்பதி முதலியன.



## காந்தி ஸோப்

SHILPI

Som. 17—Tam3

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட் பம்பாய்.



பட்டு
என்றால் மிருதுவாயுள்ளது
அது மைசூர் பட்டானால் ச்பர்சத்திற்கு மிருதுவாயுள்ளதுடன் உயர்ந்த நெசவு, அதிகநாள் உழைப்பு, மேலான ரகம் எல்லாம்சேர்ந்து மிக அழகானதாகும்.
மைசூர் சில்க்
மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு
கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரீ, மைசூர்.
MSK-II-TM




ஸாரிடோன்
10 Saridon
ANALGESIC TABLETS
வலியை வெகு சீக்கிரமாக போக்குகிறது

முகத் தோற்றம். கரை கடந்த நன்றி உணர்ச்சியுடன் அவன் அம் முஸ்லிம் வியாபாரியைச் சிறிது நேரம் அன்பாகப் பார்த்துச் சிரித்துக்கொண்டே ஓடுகிருன்.]

கடைக்காரன்: (முஸ்லிமை நோக்கி) சிறு பையன் உங்களை ஏமாற்றிவிட்டுப் போய் விட்டானே ஐயா. எப்படிப் பட்ட பெரியவர்கள் எல்லாமோ இன்று கூடை கூடையாகப் பழங்களைக் கொண்டு போய்க் குவித்து விடுவார்களே. அவற்றை எல்லாம் விட்டுவிட்டு இந்தப் பிச்சைக்காரனுடைய பழ ரசத்தையா மகாத்மாஜி வாங்கி உண்டு தமது விரதத்தை முடிக்கப் போகிருர்? நல்ல வேடிக்கை!

விட்டோ: (கிழ வியாபாரியிடம்) உன்னிடம் ஆரஞ்சு இருக்கிறதா?

கிழ வியாபாரி: என்னிடம் நாலுபழங்கள்தான் மிச்சம். எட்டு அணு தந்தால் கொடுக்கிறேன்.

விட்டோ: பழத்தை வாங்கிப் பார்க்கிருன்—பழங்கள் உலர்ந்து போயிருந்தன என்ருலும் கிடைத்து விட்டதென்ற மகிழ்ச்சியினுல் அவற்றை எடுத்துக் கொண்டு ஓடுகிருன்.

### காட்சி 6

[ஏர்வாடா ஜெயில்—சரோஜினி தேவி ஓர் அறையில் உட்கார்ந்து இருக்கிருர். ஆரஞ்சுப் பழக் கூடைகள் வரிசை வரிசையாகவும் ஒன்றின்மேலொன்ருகவும் வைக்கப்பட் டிருக்கின்றன. அவைகளில் கார்டுகளும் கடிதங்களும், செருகி வைக்கப் பட்டிருக்கின்றன. சரோஜினிதேவி அவற்றை ஒவ்வொன்ருகப் பார்வையிடுகிருர்: 'இது சர் புருஷோத்தம தாஸ் தாகூர் தாஸ் அனுப்பியது'—'ஓ! இது சர் குவாஸ்ஜி யிட்மிருந்து—இவை சேட்லால் சந்தின் சொந்தத் தோட்டத்தில் காய்த்தவை—நல்லது இவை பிர்லா பிரதர்ஸின் நன்கொடை — ஆஹா! இவை ரஹ்மத்துல்லாவின் தோட்டத்தில் முதலாவது பழுத்த பழங்கள். இவை ஹிஸ் ஹைனஸ் போபால் நவாப்பின் அன்பளிப்பு'—என்று வாசித்துக் கொண்டேயிருக்கிருர்.

ஏர்வாடா சிறைக் கோட்டதின் முற்றத்திலிருந்த மாமரத்தின் கீழ் ஒரு கட்டிலின் மீது காந்திஜி உட்கார்ந்திருக்கிருர். உபவாசத்தினுல் ஏற்பட்ட களைப்பு அவருடைய முகத்திலும் உடம்பிலும் தெளிவாய்த் தெரிகிறது. அன்னை கஸ்தூரிபாய் காந்தி கால்மாட்டில் உட்கார்ந்திருக்கிருர். அருகே நாற்காலியின் மீது கவியரசர் ரவீந்திரநாத தாகூர் வீற்றிருக்கிருர். சரோஜினிதேவி ஆரஞ்சுப் பழங்களின் ரசத்தைப் பிழிந்து கொண்டிருக்கிருர்—சர்தார் பட்டேல், ராஜாஜி, ஆண்டிருஸ் துரைமகனுர், நரிமென், டாக்டர் அம்பேத்கார், ராஜ்போஜ், மகாதேவ் தேசாய், மிஸ் ரிஹாணு தயாப்ஜி, முதலானேர் அங்கிருந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். தவிர பிரபல வியாபாரிகளும், பெருந்தனம் படைத்த பெரியார்களும் அங்கே பிரசன்னமாயிருந்தனர்.

உண்ணுவிரதம் நிறுத்தப்போவதாக மகாத்மா காந்தி தெரிவித்துக் கொண்டதும் குருதேவர் ரவீந்திரநாததாகூர் வங்காளியில் ஒரு கீதம் பாடினுர். பிறகு மிஸ் ரிஹாணு தயாப்ஜி ஒரு பாட்டுப் பாடினுர். அதைத் தொடர்ந்து ஆண்டிருஸ் துரைமகனுர் ஓர் ஆங்கில கீதத்தை இசைத்தார். கடைசியாக எல்லோரும் சேர்ந்து காந்திஜிக்குப் பிரியமானதும் பிரசித்திபெற்றதுமான 'வைஷ்ணவஜனதோ' என்ற, உண்மையானவைணவனைச் சிறப்பித்துக் கூறும் பாட்டைப் பாடினுர்கள்.

பாட்டு முடிந்ததும் மகாதேவ் தேசாயும், பியாரேலாலும் காந்திஜியைத் தூக்கி உட்காரவைக்கிறார்கள். ஒரு தலையணை பின்தாங்க காந்திஜி உட்கார்ந்து கொள்கிறார். சரோஜினிதேவி கையில் ஒரு கிண்ணம் நிறைய ஆரஞ்சுப்பழ ரசத்தை ஏந்திக்கொண்டு காந்திஜியின் பக்கமாகப்போகிறார். காந்திஜியும் கையை நீட்டுகிறார். உடனே ஏதோ ஞாபகம் வர நீட்டிய கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு விசாரிக்கிறார்.]

காந்திஜி: நான் ஒரு ஹரிஜன் இளைஞனிடம் உண்ணாவிரதம் முடியும் போது அவன் தரும் பழரசத்தை அருந்துவேன் என்று சொல்லியிருந்தேனே? அவன் பெயர்......

மகாதேவ்: விட்டோபா

காந்திஜி: ஆம், விட்டோபா. அவனை எங்கேயாவது.....

[இவ்வாறு சொல்லிவிட்டு காந்திஜி படுத்துக் கொள்ளுகிறார். கூட்டத்தில் ஒரு வகையான பரபரப்பு. 'விட்டோபாவைத் தேடுங்கள்,' 'அவன் எங்கே போனான்?' என்று எங்கும் ஒரே சப்தம். அப்போது திடீரென்று விட்டோபா பிரவேசிக்கிறான். கையில் நான்கு உலர்ந்த ஆரஞ்சுப்பழங்களை வைத்திருக்கிறான். எல்லோரும் அவனை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டே ஒரு பெரிய மகானுக்கு வழி விடுவது போல் ஒதுங்கிக் கொள்ளுகிறார்கள். விட்டோபா நேராக காந்திஜியிடம் செல்கிறான்.]

விட்டோ: பாபுஜி...தாங்கள் உபவாசத்தை நிறுத்திக் கொண்டீர்களா?

காந்திஜி: நிறுத்தவில்லை விட்டோபா. உனது வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

விட்டோ: (தான் கொண்டு வந்த பழங்களைக் காந்திஜியின் பக்கத்தில் வைத்துவிட்டு) ஆனால் பாபுஜி, இந்த உலர்ந்துபோன பழங்களிலிருந்து ஒரு கப் ரஸம் கூடக் கிடைக்காது என்று எண்ணுகிறேன். நல்ல...காய்ந்து போய்விட்டதே!

காந்திஜி: ஒரு மடக்காவது கிடைக்குமல்லவா?

[சரோஜினிதேவி ஒரு பழத்தை எடுத்து உரிக்கிறார்.]

காந்திஜி: (மேலும் சற்று உரக்கச் சிரிக்கிறார். உபவாசத்தால் ஏற்பட்ட தளர்ச்சி அவருடைய குரலிலும் காண்கிறது.) விட்டோபா நான் சாகமாட்டேன் என்று உன்னிடஞ் சொன்னேன் அல்லவா? தவிர நான் ஒரு பக்கா பனியா என்பதும் தெளிவாகிவிட்ட தல்லவா? உன்னிடமிருந்து பழங்களைப் பெற்றுக்கொண்டுதான் உனக்குச் 'சிபார்சு'க் கடிதம் கொடுக்கப் போகிறேன். பார்த்தாயா?

விட்டோ: ஆனால் பாபுஜி, பழங்கள் வாடிப்போய்விட்டனவே!

காந்திஜி: (மேலும் சிரித்துக் கொண்டே) பழங்களில் எவ்வளவு ஈரம் குறைவோ அவ்வளவு நான் உனக்குக் கொடுக்கும் கடிதத்திலும் குறைவாகத் தானிருக்கும்.

[சரோஜினி தேவியார் அரைக் கிண்ணம் ஆரஞ்சு ரசம் கொண்டு வந்து கொடுக்கிறார். விட்டோபா கொண்டு வந்த பழங்களின் சாறு தான் இது. காந்திஜி அதை வாங்கிப் பருகிக் கொள்ளுகிறார். கூடியிருந்தோர் 'மகாத்மா காந்திக்கு ஜே!' 'பாரதமாதா நீடுழி வாழ்க!' 'வாழ்க ஹரிஜனர்!' என்று முழங்குகின்றனர்.

காந்திஜி: விட்டோபா இனி நான் உனக்குக் கடிதம் தருகிறேன். மேலும் படிக்க உதவி வேண்டுமல்லவா உனக்கு?

ஒரு மார்வாடி: விட்டோபா, மேலும் படிக்க விரும்புகிறாயா?

காந்திஜி: ஆம், என்னிடம் 'ஸ்பார்சு'க் கடிதம் வேண்டுமென்று கேட்டான்.

மார்வாடி: அந்தச் சிரமம் பாபுஜிக்கு வேண்டாம். அவன் படிப்புக்கு வேண்டிய செலவுகள் அனைத்தையும் நானே ஏற்றுக் கொள்ளுகிறேன்.

கவி ரவீந்திரர்: அவனை விஸ்வ பாரதிக்கு அனுப்பி விடுவது தானே!

ஆண்டிரூஸ்: ரொம்ப சரி.

விட்டோ: வேண்டாம் பாபுஜி, எனக்கு இனிமேல் படிக்க விருப்பமில்லை!

காந்திஜி: விருப்பமில்லையா? (ஆச்சரியத்துடன்)

விட்டோ: இல்லை பாபுஜி. ஆங்கிலம் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசை இருந்தது. ஆங்கிலங் கற்றுத் தேர்ந்தவர்களைப் பார்த்துவிட்டேன். ஆங்கிலத்தின் மீது எனக்கிருந்த மோகம் என்னை விட்டு நீங்கி விட்டது. இனி நான் என் தாய் தந்தையருக்கும் இழிந்த நிலையிலிருக்கும் எனது சமூகத்தவருக்குமே தொண்டு புரியக் கற்றுக் கொள்ள வேண்டும். அதற்குப் போதுமான கல்வியறிவைப் பெற்றிருக்கிறேன். எங்கள் சாதியாரின் முன்னேற்றத்துக்காகத் தாங்கள் எவ்வளவு! மகத்தான தியாகங்களைச் செய்திருக்கிறீர்கள். தாங்கள் உயிரையும் பணயம் வைத்து உண்ணாவிரதத்தையும் மேற்கொண்டீர்கள். ஆகையால் பாபுஜி, எவனொருவன் தந்த பழங்களின் ரஸத்தினால் தங்கள் விரதம் வெற்றிகரமாய் முடிந்ததோ அவனால் இனி ஒரு போதும் தன்னலப் பிரியனாய் வாழ முடியாது.

காந்திஜி: ஆஹா! விட்டோபா, நீ என்னையே ஏமாற்றி விட்டாய்! நீ சில பழங்களைத் தந்து என்னை உன் சமூகத்தவரிடம் அடகு வைத்துவிட்டாய். இனி நான் உங்களுக்குத் தொண்டு புரிந்து இப் பிறவியிலேயே என் கடனைத் தீர்த்துக் கொள்ள விரும்புகிறேன். அவ்வாறு செய்யத் தவறினால் எனது மறு பிறப்பிலாவது நான் ஹரிஜனங்களுக்குச் சேவை புரிந்து என் கடனைச் செலுத்திவிடுவேன். தெரிந்துகொண்டாயா?

[உள்ளமுருகும் இவ் வார்த்தைகளைக் கேட்டதும் எல்லோருடைய கண்களிலிருந்தும் கண்ணீர் அரும்பி வழிந்தோடுகிறது.]

### பசுவில்லாத பால்காரன்

வீ அலெக் என்ற சிறுவன் விடுமுறைக்காகக் கிராமத்துக்குப் போயிருந்தான். அங்கே முதல்முதலாகப் பசுவிலிருந்து கறந்து அப்படியே கொணடு வரப்பட்ட பாலைக் குடித்தான். நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு அவன் சொன்னதாவது:

"எங்கள் வீட்டுப் பால்காரனும் ஒரு பசு வைத்துக் கொள்ளக் கூடாதா?"

—ஈ. ஈ. கியூஸ்

### அங்கும் இங்கும்

டில்லி வண்ணான் வெளுத்தால் துணி அதிக நாட்களுக்குக் கிழியாமல் இருக்கும்; பாகிஸ்தான் லாண்டிரிகளில் எப்போது போய்க் கேட்டாலும் துணி வெளுத்து முடிந்திருக்காது.

—ஜன், லங்

*புகைக் குடியைப்பற்றி மகாத்மாக்களும், கோடீஸ்வரர்களும், புரட்சிக்காரர்களும், விஞ்ஞானிகளும் என்ன சொல்லுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டாமா? அவர்களுடைய கூற்றைத் திரட்டித் தருகிறது கட்டுரை. ஏஷியாடிக் டைஜஸ்ட்டிலிருந்து.*

# விஷப் புகை

**எஸ். என். மோசஸ்**

புகை பிடித்தல் நாகரிகப் பழக்கங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. 'பெரிய மனித'ர்கள் கூடிப்பழகும் 'கிளப்'களிலும், தேநீர் விருந்துபோன்ற விசேஷ நிகழ்ச்சிகளின்போதும் சிகரெட் தாராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது. சிகரெட் பிடிக்கும் பழக்கமில்லாதவர்களைப் புகைக் குடியர்கள் காலத்தோடு ஒட்டி வாழத் தெரியாத 'பத்தாம் பசலி'கள் என்று ஏளனம் செய்கிறார்கள். புகை பிடிப்பதும், தேக ஆரோக்கியத்தைச் சீர்குலைக்கும் பல துர்ப்பழக்கங்களில் ஒன்று.

புகை பிடிக்கும் பழக்கம் சிறு வயதிலேயே படிந்துவிடுகிறது. வயதுவந்த பிறகு இப் பழக்கத்தைக்கைக்கொண்டு அவ்வளவாக அடிமையாவதில்லை. தெருவில் சிறு பையன்கள் துண்டு சிகரெட்டைப் பொறுக்கிப் புகைப்பதை பார்க்கிறோம். 'சிகரெட் பிடிப்பது நல்லதல்ல. ஏன் இந்தக் கெட்டபழக்கம்' என்றால் அவன், நானும் ஒரு மனிதனைப்போல இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன் என்று தலைநிமிர்ந்து சொல்லுவான். பெரிய மனிதனாவது எவ்வளவு சுலபம்! இளம் உள்ளங்களில் இம்மாதிரியான தப்பபிப்பிராயங்கள் உருவாக்குகிற பெருமை புகைக் குடியர்களைச் சேரும்.

புகைக் குடியர்கள் சிகரெட்டில் உள்ள தீங்கைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புவதே கிடையாது. புகையிலையில் இருக்கும் 'நிகோட்டின், இதுவரை விஞ்ஞானிகள் கண்டு' பிடித்துள்ள நஞ்சுகளிலேயே மிகமிகக் கொடியதாகும். நிகோட்டின் எவ்வளவு கொடியது என்பதை விளக்க அமெரிக்க விஞ்ஞானிகள் ஒரு பரிசோதனை செய்தார்கள். இரண்டு சிகரெட்டைப் பிரித்துத் தண்ணீரில் ஊற வைதது, அதை நன்றாகக் காய்ச்சினார்கள். நன்றாகச் சுண்டக் காய்ச்சியதிலிருந்து இரண்டு துளியை ஒரு பூனையின் நாக்கில் வைத்தார்கள். இரண்டொரு விநாடிகளில் பூனை கிறங்கிப் போய்விட்டது. மூன்றாவது துளியை உட்செலுத்தியவுடன் பூனை இறந்துவிட்டது. பயிர்களை அழிக்கும் பூச்சிகளை ஒழிக்கவும் இதே வழியைத்தான் கையாளுகிறார்கள். ஆனால் புகையிலை மனிதர்களை அன்றே கொல்லாமல் நின்று கொல்லுகிறது. புகைக் குடியர்கள் அகால மரணமடைவதற்குப் புகையிலைதான்

காரணம். என்றாலும், அந்தக் கொடும்பழிக்கு ஆளாகாமல் கிர பாரதியாகி விடுகிறது புகையிலை.

புகையிலை நரம்பைத் தாக்குகிறது. இதனால்தான் புகையிலை, சிகரெட் விளம்பரக் காரர்கள் "உங்கள் நரம்பை முறுக்கேற்றிச் சுருதி கூட்டு கிறது!" "தளர்ச்சியடைந்த நரம்புகளுக்குப் புத்துயிர் ஊட்டு கிறது" என்றெல்லாம் விளம்ப ரப்படுத்துகிறார்கள். புகைக் குடியர்களுடைய இருதயம் பல வீனம் அடைகிறது. அவர்கள் ரத்தக்கொதிப்பு, காசம் முதலிய வியாதிகளுக்கு ஆளாகிறார்கள். ஏற்கனவே பலவீனமான அவர் களுடைய இருதயம் புகை பிடிக் கும்பொழுது சாதாரண சமயங் களைக் காட்டிலும் அதிக வேக மாக ஓடுகிறது.

புகையிலையின் கொடுமையைப் பற்றிப் பக்கம் பக்கமாக டாக்டர்களும், தேகப் பயிற்சி செய்பவர்களும், ஒட்டப்பந்தயக் காரர்களும் எழுதியும்கூட, விளம்பரக்காரர்கள் கூறும் ஒரி ரண்டு வாக்கியங்கள்தான் மக் களை அதிகமாகக் கவருகின்றன.

உலகப் பிரசித்திபெற்ற விஞ் ஞானி தாமஸ் ஆல்வா எடிசன், "ஒருவனுடைய கையில் கைத் துப்பாக்கி இருந்தாலும் சகித்துக் கொள்ளுவேன்; ஆனால் கையில் சிகரெட் வைத்திருப்பதை என் னால் சகிக்கவே முடியாது" என்று கூறியிருக்கிறார். புகை பிடிப்பவர்களை அவர் தமக்குக் கீழ், வேலைக்கு அமர்த்திக் கொள்ளுவதில்லை. "வாழ்க்கை யில் ஏற்படுகிற சந்தர்ப்பங்களை ஒவ்வோர் இளைஞனும் நன்கு பயன்படுத்திக்கொள்ள ஆவ லோடு இருக்கவேண்டும். அதற்கு அவன் இளமைத் துடிப் போடு ஆர்வம் காட்டவேண்டும். வெறுக்கத்தக்க தீங்கு! உண் டாக்குகின்ற சிகரெட் புகையின் நடுவே உழலக்கூடாது" என்று அமெரிக்க கோடீஸ்வரர் ஹென்றி போர்டு சொன்னார்.

ஒட்டப்பந்தயக்காரர் ஒருவரை அணுகி, தம்முடைய சிகரெட்டை ஆதரிப்பதாக எழுதித்தந் தால் 30,000 ரூபாய் இனாம் தருவ தாகச் சொன்னார், ஒரு சிகரெட் வியாபாரி. அதற்கு அவர் சம் மதிக்கவில்லை. குத்துச்சண்டை நிபுணராயிருந்து விலகிய ஜீன் டர்னே என்பவர், ஜோ லூயி தினம் இரண்டு பெட்டி சிகரெட் வீதம் ஆறு மாதங்களுக்குக் குடித்தால், அவரைத் தோல்வி யுறச் செய்யவேன் என்றார்.

அண்ணல் காந்தியும்கூடச் சிகரெட்டின் தீமைகளைப்பற்றிக் கூறும்பொழுது, "புகைபிடித்தல் மனித அறிவை மழுங்கச் செய் கிறது; அப்பழக்கம் மிகக் கொடியது. புகைக்குடியர் களுடைய சுவாசமே அருவருப் பைத் தருகிறது. இத்தகைய வழக்கத்துக்கு நாம் அடிமை களாகிவிடக்கூடாது. சுருட்டு, சிகரெட் முதலியன நம் நாட்டுச் சரக்காயிருந்தாலும் சரி, பிற நாட்டுச் சரக்காயிருந்தாலும் சரி நிராகரிக்கப் படவேண்டியவையே" என்கிறார். இதைக் காட்டிலும் வேறு காரசாரமான கண்டனம் இருக்கவேமுடியாது.

லட்சோப லட்சம் மனிதர்கள் சிகரெட்டுக்காக மாதம் குறைந் தது 20 ரூபாயாவது செலவழிக் கிறார்கள். இந்தப் பணத்துக்குப் போஷாக்குத் தரக்கூடிய பொருள்கள் வாங்கினால் ஆரோக்கிய வாழ்வு வாழலாம்.

புகை பிடிக்கும் பழக்கத்தை நிறுத்துவது மிக எளிது. திட

மான மன சங்கல்பம் இருந்தால் அதை நிறுத்துவது எளிதில் கை கூடும். 'புகை பிடிப்பதை ஒரே நாளில் விடமுடியாது. சிறுகச் சிறுக விட்டுவிடுகிறேன்' என்று சொல்லுவது, ஒருவர், தம்முடைய நாயின் வாலை ஒரே சமயத்தில் வெட்ட மனம் இல்லாமல் தினம் தினம் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டியதைப் போலாகும். திடீரென்று நிறுத்துவது அவனிடமுள்ள ஏக்கத்தை அதிகப்படுத்தும் என்கிறார்கள். புகைப் பிடிப்பதைக் காட்டிலும் இந்த ஏக்கத்தால் அப்படி ஒன்றும் அதிகமான கெடுதல் விளையாது. முதலில் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் அதனால் விளையும் நன்மைகளைப் பார்க்கும்பொழுது, அந்தக் கஷ்டம் கடுகளவாகிவிடுகிறது. புகைக் குடியை நிறுத்த விரும்புகிறவர்கள், டிவேலராவின் திடசங்கல்பத்தை முன்னோடியாக வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு சமயம் டிவேலராவைச் சிறையில் அடைத்தார்கள். சிறையில் புகை பிடிக்கும் வசதியிருக்காது என்று அறிந்த டிவேலரா தம்முடைய புகையிலைக் குழாயைத் தூர வீசி எறிந்து விட்டார். அவரைப் பின்பற்றினால் புகைக் குடியர்களும் வெற்றி பெறலாம்—அதாவது புகைக்குடியை ஒரேயடியாகநிறுத்தித்தொலைத்து விடலாம்.

*

## சில ருஷ்யப் பழமொழிகள்

நீந்துவதை எல்லாம் பிடிக்காதே.

வாங்குகிற கை அலுக்காது.

சாரீரமில்லாதவன் பாடுவதற்கு ஆசைப் படுகிறான்.

வதந்திக்கு வாகனம் தேவையில்லை.

பணத்தைக் கடன் கொடுத்து நண்பனை இழந்துவிடாதே.

முட்டாளை மேஜைப் பக்கம் உட்காரச் சொன்னால் அவன் மேஜை மேல் கால்களைப் போடுவான்.

ஓநாய் பல்லை இளிக்கிறது; ஆனால் சிரிக்கவில்லை.

மாஸ்கோ பாராதவனுக்கு அழகு என்பதே தெரியாது.

சமைற்காரன் பட்டினியினால் சாவதில்லை.

'நாளை' என்பதற்கு முடிவே கிடையாது.

ஒருநாள் வெளியே போகவேண்டியிருந்தால், ஒரு வாரச் சாப்பாட்டைக் கையோடு கொண்டுபோ.

உன் மனைவியைக் கண்களால் தேர்ந்தெடுப்பதைவிடக் காதுகளால் தேர்ந்தெடு.

நூறு வருஷம் வாழ்ந்து, நூறு வருஷம் படித்தாலும், சாகும்போது முட்டாள்களாகத்தான் சாகிறோம்.

தன் மரணத்துக்கு முன்பாக யாரும் சாவதில்லை.

## பேஷான வழக்கம்

தென்னாப்பிரிக்காவில் வாழும் ஒரு ஜாதியினர், மேடைப் பிரசங்கிகள் பிரசங்கம் பண்ணும்போது ஒற்றைக்காலில் நிற்கவேண்டும் என்ற வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். தூக்கிய கால் தரையைத் தொட்டுவிட்டால் பிரசங்கம் தானாகவே முடிந்துவிட்டதாகக் கருதப்படும்.

—கரோனெட்.

உணவுப் பொருள்களை அதிகமாகப் பயிர் செய்ய வேண்டும் என்று நாம் பிரசாரம் செய்து வருகிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில் பிறநாடுகளில் உணவுப் பொருள் களை அபிவிருத்தி செய்வதில் என்னென்ன முன்னேற் றங்களைக் கண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளவேண்டியதும் அவசியம். இக் கட்டுரை சோவி யத் வீக்லியி லிருந்து.

# ருஷ்யாவில் காய்கறி உற்பத்தி

**'உழவன்'**

இன்று எல்லாத் துறைகளிலும் முன்னணியில் நிற்கும் நாடு சோவியத் ருஷ்யாதான். ஒரு நாட்டு மக்கள் குறையின்றி வாழ, உணவுப் பொருள்களுக் குப் பிற நாட்டை எதிர்பார்க்கா மல் அந் நாடு தானே, தன் மக் கள் அனைவருக்கும் வேண்டிய உணவு வகைகளை உற்பத்தி செய்ய வேண்டும். குறிப்பிட்ட இடப் பரப்பில் முதல் தரமான தானியங்களையும், காய்கறிகளை யும் நிறைய உற்பத்தி செய்ய வேண்டும். இதைச் சாதிக்க நீண்ட காலத் திட்டங்களும், திட் டங்களை நடைமுறையில் கொண்டு வர நிர்வாகத் திறமை யும் வேண்டும். இவை பூரண மாக உள்ள நாடு சோவியத் ருஷ்யா தான் என்றால் மிகை யாகாது.

இந்த ஆண்டு மாஸ்கோவில் நடைபெற்ற விவசாய உற்பத்திப் பொருள் கண் காட்சியில் வித விதமான தானிய வகைகளும், காய்கறி வகைகளும் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட் டிருந்தன. குறிப்பாகக் காய்கறி உற்பத்தியில் அரசாங்கம் எவ்வ ளவு தூரம் சிரத்தை காட்டு கின்றது என்பதற்கு நூறு பவுண்டு எடையுள்ள பூசணிக் காய்களும், இரண்டரைப்பவுண்டு எடையுள்ள வெங்காயங்களும் அத்தாட்சியாக விளங்கின.

இம்மாதிரியான ராக்ஷஸக் காய் கள் அரசாங்கத்தாரின் இடை யறாத ஆராய்ச்சியின் பலனே தவிர, ஏதோ ஓரிரு ஆரம்ப சூரர் களின் எதிர்பாராத அதிசய உற் பத்தி யல்ல.

42 காய்கறித் தோட்ட ஆராய்ச்சிப் பண்ணைகள் ஏறக் குறைய 2000 காய் வகைகளை அனுப்பி வைத்தன. ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலும் விளையும் காய் களிலும் விவசாயியின் கைத் திறன் புலனாகிறது. ருஷ்யப் புரட்சிக்கு முன் ருஷ்யாவில் எண்பது வகைக் காய்கறிகள் கூட உற்பத்தி செய்யப்பட வில்லை. ஆனால் இன்று 600 வகை களுக்கு மேல் உற்பத்தியாகின் றன.

ஜார் காலத்திய ருஷ்யாவில் விவ சாய ஆராய்ச்சிப் பண்ணை என் றாலே என்ன என்று தெரியா திருந்தது போய், இன்று ருஷ்யா முழுவதும் — ஆர்க்டிக் பிர தேசம் உட்பட பல ஆராய்ச்சிப் பண்ணைகள் நிறைந்துள்ளன.

காய்கறி வகைகளில் ஓரி னத்தை மற்றோர் இனத்துடன் கலந்து அந்த 'ஒட்டு' வேலையினால் ஒரு புது இனத்தை உண்டு பண்ணுகிற முயற்சி சோவியத்

ருஷ்யாவில் வெற்றி பெற்றிருப்பதைப் போல மற்ற எந்த நாட்டிலும் வெற்றி பெறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ராக்ஷஸ உருவ மெடுத்திருக்கும் பட்டாணி, முட்டைக்கோஸ், உருளைக்கிழங்கு முதலியவற்றைப் பாடம் செய்து ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

லெனின்கிராடுக்கு வடக்கேயுள்ள பிரதேசங்களில் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்ய முடியாது என்று எண்ணி அந்தப் பிரதேசங்களில் விவசாயிகள் அந்த முயற்சியிலேயே ஈடுபட வில்லை. ஆனால் இன்று விஞ்ஞான சாதனங்களின் உதவியினால அப் பிரதேசங்களிலும் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்கிறார்கள். பூசணிக் கொடிகளில் வெள்ளரிச் செடிகளை 'ஒட்டு' வேலையின் மூலம் சேர்த்து ஒரு புது மாதிரியான ருசிகரமான வெள்ளரிக்காய் பயிராக்குகின்றனர்.

இம் மாதிரி ஆராய்ச்சிக் கூடங்களை நடத்தும் பொறுப்பை சோவியத் அரசாங்கமே ஏற்று நடத்துகிறது. முதலில் விஞ்ஞானிகளும், தாவர வர்க்க சாஸ்திர நிபுணர்களும், பரிசோதனைக் கூடங்களில் பலதிறப்பட்ட காய்கறிகளைப் பற்றி ஆராய்ந்து, இனக் கூட்டுச் சேர்க்கையைப் பற்றிய கருத்துக்களை வெளியிடுகின்றனர். பிறகு அந்தக் கருத்துக்களை நடைமுறையில் கொண்டு வர முடியுமா என்று பரிசோதனை செய்வதற்கென்றே நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பண்ணைகளில் பரிசோதனை செய்கிறார்கள். பரிசோதனை திருப்திகரமான முடிவைத் தந்தால், அந்தப் புது இன விதைகளைப் பிரமாண்டமான அளவில் உற்பத்தி செய்து விவசாயக் கூட்டுப் பண்ணைகளுக்கு அனுப்புகிறார்கள். இம் மாதிரியான விதைகளைச் சரசமான விலைக்கு விற்கிறார்கள்.

பரிசோதனைக்கூடம், விவசாய ஆராய்ச்சிப்பண்ணை முதலிய வற்றை நடத்த அரசாங்கமே பண உதவி செய்கிறது.

இந்த ஆண்டு போடப்பட்டிருக்கும் திட்டத்தின்படி காய்கறி உற்பத்தியை அதிகப்படுத்த விஞ்ஞான சாதனங்கள் நிறைந்த கூட்டுப் பண்ணைகள் பாடுபடும். நிலத்தை உழுவதற்கு உதவிசெய்யும் 'டிராக்டர்'களேயன்றி, விதை விதைக்கவும் நாற்று நடவும் நீர்ப் பாய்ச்சவும் புது யந்திர சாதனங்கள் உற்பத்தி செய்வதிலும் சோவியத் அரசாங்கம் கருத்து செலுத்துகிறது.

✲

### ஒரு வியாக்கியானம்

'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்' என்ற வாசகம் பழிக்குப்பழி வாங்கும் குணத்தைப் பிரதிபலிப்பதாகக் கொள்ளப்படுகிறது. உண்மையில் இந்த வாசகம் பழிக்குப்பழி வாங்குவதில் ஒரு கட்டுதிட்டத்தையே உண்டாக்குகிறது. சரிக்குச் சரியாகப் பழிவாங்க வேண்டும் என்பதல்ல அதன்பொருள்; பழிவாங்குவது அளவுக்கு மீறிப் போகக்கூடாது; அதாவது ஒரு கண்ணுக்கு அதிகக் கண்களையோ, ஒரு பல்லுக்கு அதிகப் பற்களையோ பழிவாங்கக் கூடாது என்பதே அந்த வாசகத்தின் பொருள்.

—காண்டர்பரி மதகுரு

# இந்திய மக்களும், அவர்களுடைய ஆடைகளும்



மார்வாடிகள்..... அவர்களில் ஆண்மக்கள் அணிவது ஒரு உயர்ந்த ரக பனியனும், வேஷ்டியும், தலையைச்சுற்றி இறுக்கிக் கட்டப்பட்ட ஒரு தலைப்பாகையுமாகும். பெண்மக்கள் அழகான வர்ணங்களிலும், எல்லாவிதத்திலும் உயர்ந்த கவர்ச்சிமிக்க ஆடைகளிலும் பற்று உள்ளவர்கள். கெட்டியான பாவாடையும், இறுகத்தைத்த ரவிக்கையும், மேலே ஒரு துப்பட்டியும் அணிகிறார்கள்.

டாடா குரூப்பைச் சேர்ந்த மில்கள், இதர தொழில்களுடன், 35,000 தொழிலாளிகளுக்குமேல் ஈடுபடுத்தி, இந்தியாவின் எல்லா மக்களுடையவும் முக்கியமான தேவையை சரிக்கட்ட முயற்சிக்கின்றன.

டாடா வகுப்பு நெசவுசாலைகளினால் பிரசுரிக்கப்பட்டது

தி டாடா மில்ஸ் லிட்., தி ஸ்வதேசி மில்ஸ் லிட்.
தி அஹமதாபாத் அட்வான்ஸ் மில்ஸ் லிட்.,
தி ஜனரல் இன்டியா ஸ்பின்னிங் வீவிங் மானுபாக்டரிங் கம்பெனி லிமிடெட்.

ADARTS TI 671 Tamil.

ஆஸ்த்மாவை



குணப்படுத்துவது

ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரை ஈரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.



ஆஸ்த்மா, சுவாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

## காந்தியடிகள் எழுதிய அரிய நூல்கள்

| | | |
|---|---|---|
| மாணவருக்கு | 5 | 0 |
| பெண்களுக்கு | 3 | 12 |
| ஹிந்து முஸ்லிம் பிரசினை | 6 | 0 |
| சமஸ்தானப் பிரசினை | 6 | 0 |
| நமது மொழிப் பிரசினை | 2 | 8 |
| நான் மந்திரியானால் | 1 | 0 |
| அணுகுண்டும் அஹிம்சையும் | 1 | 4 |
| சுயராஜ்யம் வேண்டாமா? | 1 | 0 |
| காந்தி வழி 2. | 1 | 0 |
| இந்திய சுயராஜ்யம் | 1 | 0 |
| சத்திய சோதனை | 7 | 0 |
| அணுசக்தி யோகம் | 1 | 4 |
| இல்லறமும் பிரமசரியமும் | 1 | 0 |
| உத்தம வாழ்க்கை | 0 | 8 |
| ஹிந்து தர்மம் | 0 | 8 |
| மகா தியாகம் | 0 | 12 |

தபால் செலவு தனி

**சக்தி காரியாலயம்**

**சென்னை 14.**

கட்டுரையாளர் தினசரியின் துணை ஆசிரியர். சில வருஷங்களுக்கு முன் வெளிவந்த இவருடைய 'ஸ்டர்லிங் நிதி' என்ற சிறந்த புத்தகத்துக்குத் தமிழ் நாட்டில் பெரிய வரவேற்பு இருந்தது. தற்போது நிலவியுள்ள பணப் பெருக்கத்தைப் போக்குவதற்குச் சில உபாயங்களை இங்கே விளக்கமாக எடுத்துக் கூறுகிறார். அரசாங்கமும், மக்களும் கவனிக்க வேண்டிய முக்கியமான கட்டுரை இது.

# பணப் பெருக்கம் போக வழி

ரா. வேங்கடராஜுலு

அகவிலை ஏறிவிட்டது; இதனால் எல்லோருமே அல்லல்படுகிறார்கள், ஏக்கத்தைத் தவிர வேறு எதையுமே கண்டறியாத ஏழைகளுக்கு இதனால் இன்னும் அதிக ஏக்கம். 'தோழனோடும் ஏழமை பேசேல்' என்ற வித்தையில் கை தேர்ந்தவர்கள் நடுத்தர வகுப்பார் என்போர். அந்த வித்தை அவர்களுக்கும் பலிக்காதபடி அகவிலை செய்துவிட்டது. 'என்ன வந்தும் போதவில்லையே' என்று இவர்களும் கலங்குகிறார்கள். எதை எடுத்தாலும் விலை ஏற்றம்! எங்கே பார்த்தாலும் இதே பேச்சு, கவலை! பணக்காரர்களும் இதைப் பற்றிப் பேசுகிறார்கள், பச்சாதாப வார்த்தைகளைப் பகருகிறார்கள் என்றால் விலைவாசி ஏற்றம் பொல்லாத சனியன் என்பதில் என்ன ஆட்சேபணை?

இந்த ஆபத்து நீடித்துக் கொண்டு போக விடக் கூடாது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். உடனே ஏதாவது பரிகாரம் தேடித்தான் தீரவேண்டும் என்று பொருளாதார பண்டிதர்கள் கூறுகின்றனர். தலைவர்களும் வற்புறுத்துகின்றனர். இதற்கு என்ன பரிகாரம் என்பதைக் காண சர்க்காரும் முயன்று வருகிறது. இதற்காக பொருளாதார பண்டிதர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள், முதலாளிகள் எல்லோரையும் அழைத்து சர்க்கார் யோசித்தது. இவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு முறைகளைக் கூறுகின்றனர். இதில் எந்த முறை சரியான உபாயம் என்பது விளங்காமல் இந்திய சர்க்கார் கலங்குகிறது. சுருக்கமாகச் சொன்னால், விஷம்போல் ஏறிக்கொண்டு போகும் விலைவாசி ஏற்றத்தின் இப்போதைய நிலைமை இதுதான்.

**பணத்தின் தன்மை**

விலைவாசி இப்படி ஏன் ஏறிக்கொண்டுபோகிறது? இந்த ஏற்றத்தைத் தடுக்க பரிகாரத்தை யோசிக்கும்முன்பு அப்படி ஏறுவதின் காரணத்தை கவனிப்பதும் அவசியம். இந்தத் தொல்லைக்கே முக்கிய காரணம் பணப் பெருக்கம் என்கிறார்கள். இதில் பணக்காரர்களுக்குக் கூட எந்த அபிப்பிராய பேதமும் கிடையாது. ஆகையால் பணப் பெருக்கம்தான் இந்தக் கஷ்டத்திற்கே காரணம் என்றால், அந்தப்

பொல்லாத பணப்பெருக்கம் தான் என்ன என்பதைக் கவனிக்கவேண்டும். அதோடு முதலில் பணத்தின் தன்மையையும் புரிந்துகொள்ளவேண்டும்.

பணம் இன்னது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் பணம் ஒரு பொருள் அல்ல. அது அரிசி, பருப்பைப்போல ஒரு பண்டம் அல்ல. பண்டத்தை அள்க்க மனிதன் அறிவினால் கண்டுபிடித்துக்கொண்டு உபயோகிக்கும் ஓர் அளவுகோல் தான் பணம். வெறும் அளவுகோலாக வந்ததே பணமாகையால் இதுதான் பணத்திற்குள்ள உபயோகமும். பணத்திற்கு ஆசைப்படுகிறவர்கள் கணக்கற்றிருக்கலாம். ஆசைக்கு அளவு இல்லையானாலும் பணத்திற்கு ஓர் அளவு உண்டு; ஒரு கணக்கும் உண்டு. பொருள்களின் அளவோடுதான் பணம் இருக்கவேண்டும். அதாவது உற்பத்தியாகும் பொருள்களின் நியாயமான மொத்த மதிப்பு என்னவோ அந்த மதிப்பின் அளவோடுதான் மொத்த பணமும் இருக்கவேண்டும். மிஞ்சினால் பணத்தின் மதிப்புக்குறைந்து மானமிழந்துவிடும். பண்டங்களின் அளவைவிடப் பணம் பெருகிவிட்டால், பணம் அதிகமாகிவிடுவதால் அது மலிவாகிறது. அதிகரிக்காமல் ஒரே அளவிலிருக்கும் சரக்குகள் கிராக்கியாகின்றன. அதாவது பண்டங்கள் பெருகாதபோது பணம் மாத்திரம் பெருகுமானால், முன்பு வாங்கிய விலையைவிட அதிக விலை கொடுக்க நேருகிறது. விலைவாசி ஏற்றத்திற்குப்பணப் பெருக்கமதான் காரணம் என்பது இதனல்தான்.

பெருகிய விதம்

இப்பொழுது முக்கியமாக எல்லா பொருள்களுமே யுத்தத்திற்கு முன்பிருந்ததை விட ஒன்றுக்கு நான்கு மடங்கு விலை விற்பதைக் காண்கிறோம். பணத்தின் நிலைமை அன்றும் இன்றும் என்ன? 1939 செப்டம்பரில் மொத்தம் செலாவணியிலிருந்த பணம் ரூ. 217 கோடி 18 லட்சம். இந்தியா பிரிவினையாவதற்கு முன்னால் இந்நாடு முழுவதிலுமிருந்த நோட்டு செலாவணி தொகையே அது. ஆனால் பாகிஸ்தானை தள்ளிவிட்டு இந்தியாவில் மாத்திரம் பார்த்தால் இவ்வருஷம் ஆகஸ்டு 13-ந் தேதி மொத்த நோட்டு செலாவணி ரூ. 1235 கோடி. அதாவது யுத்தத்திற்கு முன்பிருந்ததற்கும் இப்பொழுதுக்கும் 5 மடங்குக்குமேல் பணம் பெருகியிருக்கிறது. பணம் இப்படி பெருகியதேயன்றி அதற்கு ஏற்றாற்போல பொருள்களின் உற்பத்தி பெருகவில்லை. பொருள்கள் அப்படியே இருக்க, பணம் மாத்திரம் 5 மடங்குமேல் பெருகியதால் விலைவாசியும் அதற்கு ஏற்றாற்போல அத்தனை மடங்கு அதிகரித்தது. விலைவாசி ஏற்றத்திற்குப் பணப்பெருக்கம்தான் காரணம் என்பதன் அர்த்தம் இதுதான்.

இப்படி பணம் ஏன் அனாவசியமாகப் பெருகிற்று என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியதும் இச் சமயத்தின் அவசியம். அப்பொழுது இங்கு ஆட்சி நடத்திய பிரிட்டிஷார் தங்களுடைய அவசியத்திற்காக இப்படி பணத்தைப் பெருக்கினார்கள். யுத்தத்தை நடத்துவதற்கு இந்தியாவின் பொருள்களும் இந்தியரின் சேவையும் பிரிட்டனுக்கு அவசியமாயிற்று. இவற்றிற்குப் பதிலாக கொடுத்து வாங்கிக்கொள்ள பிரிட்டனிடம் பொருள்கள் இல்லை; தங்கமும்

கிடையாது. இதற்கு இங்கிருந்த பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு யுக்தி செய்தது. இந்தியப் பொருள்களையும் இந்தியர் சேவையையும் பிரிட்டன் பெறுவதற்கு வேண்டிய பண நோட்டுகளை இந்திய சர்க்கார் அச்சடித்துக் கொடுத்தது. இந்தத் தொகைக்குப் பிரிட்டிஷ் நாணயத்தில், தான் இவ்வளவு ஸ்டர்லிங் இந்தியாவுக்குத் தர வேண்டும் என்று பிரிட்டன் கணக்கு வைத்துக் கொண்டது. அந்தத் தொகைதான் நாம் வசூல் செய்ய பிரிட்டனோடு இப்பொழுது ஒப்பந்தம் செய்து கொண்ட ஸ்டர்லிங் நிதி. அந்த ஸ்டர்லிங் நிதியை அங்கே வைத்துவிட்டு இங்கே அச்சிட்டு அதிகமாக்கியதுதான் இப்பொழுது நம்மை திண்டாட்டத்தில் வைத்திருக்கும் பணப் பெருக்கம். இதுவே பணப்பெருக்கத்தின் சுருக்கமான வரலாறு.

### விஷம் இறங்காது

பணம் சேரச் சேர ஆசை என்பார்கள். பணப் பெருக்கமோ பொல்லாத விஷம். அந்த விஷம் பட்டுவிட்டால் அது ஏறிக் கொண்டுதான் இருக்குமேயன்றி எந்த மந்திரத்தினாலும் அதை இறக்க முடியாது. பிரிட்டிஷ் ஆட்சி இங்கே இருந்த போது அவர்களுடைய அவசியத்திற்காகப் பணத்தைப் பெருக்கினார்கள் என்பது உண்மை. இந்தியா சுதந்திரமடைந்துவிட்டது. பணப் பெருக்கத்தின் ஆபத்தைச் சுதந்திர சர்க்கார் நன்றாக அறியும். அதன் அனர்த்தங்கள் தெரிந்திருந்தும் பணப் பெருக்கம் இன்னும் அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறதேயன்றிச் சுதந்திர சர்க்காராலும் அந்த விஷத்தை இறக்க முடியவில்லை. நோட்டுச் செலாவணி குறைந்துவிட்டது என்று ரிசர்வ் பாங்க் கவர்னர் ஒரு வருஷத்திற்குமுன் தைரியமாகச் சொன்னார். ஆனால் இப்பொழுது நிலைமை என்ன? அவர் சொன்னதற்கு நேர்மாறாக நோட்டுச் செலாவணி அதிகரித்திருக்கிறது. 1946-47-ல் நோட்டுச் செலாவணியில் ரூ. 13 கோடிக்கு மேல் குறைந்திருந்தது என்பது உண்மை. ஆனால் 1947-48-ல் அதே காலத்தில் நோட்டுச் செலாவணியில் ரூ. 97 கோடி அதிகமாகிவிட்டது. இதற்குப் பிறகும் இப் பணப் பெருக்கத்தின் வேகம் அதிகமாகவே இருக்கிறது என்பது கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம். 1946-47-ல் செப்டம்பர் மாத முடிவிலிருந்து மார்ச் மாத முடிவு வரையில் நோட்டுச்செலாவணியில் ரூ. 55 கோடிதான் அதிகரித்தது. 1947-48-ல் அதே மாதங்களில் ரூ. 125 கோடி அதிகமாயிற்று. இவ் வருஷம் ஜூன் மாதத்தோடு முடிந்த 9 மாதங்களில் ரூ. 146 கோடி அதிகரித்தது. ஆனால் 1946-47-ல் அதே 9 மாதங்களில் அதிகரித்தது ரூ. 34 கோடிதான் என்பதைக் கவனித்தால் இப் பெருக்கத்தின் வேகமும் அளவும் நன்கு விளங்கும்.

### பல பேர் கண்ட பாம்பு

இதுவரை நாம் பார்த்ததிலிருந்து சில விஷயங்கள் தெளிவாகின்றன. பிரிட்டிஷார் ஆரம்பித்த பணப் பெருக்கம், பிரிட்டிஷார் போன பிறகும் பெருகிக் கொண்டுதான் போகிறது. இப்படி பணப் பெருக்கம் அதிகமாக, விலைவாசிகளும் ஏறிக்கொண்டே போகின்றன. விலைவாசி குறைய வேண்டுமானால், உற்பத்தியாகும் பொருள்களைவிடப்பணம்

அதிகமாயிருப்பது போக வேண்டும். அதாவது பொருள்கள் இருப்பதற்கு ஏற்ற வகையில் பணம் சுருங்கியாக வேண்டும். அக்கிரமமாக ஏறியிருக்கும் விலைவாசி குறைவதற்கும் இதுதான் உபாயம். பணத்தைச் சுருக்க வேண்டாமென்றால் இருக்கும் பணச்செலாவணிக்கு ஏற்ற வகையில் உற்பத்திப் பொருள்களையாவது பெருக்கியாக வேண்டும். அப்படிச் செய்தாலும் விலைவாசி தானே குறையும். விலைவாசி குறைவதற்குப் பரிகாரம் கூற முற்படுகிறவர்கள் எல்லோருமே இந்த இரண்டையும் கூறி குழப்பிக் கொள்ளுவதற்குக் காரணமும இதுதான.

ஒரு கஷ்டத்திற்குக் காரணம் தெளிவாகத் தெரியும்போது அதன் நிவர்த்திக்கான மார்க்கத்தில் குழப்பமும் அபிப்பிராய பேதங்களும் இருப்பதற்குக் காரணமேஇல்லை. ஆனல் இதற்குத் தொழிலாளர் பிரதிநிதிகள் கூறும் யோசனைக்கும், முதலாளிகள் சொல்லும் உபாயத்திற்கும் அதிக வித்தியாசத்தைக் காண்கிறோம். பொருளாதார பண்டிதர்கள் கூறும யோசனைகளின் போக்கு வேறு விதமாக இருக்கிறது. இவ்விதம் பணப்பெருக்கம் பலபேர் கண்ட பாம்பாக யார் கையாலும் அடிபடாமல் அனுயாசமாக இருந்து வருகிறது. இதற்கு என்ன காரணம் என்று கேட்கலாம். "பொருளாதாரம், செல்வத்தைப் பற்றிய சாஸ்திரமேயன்றி மக்கள் க்ஷேமத்தைப் பற்றியது அல்ல." என்று ஓர் அறிஞர் சொன்னதுண்டு. சரியான வழி புரியாததற்கும் இதுதான் காரணம். பொருளாதாரம் செல்வர் வழி சென்று கொண்டிருப்பதனல்தான மக்களின் க்ஷேமத்திற்கு உடனே செய்யவேண்டிய வழி புரியாமலிருக்கிறது.

இன்னுமொன்றும் ஞாபகத்திலிருக்க வேண்டியது அவசியம். பணப் பெருக்கம் வளர ஒரு தடவை விட்டுவிட்டால் அது நிற்பது கிடையாது. அதுமாத்திரமல்ல; அது புதியதோர் நிலைமையையே உண்டாக்கிவிடுகிறது. தேசத்தின் பொருளாதார நிலைமையைச் சங்கடத்தில் கொண்டு போவதோடு அது நிற்பதில்லை. சர்க்காரின் நோக்கத்திலும் கொள்கையிலும் கூட அது மாறுதலை உண்டாக்கிவிடுகிறது. தேசிய பொருளாதார வாழ்க்கை நிலையிலும் மாறுதல் செய்கிறது. இப் புது நிலைமையில் மற்றவர்கள் எத்தனையோ பேர்களின் சுக சௌகரியங்களும் நோக்கங்களும் போய்ச் சேர்ந்துகொள்ளுகின்றன. பணப் பெருக்கத்தைப் போக்கப் பரிகாரம் கண்டுபிடிப்பதில் இவையே முட்டுக்கட்டைகளாகிவிடுகின்றன. இக் கஷ்டத்தைத் தீர்த்தாகவேண்டும் என்ற சிரத்தை இருந்தும் சர்க்காராலும் சீக்கிரத்தில் எதுவும் செய்ய முடியாமலிருப்பதன் ரகசியம் இதுதான்.

ஒருமித்த உபாயங்கள்

பணப் பெருக்கத்தின் கஷ்டம் போக, விலைவாசிகள் குறைய எத்தனையோ பேர் எத்தனையோ உபாயங்களைக் கூறுகிறார்கள். ஆனல் பொதுவாக இவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளும் முறைகள் அவற்றில் சில உண்டு. உற்பத்தியைப் பெருக்கவேண்டும்; அத்தியாவசியப் பொருள்களுக்குக் கன்ட்ரோலைக் கொண்டு வரவேண்டும்; மதுவிலக்கை மெள்ள அமலுக்கு கொண்டுவரவேண்டும்; சர்க்கார் செலவில் சிக்கனம செய்ய

வேண்டும்; இறக்குமதி கொள்கையைத் தளர்த்தவேண்டும்; மக்களிடம் அதிகப்படியாக இருக்கும் வாங்கும் சக்தியைத் தடுக்கவேண்டும். இவைதான் பொருளாதார பண்டிதர்கள், முதலாளிகள், தொழிலாளர், பிரதிநிதிகள் ஆகிய மூத்தாரத்தாரும் சர்க்காருக்குக் கூறி யிருக்கும் யோசனைகளில் ஒருமித்து ஒப்புக்கொள்ளும் உபாயங்கள்.

சர்க்கார் கையாளவேண்டும் என்று இவர்கள் இந்த யோசனைகளைச் சொல்லி யிருப்பதுதான் புதிதே ஒழிய இந்த யோசனைகளில் ஒன்றுகூடப் புதியதே அல்ல. எல்லாம் 1947 ஆகஸ்டு 15-ந் தேதிக்கு முன்னாலிருந்த பிரிட்டிஷ் சர்க்காரும், பின்னால் ஏற்பட்ட சுதந்திர இந்திய சர்க்காரும் அனுஷ்டித்துப் பார்த்த அந்தப் பழைய யோசனைகளைத்தான் இவர்கள் அருமையாக இப்பொழுது கூறி யிருக்கிறார்கள்! கையாண்டு பார்த்த அந்தப் பழைய முறைகளைத் திரும்பவும் கையாளுவதால் ஏதாவது பலன் இருக்குமா என்பதுதான் நாம் இப்பொழுது கவனிக்கவேண்டிய விஷயம்.

### அதுதான் நடக்கவில்லை

இவர்கள் கூறும் முறையில் முதலாவது, உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பது. யோசனையைப் பொறுத்த வரையில் ரொம்ப சரி. பெருத்திருக்கும் பணத்தின் அளவுக்கு உற்பத்திப் பொருள்கள், அதாவது பண்டங்கள் அதிகரித்துவிட்டால் சரக்குகள் மலிந்து விலைவாசி தானே குறையும். யுக்தி சரி. ஆனால் அது சித்தியாகுமா என்பதுதான் இப்பொழுது கேள்வி. உற்பத்தியைப் பெருக்கினால்தான் வாழ்வு, இல்லாவிட்டால் நாசமே என்று நம் பிரதம மந்திரி பண்டித நேரு எத்தனையோ தடவை எச்சரித்துவிட்டார். நம் தலைவர்களெல்லோரும் சென்ற இடங்களிலெல்லாம் இதைச் சொல்லாத நாளில்லை. உற்பத்தியைப் பெருக்க வழிகள் பல சொல்லவும், திட்டங்கள் வகுக்குவும் கூட்டிய மாகாண மந்திரிகள் மகாநாட்டிற்கும், வகுக்கப்பட்ட திட்டங்களுக்கும் குறைவில்லை. தொழிலாளருக்கும், முதலாளிகளுக்கும், சர்க்காருக்கும் இதற்கென்று மூன்று வருஷ 'சச்சரவு நிறுத்த' ஒப்பந்தம்கூட ஏற்பட்டது. இவ்விதம் உற்பத்தியைப் பெருக்க எவ்வளவோ முயற்சிகள் நடந்துவிட்டன. ஆனால் உற்பத்தி பெருகுவது என்ற அந்த ஒன்றுதான் நடக்கவில்லை.

இதற்கு என்ன காரணம்? தொழிலாளர் சரியாக வேலை செய்வதில்லை என்று முதலாளிகள் குறை கூறுகிறார்கள். பாடுபட்டு உழைப்பவனின் கஷ்டத்தை உணர்ந்து முதலாளிகள் நடக்காமல் சண்டித்தனம் செய்கிறார்கள் என்று தொழிலாளர்கள் முதலாளிகள் மீது குற்றங் கூறுகிறார்கள். இரு தரப்பாரின் குற்றச்சாட்டுகளிலும் உண்மையுண்டு. பாடுபட வேண்டியது பாட்டாளியின் தலைவிதியாயிருக்கலாம். இட்ட விதி என்பதற்காகப் பாட்டாளியின் வயிறு பசிக்காமல் இருக்காது. அவன் உழைக்க, பசி தீர சோறு வேண்டும். எல்லாப் பொருள்களும் விலை ஏறியிருக்கும்போது அவனும் அவன் குடும்பமும் ஏழைச் சோறு தின்பதாயினும் அதற்கும் கொஞ்சம் அதிகக் கூலி வேண்டும். இதனால் விலைவாசி ஏறிக்கொண்டு போகப்போகத்

தனக்கு அதிகக்கூலி வேண்டுமென தொழிலாளி கேட்கிறான். மூக்கால் அழுதுகொண்டே முதலாளி கொஞ்சம் கூலியை அதிகரித்துக் கொடுக்கிறான்.

இதன் பலன் என்ன? தொழிலாளர் கையில் கொஞ்சம் பணம் பெருகுகிறது. இதனால் இன்னும் பணப்பெருக்கம். இவர்களுக்குக் கொஞ்சம் அதிகக் கூலி கொடுத்து விட்டதற்காக முதலாளி தன் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருளின் விலையில் கொஞ்சம் ஏற்றிவிடுகிறான். இதனால் மீண்டும் விலை ஏற்றம். கொஞ்சம் அதிகக்கூலியைப் பெற்று விட்டதற்காக எந்தத் தொழிலாளியும் இரண்டு மடங்கு வேலை செய்துவிட முடியாது. எனவே உற்பத்தி ஒரேமாதிரி யாகவே இருக்கிறது. தொழிலாளி கையில் கொஞ்சம் அதிகக் காசு வந்தது. அதே சமயத்தில் அத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் சரக்கின் விலையும் உயர்ந்தது. இந்த இரண்டும் தான் மிச்சம். முடிவு என்ன? பணப்பெருக்கம்; விலைவாசி ஏற்றம். உற்பத்திப் பெருக்க முயற்சியில் கண்கூடாகக் கண்ட பலன் இதுதான்.

### பணப் பெருக்கமே எமன்

தொழிற்சாலை உற்பத்திதான் இப்படி என்றால், உணவுப் பொருள் உற்பத்தி முயற்சிதான் என்ன வாழ்கிறது? உணவு சாகுபடியை அதிகரிப்பதற்கென்று இந்திய சர்க்கார் மாத்திரம் இது வரையில் ரூ. 31 கோடி செலவழித்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. பணம் விரயமானதைத் தவிர உருப்படியாக இதில் நடந்திருப்பது எதுவுமில்லை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

அனுபவத்தில் இதையெல்லாம் கண்டு வந்தும் உற்பத்திப்பெருக்கம் என்பது ஏதோ அடுத்த வினாடியே நடந்து விடக்கூடிய காரியம் போல எல்லோரும் சொல்லுகிறார்களென்றால், ஒன்று, உண்மை நிலையை உணரும் ஆற்றல் அவர்களுக்கு இல்லாமலிருக்கவேண்டும்; அதனால் பணப்பெருக்கத்தின் தன்மை அவர்களுக்குப் புரியாமலிருக்க வேண்டும். பொருளுற்பத்திக்குப் பொல்லாத எமன் ஏதாவது உண்டு என்றால் அதுதான் பணப் பெருக்கம். இப் பணப்பெருக்கம் இருக்கும் வரையில் அது உற்பத்தியைக் கொன்றுகொண்டிருக்குமே ஒழிய அது ஒரு காலும் உற்பத்தியை ஓங்க விடாது. உற்பத்திப் பொருள் தான் ஒரு நாட்டின் உண்மையான செல்வம். இந்தச் செல்வம் பெருகினாலன்றி எந்த நாட்டிற்கும் சுபிட்சம் என்பது இருக்க முடியாது. ஆகையால் உற்பத்தி பெருகியாக வேண்டியது அத்தியாவசியம். ஆனால் அதற்கு எமனான பணப்பெருக்கத்திற்கு கொழுப்பேற்றி வைத்துக் கொண்டு உற்பத்தியைப் பெருக்குவது என்பது நடக்காத காரியம். அனுபவத்தில் பார்ப்பதும் இதைத்தான். இந்த உண்மை புரியாமல்தான் உற்பத்தியைப் பெருக்கினால் பணப் பெருக்கத்தைக் கொன்றுவிடலாம் என்று சொல்லுகிறார்கள்.

### கன்ட்ரோல் பரிகாரமா?

விலைவாசியைக் குறைக்க அடுத்தபடியாகச் சொல்லப்படும் யோசனை, கன்ட்ரோல்களை அத்தியாவசியப் பொருள்களுக்கெல்லாம் அமலுக்குக் கொண்டு வர வேண்டும் என்பது. கன்ட்ரோலும் ரேஷனும் இருப்பது ஒரு

அளவுக்கு நல்லது என்பதில் சந்தேகம் இல்லை. குறிப்பிட்ட ஓர் அளவுக்கு பொருள்கள் குறிப்பிட்ட ஒரு விலைக்குக் கொஞ்சப் பேருக்காவது நிச்சயமாகக் கிடைப்பதற்கு இது நல்ல வழி என்பதைப் பழக்கத்தில் பார்த்திருக்கிறோம். ஆனால் நிலைமையைக் கொஞ்சம் சமாளிக்க இது ஒரு உபசாந்தியே ஒழிய பிரச்னையைத் தீர்த்துவிடக்கூடிய பெரிய உபாயமல்ல இது. மேலும் கன்ட்ரோல்கள் வந்ததுமே அதன் அண்ணனாக கள்ளமார்க்கெட்டும் கூடவே வந்து விடுகிறது என்பதைப் பார்க்கிறோம். கள்ளமார்க்கெட்டை ஒழிக்க என்று சர்க்கார் புதிய சட்டங்களை, மிகவும் கடுமையான சட்டங்களைக் கூடச் செய்யலாம். ஆனால் இந்தச் சட்டத்தை அமல் நடத்த இருக்கும் சர்க்கார் சிப்பந்திகள் பழைய பேர்வழிகள்தான் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. ஆகையால் என்னதான் முயன்றாலும் லஞ்சத்தின் பலத்தால் கள்ள மார்க்கெட்டுக்காரர்கள் மார்க்கண்டேயர்களாக இருந்து கொண்டுதான் இருப்பார்கள்.

பொதுவாகக் கன்ட்ரோல்கள் விஷயத்திலும் ஒரு தப்பான அபிப்பிராயம்தான் இருந்து வருகிறது. கன்ட்ரோலும் ரேஷனும், தேவைக்குக் குறைவாக தட்டுப்படும் பொருள்களைக் கட்டுப்படுத்திப் பகிர்ந்துகொடுக்க ஏற்பட்ட மார்க்கங்களேயல்லாமல், ஏதேதோ காரணங்களால் ஏற்பட்டுவிட்ட பணப்பெருக்கத்தைப் போக்கிவிடும் உபாயங்களே அல்ல. மேலும் பணப்பெருக்கம், கன்ட்ரோலுக்கும் ரேஷனுக்கும் பரம விரோதி. பணம் பெருகி இருக்கிறது என்றால், என்ன விலையானாலும் வாங்கக் கூடியச் சக்தி அநேகருக்கு அதிகரித்திருக்கிறது என்றுதான் அர்த்தம். தட்டுப்பாடுள்ள பொருள்கள்தான் கன்ட்ரோல் செய்யப்படுகின்றன. ஆகையால் அப் பொருள்கள் தேவைக்கு வேண்டிய அளவுக்கு இல்லை என்றாகிறது. எனவே, இப் பொருள் குறைவாயிருக்கும்வரை அவற்றை வாங்கப் போட்டியும் இருந்துகொண்டுதான் வரும். வாங்க பலரிடம் அதிகப் பணம் இருக்குமானால் இந்தப் போட்டி இன்னும்கடுமையாகும். போட்டி இருப்பது தெரிந்ததும் பதுக்கல் வரும். உடனே கள்ளமார்க்கெட்டு உதயமாகிறது. ஆகையால் எந்தக் கன்ட்ரோலையும் ரேஷனையும் குட்டிச்சுவராக்கி விடக் கூடிய சக்தி பணப்பெருக்கத்திற்கு இருக்கும்போது பணப் பெருக்கத்தைப் போக்க கன்ட்ரோல் ஒரு மார்க்கம் என்பது பைத்தியக்காரத்தனம்.

### அதற்கு என்ன செய்வது?

இப்பொழுதிருக்கும் கஷ்டத்தைத் தீர்க்க அடுத்தபடியாக சொல்லப்படும் யோசனை, மதுவிலக்கை மெள்ள மெள்ளக் கொண்டு வருவது என்பது. எந்த மதிமயக்கத்தில் இந்த யோசனை வந்தது என்பதுதான் புரியவில்லை. குடித்தால் கையில் காசு குறையும். இதனால் கையில் அதிகரித்திருக்கும் பணம் குறையுமாகையால் மற்றப் பொருள்கள் வாங்க வெளியில் பண நாட்டம் குறையும். வாங்கும் சக்தியில் போட்டி இவ்விதம் குறைவதால் சாக்குகளுக்கு கிராக்கி குறைந்து விலை மலியலாம். வாஸ்தவம். கள்ளுக்கடை ஏடுபடாமலிருந்தால், தினம் ஒரு ரூபாய் சம்பாதிக்கிற

வன், அதில் பாதிக்குக் குடித்துவிடுவான். அரிசி, உப்பு, மிளகாய் வாங்க அவன் கையில் மிஞ்சுவது கொஞ்சமே யாகையால் அப்பொருள்களை வாங்குவதும் கொஞ்சமாகும். பொருள்களுக்கு கிராக்கி மட்டுப்படும். இந்தப் பொருளாதாரத் தத்துவத்தில் ஒளித்திருப்பதுதான் இந்த யோசனையாக இருக்கக்கூடும்!

இதுவும் ஓர் உபாயம் என்றே வைத்துக்கொள்ளுவோம். ஆனல் குடிகாரன் குடித்துவிட்டு அரிசி, உப்பு வாங்க காசு பத்தாமல் அவன் குடும்பம் அவதிப்படுமே, அதற்கென்ன செய்வது? குடிகாரக் குப்பனுக்கு அந்தத் தண்டனை வேண்டியதுதான் என்று சுலபத்தில் சொல்லிவிடலாம். எனினும், கள்ளு, சாராயக் கடைகளில் குடிகாரக் குப்பன்கள் பணத்தைத் தானே கொடுக்கிறார்கள்? அந்தப் பணம் கள்ளுப் பானையில் கரைந்துவிடுகிறது இல்லை. குப்பன்கள் காசு, சாராயக்கடை சுப்பன்களிடம் போகிறது. குப்பன்கள் கையிலிருந்த பணப் பெருக்கம் சுப்பன்களிடமும் அவர்களுடன் ஈடுபட்டவர்களிடமும் போகிறது. ஆகவே தட்டுப்பாடாக இருக்கும் பொருள்களை வாங்கப் போட்டிப் போட்டு விலையை ஏற்றும் பணப்பெருக்கம் கை மாறுகிறதே ஒழிய அது உரு மாறுவதோ அழிவதோ இல்லை. ஆகையால் இது ஓர் உபசாந்தி வைத்தியம் கூட அல்ல. உரலை விழுங்கியவனுக்குச் சுக்குக் கஷாயம் கொடுப்பதைப் போன்ற வைத்திய முறைதான் இது.

**அது சாத்தியமல்ல**

பரிகாரம் கூறுவோர் சொல்லும் மற்றோர் யோசனை, சர்க்கார்செலவு செய்வதைக்குறைக்க வேண்டும் என்பது. போலீஸ்காரனை வைத்து பணம் படைத்தவர்கள் சொத்தையும் உயிரையும் பாதுகாப்பது மாத்திரம் ஒரு சர்க்காரின் வேலையாக இருந்துவிட முடியாது. சர்க்கார் என்றால் மக்கள் க்ஷேமத்திற்குச் செலவு செய்யத்தான் வேண்டும். நாட்டின் அபிவிருத்திக்கான திட்டங்களை நிறைவேற்றித்தான் ஆக வேண்டும். தேசத்தின் பாதுகாப்புக்கு உஷாராகத்தான் இருக்கவேண்டும். பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு ஏராளமாக சம்பளம் கொடுப்பது தவறு என்று சொல்லலாம். ஆனல் சர்க்கார் சிப்பந்திகளும் ஜீவனுடன் இருக்க வேண்டுமானல் அகவிலையை அனுசரித்து சம்பளத்தைக் கூட்டித் தரத்தான் வேண்டும். சுதந்திர சர்க்காருக்கு இப்பொழுது ஏற்பட்டிருப்பதைப் போல காஷ்மீர யுத்தமும் ஹைதராபாத் நடவடிக்கையும் இருக்கும்போது அதிகச் செலவு ஏற்பட்டுத்தான் தீரும். பணப் பெருக்கம் இருக்கும்போது அதற்கேற்றபடி சர்க்கார் செலவும் அதிகமாகவே இருக்கும். ஆகவே சர்க்கார் செய்யும் செலவைக் குறைக்க வேண்டுமென்பது ஆகாத வேலை.

இதேபோல் எல்லா யோசனைகளும், இப்பொழுது ஏற்பட்டுவிட்ட, ஆபத்தான அளவுக்குக் கூட வளர்ந்துகொண்டு போகும் நிலைமையைச் சமாளிக்கமார்க்கங்களே அல்ல. பணப்பெருக்கம் காற்றடித்த ரப்பர் டியூப் மாதிரி. அதில் ஒரு பக்கத்தில் அமுக்கினல் இன்னுமொரு பக்கத்தில் போய் அதிகமாக புடைத்துக் கொள்ளும். அமுக்கிய பக்கம்கூட அமுங்கிக்கொண் டிருக்கும்

வரையில்தான் அடங்கி யிருக் கும். அமுக்குவதை நிறுத்திஞல் அந்தப் பக்கமும் புடைத்துக் கொள்ளும். இதுதான் பணப் பெருக்கத்தின் உண்மையான இயல்பு. காற்றடித்த டியூப் படிந்திருக்க வேண்டுமானுல், உள்ளிருக்கும் காற்றை வெளிப் படுத்திவிடுவதுதான் வழி. பணப் பெருக்கத்தைப் போக்கவேண்டு மானுல், பெருகிய பணத்தைப் பறித்துவிடுவது ஒன்றுதான் சரி யான மார்க்கம்.

பணப்பெருக்க ஆபத்து நமக்கு மாத்திரம் புதிதாக வந்த நோய ல்ல. நம்மைவிட இன்னும் எத்தனையோ தேசங்கள் பணப் பெருக்கத்தின் மகா கொடிய கோரத்தை அனுபவித்திருக்கின் றன. முதல் உலக யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனியும் அதை அடுத் துள்ள ஐரோப்பிய நாடுகளும் இதனுல் எவ்வளவோ கஷ்டப்பட் டிருக்கின்றன. இந்த யுத்த முடிவிலும் ஹங்கேரி போன்ற எத்தனையோ தேசங்கள் இதனுல் கஷ்டப்பட்டதுண்டு. இதிலிருந்து உடனே விடுபட அந்த நாடுகள் என்ன செய்தன என்பது எல்லோருக்கும் தெரியும். பணப் பெருக்கத்தைச் சமாளிக்கஎன்ன வெல்லாமோ யோசனை கூறுகிற வர்களுக்கும் அது தெரியாதது அல்ல. ஆனுல் அதைச் சொல்ல, செய்ய போதுமான தீரமில்லை. அதனுல் பாதக மடைகிறவர் களின் மனஸ்தாபத்திற்கு ஆளாக இஷ்டமில்லை. அப்படி யெல்லாம் இல்லை என்ருல், உண்மை நிலைமையை உள்ளபடி அறிந்து தக்க பரிகாரம் தேட திறமை இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

வாஸ்தமான சிகிச்சை

பணப்பெருக்க ஆபத்தை அவ சரமாக உடனேயே தடுக்கா விட்டால் பின்னல், சமாளிக்க முடியாத எத்தனையோ தொந் தரவுகள் ஏற்பட்டுத்தான் தீரும். ஆகையால் நீண்ட நாள் திட்டம் எதுவும் இதற்குப் பயனில்லை. உடனே தடுக்கும் வழி ஒன்று தான் ஏற்ற வழி. அந்த வழி, பெருகிய பணத்தை உடனே குறைப்பது ஒன்றுதான். கஷ் டமே இல்லாமல் எந்தச் சுகமும் வந்துவிடாது. பெருகிவிட்ட பணத்தை உடனே குறைப்ப தனுல் அநேகருக்கு உடனடி கஷ்டங்களிருக்கலாம். ஆனுல் பெரும்பாலான மக்களைப் பொறுத்தவரையில் அது கொஞ்ச கால கஷ்டம். ஆனுல் உட னிருந்தே அங்கம் அங்கமாக உருக்குலைத்து வரும் பணப் பெருக்க நோய்க்கும் விலைவாசி ஏற்றத் தொல்லைக்கும் அதுதான் வாஸ்தவமான சிகிச்சை.

பணப்பெருக்கத்தை எப்படிக் குறைப்பது என்று கேட்கலாம். சர்க்கார் துணிந்துவிட்டால் அது மிக மிகச் சுலபம். திடீரென்று ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளைக்குப் பிறகு இப்பொழுது செலாவணியி லிருக்கும்நோட்டுக ளெல்லாம் செல்லாது என்று சொல்லிவிடவேண்டும். அன்றே இந்த நோட்டுகளை யெல்லாம் வாங்கிக்கொண்டு அவற்றிற்குப் பதிலாக புது மாதிரி நோட்டு களை பாதி கொடுத்துவிடலாம். அதாவது பழைய 100 ரூபாய் நோட்டுக்கு 50 ரூபாய், 10 ரூபாய் நோட்டுக்கு 5 ரூபாய், 5 ரூபாய் நோட்டுக்கு புது $2\frac{1}{2}$ ரூபாய் நோட்டு என்ற வகை யில் கொடுத்துவிடலாம். இப் படிச் செய்தால் அடுத்த நாளே பணப்பெருக்கத்தில் பாதி தானே குறைந்துவிடும். கொக்குத் தலை யில் வெண்ணெய் வைத்துப்

பிடித்து விடுவதைப் போன்ற யோசனைகளெல்லாம் இல்லாமலேயே பணப்பெருக்கப் பீடையை போக்கிவிட இதுவே ஏற்ற வழி.

இப்படி பணத்தைத் திடீரென்று பாதி பறித்துவிடுவது சரியா என்றுகேட்கலாம். பறிக்க வேண்டியதில்லை. சேலவணியிலிருக்கும் பணத்தில் பாதியைக் குறைக்க வேண்டும் என்பது தான் நோக்கம். ஒருவர் 100 ரூபாய் நோட்டை, செல்லுபடியாகும் புது நோட்டாக மாற்றினுல் 50 ரூபாய்க்குதானே புது நோட்டு இந்த ஏற்பாட்டின்படி அவருக்கு வரும். மீதம் 50 ரூபாய்க்கு ஒரு பத்திரத்தைக் கொடுத்துவிடலாம். அப்பொழுது பணம் போய்விடவில்லை. உடனே செலவழிக்க அப் பத்திரம் பணமாக உபயோகப்படாது. சில வருஷங்களுக்குப் பிறகு அப் பத்திரங்களுக்குப் பணம் தருவதென்றுல் இதில் பிறர் பணத்தைச் சர்க்கார் பறித்துவிடுவது என்பது எதுவுமே இல்லை.

கஷ்டமே அல்ல

பணம் இருப்பவர்களுக்குப் பாதிப் பணம் முடங்கிவிட்டால் பரவாயில்லை, கொஞ்சம் பணம் வைத்திருக்கும் ஏழைகள் கதி என்ன என்று கேட்கலாம். ஏழையின் கையிலிருப்பது கொஞ்சப் பணம். ஏழைக்கு வேண்டியதுமலிவாக அரிசி, உப்பு, கட்டத் துணியே யன்றிப் பணம் அல்ல. ஏனெனில் வயிறு வளர்க்கப் பாடுபடும் ஏழை நோட்டைக் கரைத்துக் குடிக்கப்போவதில்லை. ஏழைக்கு வேண்டியது விலைவாசி மலிவுதான். பணக்காரன் கொடுத்து மாற்றும் பழைய நோட்டுகளின் மதிப்பில் பாதிக்கு அவன் பெறும் பாண்டுகளுக்கு 20 வருஷங்களில் பணம் தருவது என்றுல் ஏழைகள் கொடுக்கும் பணத்தில் பாதிக்குப் பெறும் பாண்டுகளுக்கு ஒரு வருஷத்திலோ, ஆறு மாதத்திலோ பணமாகவே தருவது என்று செய்துவிடலாம். இதற்குள் விலைவாசியும் குறைந்துவிடும். ஆகையால் ஏழை, தன் பணத்திற்கு அதிகப் பொருள்களை வாங்கக்கூடிய சக்தியையும் சௌகரியத்தையும் பெறுவான்.

ஆகையால் இம் முறைக்கு ஏழைகள் அஞ்சவேண்டியது எதுவுமே இல்லை. பணக்காரர்கள் தான் பயப்படுவார்கள். கள்ள மார்க்கெட்டால் கொள்ளை லாபமடித்து, மக்களை அதன் மூலம் வருத்தி வதைத்திருக்கும் பேர்வழிகள் இதனுல் அகப்பட்டுவிடுவார்கள். அடித்த கொள்ளை லாபத்தை ஒளித்து சர்க்காருக்கு வரி கொடுக்காத திருடர்கள் சிக்கிக் கொள்ளுவார்கள். இப்படிப் பட்ட பகற் கொள்ளைக்காரர்களைப் பிடித்து, சர்க்காரை ஏமாற்றிய பணத்தையும், செய்தகுற்றத்திற்கு அபராதத்தையும் போட்டு வசூலித்து விடுவதற்கும் இதுவே ஏற்ற மார்க்கம். மக்களிடம் கொள்ளையடித்த பணம், மக்களின் நன்மைக்காகச் செலவிட மக்கள் சர்க்காரிடம் போய்ச் சேரும்படி செய்வதும் சாத்தியமாகும். தொழில்களை விருத்தி செய்ய முதலாளிகளிடம் கெஞ்சுவதற்கு பதிலாக சர்க்காரே பல புது தொழில்களை ஆரம்பித்து உற்பத்தியை உண்மையில் பெருக்குவதற்கு வேண்டிய பணமும் சர்க்காருக்கு இதன்மூலம் கிடைக்கும். பணப் பெருக்கத்தைப் போக்கி மக்கள் கஷ்டத்தைத் தவிர்க்கச்செய்யவேண்டிய

நல்ல காரியமும் இதுதான். இதனால் அனாவசியமாக மக்களுக்குக் கஷ்டம் இல்லாதிருப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் ஜாக்கிரதையாகச் செய்துவிட்டால் அதில் அவதி எதுவுமே இருப்பதற்கில்லை.

பிரதம மந்திரி பண்டித நேரு, நூறு ரூபாய் நோட்டுகளைச் செலாவணியிலிருந்து ரத்துச் செய்யவோ, எந்த நோட்டுக்களின் மதிப்பையும் குறைக்கவோ போவதில்லை என்று சர்க்கார் சார்பில் சமீபத்தில் வாக்குறுதியளித்தார். சர்க்காருக்கு இந்த யோசனையே இல்லை. யோசனையே இல்லாதபோது அனாவசிய வதந்தியால் பரபரப்பு இருக்க நியாயமில்லையாகையால் அந்த அளவுக்குப் பிரதம மந்திரியின் வாக்குறுதி சரி. ஆனால் பணப் பெருக்கத்தைப் போக்குவதற்கு இருக்கும் சரியான ஒரே மார்க்கமான மேலே நான் குறிப்பிட்டிருக்கும் முறை, இதனால் தவறு என்றாகிவிடாது. இந்த யோசனை இன்னும் நம் சர்க்காருக்கு வரவில்லை என்றால், பணப் பெருக்க ஆபத்தின் தன்மையைப் பூராவும் உணரும் நிலைமைக்குச் சர்க்கார் இன்னும் வரவில்லை என்றுதான் அதற்கு அர்த்தம்.

✲

### சீனாவின் செல்வம்!

சீனாவில் அடகு வாங்கி லேவாதேவி பண்ணும் கடைகளில் நூற்றுக்கு 36 வீதம் வட்டி; 29 சதவிகிதம் முதலாளிக்கு; மீதி வேலைக்காரர்களுக்கு. வட்டிக்கடை குமஸ்தாவின் மாதச் சம்பளம் 10 லட்சம் டாலர். மேல் உத்தியோகஸ்தர்களின் சம்பளம் மாதம் 50 லட்சம் டாலர். இப்படியிருந்தும் பணப் பெருக்கத்தின் காரணமாக சம்பளம் செலவுக்குப் போதவில்லை. மாதம் சுமார் 88 லட்சம் டாலர் வருமானம் இருந்தால்தான் மூன்று பேருள்ள ஒரு குடும்பம் ஜீவனம் பண்ண முடியும்.

### வீட்டுக் கஷ்டம்

"'படுக்கையறையும் உட்கார்ந்திருக்கும் அறையும் சேர்த்து' என்று விளம்பரப் படுத்தியிருந்தீர்களே, இங்கே உட்கார்ந்திருக்கும் இடம் எங்கே இருக்கிறது?"

"படுக்கைக்கு மேலே"

—ஈவ்னிங் நியூஸ்

## திருத்தம்

சென்ற சக்தி இதழில் (சுதந்திர மலரில்) தலையங்கத்தின் முதல் பக்கத்தில் வலது பத்தியின் கீழாக உள்ள கடைசி இரண்டு வரிகளும் தவறுதலாக விழுந்துவிட்டன. அந்த இரண்டு வரிகளை மட்டும் நீக்கிவிட்டு வாசிக்கவேண்டும். இந்த இதழில் 30-ம் பக்கத்தில் வலது பத்தியின் 2-ம் பாராவில் 2-ம் வரிக்கும் 3-ம் வரிக்கும் நடுவில் "எப்பொருளும் ஒளியைவிட விரைவாகச் செல்ல முடியாது" என்ற வாக்கியம் இருக்கவேண்டும். சேர்த்து வாசித்துக்கொள்ளவும்.

ஆசிரியர், சக்தி

# அரிஸ்டாட்டிலின் பின்

o

வி. சக்கரை செட்டியார்

மேல் நாட்டு ஞான திருஷ்டிக் கர்த்தாக்களின் மனப் போக்குகள் அவர்கள் நாட்டுச் சரித்திரத்தின் மாறுதல்களைப் பின்பற்றிச் செல்லுகின்றன. இது சாதாரண சம்பவமா யிருந்தது. உலக வழக்கத்தையும் சரித்திர ஓட்டத்தையும் கடந்து செல்வது அக் கர்த்தாக்களுக்குத் தோன்ற வில்லை. பிளேட்டோவின் ஞானக் கொள்கைகளும் அவரது மாணாக்கர் அரிஸ்டாட்டிலின் பரவிய எண்ணங்களும் இந்த உயரிய உண்மையை வெளிப்படுத்துகின்றன. சில ஞானிகளின் தத்துவ கொள்கைகள் இதற்கு மாறாயிருக்கலாம். ஜெர்மனி தேசத்தில் கடந்த நூற்றாண்டிலிருந்த ஹெகல் (Hegel) என்ற பேர் பெற்ற தத்துவசாஸ்திரி, நெப்போலியன், ஜீன் என்னும் பட்டணத்தில் போர் நடத்தும் நாளிலே தம்முடைய ஒரு பெரிய தத்துவ நூலை எழுதிக் கொண்டிருந்தாரென்று சொல்லப்படுகிறது. தத்துவ ஞானிகள் மேலான கடைசி உண்மைகளைக் கண்டு சொல்லும் பெரியோர்கள், உலக வழக்கத்தை ஒட்டியா அல்லது வெட்டியா மேலான ஞானத்தை விளக்க வேண்டுமென்ற கேள்விக்கு இடமுண்டு. இதற்கு விடை பல்வேறு விதமாய்க் கொடுக்கலாம். நம் நாட்டு ஞானிகள் ஹெகல் (Hegel) போல உலக லௌகிக சரித்திர ஓட்டத்தைக் கவனிக்காமல் உண்மைப் பொருள்களை எடுத்துரைத்தனர். அவ் வுண்மைகள் காலப் போக்கினால் பழமையாய்ப் போகாமல் எப்பொழுதும் இளமையா யிருக்கின்றன. ஆனால் உலகத்தவர்கள் சொல்லத் தக்க, விரும்பத் தக்கவைகளாய் இல்லையே யென்று சிலர் கூறுவதற்கும் காரணம் சொல்லலாம். இது எப்படியாயினும் இருக்கட்டும். அரிஸ்டாட்டிலின் காலத்திற்குப் பிறகு தத்துவ ஆராய்ச்சி உலக சரித்திரப் போக்கை அனுசரித்ததாகவே இருந்தது.

அவர் காலத்திலேயே கிரேக்க நாடு சுதந்திரம் இழந்த நாடாகி விட்டது. மாஸிடோனியா அரசன் மகா அலெக்ஸாண்டர் கிழக்கே பல ஆசியாக் கண்ட நாடுகளைத் தன் ஆட்சிக்குக் கொண்டு வந்ததால் அந் நாடுகளிலே கிரேக்க தத்துவ ஞானமும் கலை அறிவும் பரவலாயின. அதுவுமல்லாமல் கீழை நாட்டாரின் மதக் கொள்கைகளும் தத்துவபோதங்களும் கிரேக்க ஞானத்தோடு கலந்து ஒரு புதிய அறிவு உலகத்தையும் நாகரிகத்தையும் உண்டுபண்ணின.

இந்தக் கலப்புக் கலை ஞானமே பின் வந்த எல்லாத் தத்துவக் கொள்கைகளுக்கும் ஊற்றாகவும் உருப்படுத்தும் சக்தியாகவும் ஆயிற்று. ஆதன்ஸின் பூர்வீக தத்துவ ஞானத்தின் புதுமை குறைந்தது. அந்தக் கிணறு வற்றியது. ஆயினும் பல சிறு துறைகளிலும் பல நூதன சாஸ்திரங்கள் உண்டாயின. முக்கியமாகக் கணித சாஸ்திரம், வான சாஸ்திரம், மருத்துவ சாஸ்திரம்

அரிஸ்டாட்டிலுக்குப் பின் தத்துவ ஞானக் கொள்கைகளில் மாறுதல்கள் ஏற்பட்டன. அந்த மாறுதல்களின் போக்கு எவ்வாறெல்லாம் இருந்தன என்பதை இக் கட்டுரை விவரிக்கிறது.

முதலாயின வளர்ந்தன. இச் சாஸ்திரங்கள் ஆதன்ஸ் நகரி லல்ல, அலக்சான்டிரியா நகரில், (Alexandria) வேரூன்றிச் செழித்து ஓங்கின. அக் காலங் களில் பல நாடுகள் சுதந்திரத்தை இழந்தன. கிரேக்க நாடும் மறு படியும் சுதந்திரமிழந்தது. ரோம ருடைய ஆட்சிக் குட்பட்டது. இது கி. மு. இரண்டாம் நூற் ருண்டில் நடந்தது. ரோம் குடி யரசுத் தலைவர்களும் பண்டிதர் களும் கிரேக்கருடைய தத்துவ நூல்களையும் கலை, கவி நூல்களை யும் கற்க ஆதன்ஸ் நகரத்துக்குச் சென்றுர்கள். தோல்வியடைந்த கிரேக்க நாடு வெற்றியடைந்த ரோமாபுரியை வென்றதென்று சொல்வார்கள் சரித்திர ஆசிரியர் கள். இக் காலத்தில் ஒரு புதிய உண்மை பிறந்தது. அதை யறிந்து கொண்டால் பிற்காலத் திய தத்துவ உண்மைகளை வெகு சுலபமாயறிந்து கொள்ளலாம். நாடுகள் சுய ஆட்சி இழந்தன; அந் நாடுகளின் மதங்கள் குன்றிப் போயின; மனித வாழ்க்கையின் முன்னேக்கம் இன்னதென்று அறியாமல் அலைந்தார்கள்; தங் கள் வாழ்க்கைக்கு ஆதாரமும், வழிகாட்டியும், சக்தியும் வேண்டுமென்று கல்விமான்கள் வெகு முயற்சி செய்தார்கள். உல கத்தில் ஒருவன் இன்புற்று, துக்கமில்லாமல் ஒரே நிலையாய் எப்படி வாழ முடியுமென்ற கேள்விகளுக்கு விடைகூற சந் தர்ப்பம் நேரிட்டது. அநேகர் தங் கள் மதங்களில் கூறப்படும் தெய் வங்களில் நம்பிக்கை இழந்தார் கள். சமயக் கொள்கைகளையும், ஆசாரங்களையும் விட்டுத் தத்துவ ஞானத்தில் தங்கள் ஆத்மாவுக்கு ஆறுதலும் தேறுதலும் கிடைக்கு மென்று கருதினர்கள். ஒவ் வொருவனுக்கும் தனி மனித னுக்கும், பிரத்தியேகமான தர் மக்கொள்கையுண்டென்று நம்ப வேண்டியதாயிற்று. தங்கள் நாட்டைக் காப்பாற்றும்— அதற்குச் சேவை செய்யும்— வழியே மனிதனுடைய தர்ம மென்றகொள்கை மலையேறியது. மனிதனுக்கு அந்தரங்க வாழ்க் கை உண்டு; தன் ஆத்ம வளர்ச் சிக்கு வேண்டிய சாதனங்களைத் தேடிக் கொள்ளுவது அவனது முக்கிய ஜீவிய நோக்கமென்று சொல்லும் காலம் வந்துவிட்டது. முற்காலத்தில் கிரேக்க ரோம நாடுகளில் சமயக் கோட்பாடு களும், வணக்கங்களும் நாட்டு அரசியல் ஆசாரங்களாகக் கரு தப்பட்டன. பெரிய தெய்வங் களுக்கு அரசாங்க உத்தியோ கஸ்தர்கள், பூசாரிகளாக அமர்த் தப்பட்டனர். ரோமாபுரியில் பிர தம பூசாரி பான்டிபக்ஸ் மாக்ஸி மஸ் (Pontifex Maximus) என்ப வன். அரசாங்க உத்தியோகஸ் தன் நாட்டின் சேமத்திற்காகத் தெய்வங்களுக்குப் பலிகளைச் செலுத்தவும், ஆராதனைகள் செய்யவும் சகுனங்கள் பார்த் துச் சொல்லவும் வேண்டும். இவை அவனது முக்கிய கடமை களாயின. மத வலிமை குன்றிய பொழுது, தெய்வங்களை நம்பி வழிபடுவதை விட்ட பொழுது, உண்மையான வாழ்க்கையை நடத்தத் தூண்டப்பட்டனர். அதற்குத் தகுந்த முறைகளை ஆராய்ந்து வெளியிட்டவர்களே பிற்காலத்திய பண்டிதர்களும் தத்துவ ஞானிகளும். ஆயினும் தத்துவ ஞானமே மனிதனுடைய கிரம்பிய இன்ப வாழ்க்கைக்கு ஆதாரமாக இல்லை. தத்துவ ஞானத்தில் சக்தியில்லை—ஆத் மாவுக்கு இன்பம் கொடுக்க வழியில்லை. கடவுள் ஒருவன் இருப்பின், அவன் தன்னுடைய

மக்களுக்கு இன்பம் அளிக்கக் கூடியவன் என்று சீக்கிரம் அறியலானார்கள். தெய்வமில்லாத உலகம் செத்த உலகம்; இதில் ஒரு நோக்கமுமில்லை. அப்படியானால் இது அர்த்தமற்ற உலகம்; ஆத்மாக்கள் கோடைகாலத்து ஈக்கள்போலத் தோன்றி அழிவன; அது செத்தாலென்ன? பிழைத்தாலென்ன? ஆத்மா என்று நிரந்தரமானது ஒன்று மில்லை. இப்படிப்பட்ட கொள்கைகள் பரவ மனிதருக்குள் மனக்கிலேசம் பெருகிற்று. அக்காலத்துப் பெரிய அறிஞர்கள், கடவுள் ஒருவன் உண்டென்று சொல்ல முன்வந்தார்கள். இக் கடவுள் இயற்கை வடிவாய்த்தானிருக்கிறார். கடவுள் இயற்கையைவிட வேறானவரல்லவென்று கூறினர். மறு உலகமென்று — வானுலகம், கைலாசம், வைகுண்டம்— இவையெல்லாம் கட்டுக் கதைகளென்று நினைத்தார்கள். ஆனாலும் சாதாரண மக்கள், மூற்காலத்திய புராணக் கதைகளை நம்பித்தான் வந்தார்கள். அவர்கள் மனதில் இந்த அறிவாளிகளின் நூதனக் கொள்கைகள் ஏறவில்லை. அவர்கள் தங்கள் உதவிக்காக, கஷ்டகாலங்களில் தெய்வங்களைக் கும்பிட்டுத்தான் நடப்பார்கள்.

இக் காலத்தில் முக்கிய ஆராய்ச்சி விசேஷம், மனிதனுடைய உயர்ந்த நன்மை என்ன, அதை எவ்விதமாய் அடையலாமென்பதே. ஒவ்வொருவனும் இதை நாடித் தேடியடைய வேண்டுவது இன்றியமையாத கடமையாகும். இதைப் படித்தவர்களும் பெரியகுலத்தில் பிறந்து வளர்ந்தோர்களும் உல்லாசமாய் வாழ்ந்து பெறலாமென்று நினைத்தார்கள். பாமர மக்களோ தங்களுடைய சுக துக்கங்களில் ஆறுதலும் நம்பிக்கையும் பெற பல தெய்வ பூஜைகளைச் செய்தார்கள், குறி சொல்வோர்களையும், சோதிடர்களையும், மாந்திரீகர்களையும் நாடி ஏமாந்தும் போனார்கள். மக்கள் மனம் ஓய்வு அடையாமல் ஊசலாடிக் கொண்டிருந்தது. இவர்களுக்கு அக்காலத்திய தத்துவ ஞானிகள் ஒரு வழியையும் காட்டவில்லை. பாமர மக்களை இழிவாய் எண்ணி வஞ்சிக்கிற பூஜாரிகளுக்கு இரையாகச் செய்தார்கள். அக்காலத்தில்தான் தத்துவஞானதின் பலனற்ற தன்மையும், பலமற்ற தன்மையும் வெளியாயிற்று.

*

## அடுத்த இதழில்:

பாரதியார் உதித்த எட்டயபுரத்தில் கடந்த 250 வருஷ காலத்தில் இருந்த கவிஞர்கள், சங்கீத ஞானிகள், ஓவியர்கள், மற்றும் பல வகையான கலைகளில் பிரசித்தி பெற்றவர்கள—ஆகியோரைப்பற்றி எட்டயபுரம் கலைஞர்கள் என்ற ஒரு நீண்ட கட்டுரை வெளி வருகிறது. பல அபூர்வச் செய்திகளும், கவிதைகளும் அடங்கிய கட்டுரை.

ஆசிரியர், சக்தி

**இளேயாள் முதலிய கதைகள் :** [ஆசிரியர் : ப்ரேம்சந்த். மொழி பெயர்த்தவர்: ஸ்ரீ என்.ரங்கநாத ராவ். பிரசுரகர்த்தர்கள் : மூர்த்தி பிரசுராலயம், சென்னை 18. விலை 2-0.0.]

பிரேம் சந்த் எழுதிய இந்தி நவீனங்களின் மொழிபெயர்ப்பைத் தமிழ் நாட்டில் அநேகர் படித்திருப்பார்கள். அவருடைய தேசிய நவீனங்கள் போற்றற் குரியன. நவீனங்கள் மட்டுமல்லாமல் சிறு கதைகளும் பல எழுதியுள்ளார். அவருடைய உருதுக் கதைகளில் சிலவற்றின் மொழி பெயர்ப்பே இப்புத்தகம். இளேயாள், நியாயப் போலீஸ், ராஜபுத்ரன், வீரத்தாய் முதலிய ஏழு கதைகள் இருக்கின்றன. கதைகள் பிரமாதம் என்று சொல்லுவதற்கில்லை. "பிரேம் சந்தின் 'உருது'க் கதைகள் மொழிபெயர்க்கப் பட்டு புத்தக வடிவில் வருவது இதுதான் முதல் தடவையாகும்... இப் பதிப்பில் சிறந்த சில கதைகளைப் பொறுக்கி யெடுத்து மொழிபெயர்த்திருக்கிறேன்" என்று முன்னுரையில் மொழிபெயர்ப்பு ஆசிரியர் ஸ்ரீ நா. ரங்கநாத ராவ் கூறுகிருர். இக் கதைகளைப் படித்த பிறகு அப்படிப் பெருமைப்பட ஒன்றுமில்லை யென்றே தோன்றுகிறது. இதிலுள்ள கதைகளேயே 'சிறந்த கதைகள்' என்ருல் உருது மொழியில் சிறு கதை இலக்கியம் முன்னேறவில்லையென்று தான் நமக்குத் தோன்றுகிறது. மொழி பெயர்ப்பு சாதாரணம்.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

**காதலர் :** [பர்மியக் கதைகள். மொழிபெயர்ப்பு : தி. நா. குமாரஸ்வாமி. வெளியிட்டோர் : ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை விலை அணு எட்டு.]

இச் சிறுகதைத் தொகுப்பில் காதலர், மா-மியா-ஸோயே, விதி ஆகிய மூன்று கதைகள் இருக்கின்றன. இவை, பர்மியக் கதைகளேயானலும், ஆங்கில மூலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை தான். பர்மிய மூலத்திலிருந்து மொழி பெயர்த்திருந்தால் இன்னும் நன்ருய் இருந்திருக்கலாம். இம் மூன்று கதைகளும் பர்மியப் பண்பாட்டையும், அவர்களுடைய வாழ்க்கை முறையையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. இக் கதைகளைப் படிப்பதன் மூலம் சில பர்மிய வார்த்தைகளைக் கூடக் கற்றுக் கொள்ளலாம்.

**கிரிஷ்கா :** [ஆசிரியர் : காஜிமீர் டெட்மேஜர். மொழிபெயர்ப்பு: தி. ஜானகிராமன். வெளியிட்டோர் : ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை-5. விலை அணு எட்டு.]

டெட்மேஜர் போலந்து தேசக்கதாசிரியன். இவன் பிறந்து வளர்ந்த பிரதேசமாகிய டட்ராஸ் மலைச் சரிவிலுள்ள கிராமாந்திரங்களைப் பற்றிய கதைகளே நிறைந்துள்ளன இக்கதைத் தொகுப்பில். இவன் 1940-ம் ஆண்டு போலந்து தேசத்தின் தலைநகரான வார்ஸாவில் அனதையாகச் செத்துக் கிடந்தாணம்.

இச் சிறு புத்தகத்தில் முரட்டு இடையன், சொர்க்கமும் ஸ்விர்டாலாவும், கிரிஷ்கா, போர்வீரன் வாய்டக் ஆகிய நான்கு கதைகள் இருக்கின்றன. நான்கிலும் கிரிஷ்கா தான் நன்ருய் இருக்கிறது. தன் காதலன் வேருெருத்தியைக் காதலிப்பதைச் சகிக்க முடியவில்லை கிரிஷ்காவால். காதல் வெறியில் அவள் ஒரு மிருகமாகி விடுகிருள். கிராமியச் சூழ்நிலையில் அவளுடைய தூய காதல் உள்ளத்தைத் திறம்பட சித்தரிக்கிருர் ஆசிரியர். மொழிபெயர்ப்பும் பரவாயில்லை.

**துரோகி யார்?**: [ஆசிரியர்: என். எஸ். பகவதி. கிடைக்குமிடம்: என். எஸ். பகவதி, வடிவீசுவரம், நாகர் கோயில். விலை ரூ. 1-8-0.]

இந்த நாடக ஆசிரியராகிய என். எஸ். பகவதி ஒரு நடிகர். இவருடைய நீண்ட நாளைய மேடை அனுபவத்தில் உருவான இந்த நாடகம் நடிக்கத் தகுந்த முறையில் அமைந்துள்ளது. நாடகப்போக்கு, மேடையை மட்டும் மனத்தில் வைத்துக்கொண்டு எழுதியது போலப் படுகிறது.

சமூக ஊழல்களைச் சுட்டிக் காட்டுவதோடு மட்டும் நின்றுவிடுகிறது நாடகம். ஊழல்களைக் களைந்தெறிய வழி கூறி, மக்களை அவ்வழி நடக்க நாடகம் தூண்டவேண்டும்.

நாடகத்தில் ஹாஸ்ய ரசம் வேண்டுமென்று நினைத்து ஒரு சில இடங்களில் வேலைக்கார ராமனை தமாஷாகப் பேச வைக்கிறார். ஹாஸ்யங்கள் அத்தனையும் கேட்டுச் சலித்தவையாக உள்ளன.

நாடகத்தில் ஆங்காங்கே கவிமணி தேசிகவினயகம்பிள்ளை அவர்களுடைய பாடல்களும், பாரதியார் பாடல்களும் பாத்திரங்களால் பாடப் பெறுவது நன்றாய் இருக்கிறது.

**நிலை பெற்ற சிலை**: [ஆசிரியர்: 'தமிழ் ஒளி' (விஜயரங்கம்). வெளியிட்டோர்: புதுயுக நிலையம், 233, லிங்க செட்டி தெரு, சென்னை-1. விலை 1-8-0.]

இப் புத்தகம் ஒரு பாட்டுக் கதை. முன்னேற்றக் கருத்துக்களும் புரட்சி அறை கூவல்களும் நிறைந்துள்ளன.

"பொருளொருவர்க்கே யுரிமையில்லை; நாட்டுப் பொதுமக்கள் அனைவர்க்கும் உரிமை என்னும் புதுக் கருத்துக் கொண்டோன்' இக் கதா நாயகன். 'கொத்துகிற முதலாளிக் கும்பல் தன்னைக் குப்புறவே தள்ளிவிட முயலவேண்டும்' என்று புரட்சி நெறிக்கு இழுத்துச் செல்லுகிறான் தலைவன். நடையில் விறு விறுப்பு இருக்கிறது. புத்தகமும் கைக்கு அடக்கமாகச் சிறிய அளவில் அழகாக இருக்கிறது.

**வீராயி**: [ஆசிரியர்: தமிழ் ஒளி. வெளியிட்டோர்: தமிழர் பதிப்பகம், 81, லிங்கசெட்டித் தெரு, சென்னை-1. விலை. 1-4-0.]

வீராயி ஒரு தாழ்த்தப்பட்ட சாதிப் பெண். அவள் வறுமையில் கஷ்டப்படுகிறாள். அயல் நாடு சென்றால் நல் வாழ்வு வாழலாம் என்று எண்ணி ஆப்பிரிக்கா செல்லுகிறாள். அங்கே ஒரு காதலன் கிடைக்கிறான். இருவரும் ஊர் திரும்புகின்றனர். ஊரில், தாழ்த்தப்பட்ட பெண்ணைக் கூட்டி வந்துவிட்டான் என்று அனைவரும் சீறுகின்றனர். அவர்கள் இருவரும் மணக்கோலத்தி லிருக்கும்பொழுது ஊரார் சேர்ந்து அவ்விருவர் வாழ்வையும் முடிக்கின்றனர். இதுதான் கதை. இதைப் பாட்டாகப் பாடியுள்ளார் ஆசிரியர் 'தமிழ் ஒளி.'

ஏழை மக்கள், பிறந்த நாட்டில் பிழைப்பின்றி 'இக் கரைக்கு அக் கரை பச்சை' என்கிற கானல்நீர் கொள்கையில் கடல் கடந்து சென்று, அங்கே தேயிலைத் தோட்டத்திலும், ரப்பர் தோட்டத்திலும், வெள்ளை முதலாளிகளுக்கு அடிமைகளாய் வாழும் நிலையை எடுத்துரைக்கின்றார் ஆசிரியர். தீண்டாமையின் தீமையையும் மனம் நொந்து கூறுகிறார்.

**தாழ்வு மனப்பான்மை**: [ஆசிரியர்: முல்லை முத்தையா. கிடைக்குமிடம்: முத்தமிழ் நிலையம், வரதா முத்தியப்பன் தெரு, சென்னை-1. விலை அணா 12.]

தாழ்வு மனப்பான்மை என்றால் என்ன? அதனால் என்னென்ன தீமைகள் ஏற்படுகின்றன? அந்தத் தாழ்வு மனப்பான்மையை ஒழிப்பது எப்படி? என்ற விபரங்களை இந்த நூலில் காண்கிறோம். தமிழுக்குப் புதிய சரக்காக உள்ள மனோ தத்துவத்தை விளக்கும் நூல் என்ற முறையிலும், பயன் தரத்தக்க நல்ல நூல் என்ற முறையிலும் தமிழகம் இந்தப் புத்தகத்தைப் பெரிதும் வரவேற்கும் என்பதில் சந்தேகமில்லை.

—க. பம்பாபதி

Edited, Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd, (Shanti Press) 115-E, Mowbrays Road, Madras 14.
Associate Editor ; G. Alagiriswami.

# சக்தி வாய்ந்த நூல்கள்

**அபேதவாதம்** ரூ. 1 0

ராஜாஜி எழுதியது—பொது உடைமை என்ருல் என்ன? பொது உடைமையால் என்ன நன்மை ஏற்படும் என்ற விவரங்களைத் தெளிவாக விளக்கும் அரிய புத்தகம். தி. ஜ. ர. தமிழாக்கியது.

**ஏசுநாதர் போதனை** 1 8

ஜே. ஸி. குமரப்பா எழுதியது. மகாத்மா காந்தி முகவுரையுடன். ஏசுநாதர் இந்த உலகத்தில் அவதரித்ததின் தத்துவம் யாது? அவருடைய போதனைகளால் மக்கள் அடையக்கூடிய பயன்கள் பற்றி இந்த நூலில் ஆசிரியர் விளக்கி யிருக்கிருர்.

**முத்ரா ராக்ஷஸம்** 1 8

ஆசிரியர்: விசாகதத்தர். தமிழாக்கியவர்கள்: வே. ஸ்ரீநிவாச சாஸ்திரி சிரோமணி, தே. ஸ்ரீநிவாசாச்சாரியார் சிரோமணி— 'சாணக்கிய சந்திரகுப்தரைப் பற்றிய பிரபலமான கதையான விசாகதத்தரின் அரசியல் நாடகம் சமஸ்கிருத இலக்கியத்திலேயே இணையற்ற தன்மை வாய்ந்தது. எளிய தமிழில் மொழி பெயர்ப்பது சிரமமான காரியமே ஆனலும் மொழி பெயர்ப்பாளர் இருவரும் தெளிவாக மொழி பெயர்த்திருக்கின்றனர். ஹிந்து 8-8-1948

**சக்தி பிறக்குது** 0 6

'சுரபி' பாடியது. 1947 ஆகஸ்டு 15உ சுதந்திரத் திருநாளில் பாடப் பெற்ற கவிதைத் தொகுதி.

**உலோகங்களும் நாமும்** 5 0

மு. அருணுசலம் எழுதியது. உலோகமும் நாமும், உலோக உலகம், உலோகத் தாது, உலோகங்கள் கிடைக்கும் விதம், இரும்பு, மற்ற முக்கிய உலோகங்கள், உலோகத் தொழில் பற்றிய அரிய விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன.

**லெனின் பிறந்தார்** 3 8

ஆர். ராமனுதன் எழுதியது. ருஷ்யாவின் தந்தை லெனின் வரலாறு தான் இந்த நூல். இந்த நூலைப் படித்தால் ருஷ்யப் புரட்சிச் சரித்திரத்தையும் கூடவே படிப்பதுபோல இருக்கும்.

**இனி நாம் செய்யவேண்டுவது யாது?** 3 0

டால்ஸ்டாய் எழுதியது. உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்னும் அரிய சித்தாந்தம்.

**சக்தி காரியாலயம் சென்னை - 14**



## தற்கால கட்டிட நிர்மாணம்

கி ணறு க ள்.

காற்றுக்கு அடுத்தபடியாக, வாழ்க்கைக்கு இன்றியமையாதது ஜலம். அதன் பரிசுத்தம். அபரிமிதமான வினியோகம் இவைகளின் அவசியத்தைப் பற்றி வற்புறுத்துவது மிகையாகாது. விவசாயிகளும், கிராமத்து மக்களும் இதற்கு பெரும்பாலும் கிணறுகளையே நம்பியிருக்கிறார்கள். ஆதலால் இவைகள் சரியான முறையில் அமைக்கப்படாவிட்டால் சமூகத்திற்கே தீம்பாக முடியும். 'டைபாய்ட்' பரவுவதற்குப் பல சமயங்களில் அசுத்தமான கிணற்று நீரே காரணமாகிறதென்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கிணற்று நீர் கெடுவதற்குக்காரணங்கள் பல. கிராமங்களில் சாக்கடைகள், மற்றும் எருக்குழிமுதலான அசுத்தஸ்தலங்கள், கிணறுகளுக்கு அருகில் இருப்பது சர்வ சாதாரணம். அவைகளின் அசுத்தஜலம் கிணற்றுக்குள் கசிவதும், ஊற்றுக்கண்களில் கலந்துகொள்வதுமே அவற்றில் முக்கியமானவை.

இரண்டணா தபால் பில்லைகளுடன் "கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா, 9, மவுண்ட் ரோட், தபால் பெட்டி 312, மதராஸ். என்கிற விலாசத்துக்கு எழுதி, "கான்கிரீட் கிணறுகள்" என்னும் பிரசுரத்தின் பிரதி ஒன்றைப் பெறுங்கள்.

## தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

ADARTS
CMI 89. Tamil

# பார்லிக் கஞ்சி தயாரிக்க சுலபமான முறை




இரண்டு டீஸ்பூன் பார்லியை சிறிது ஜலத்தில் பசைபோல் கரைத்து, பின் இரண்டு டம்ளர் ஜலத்தில் போட்டு ஐந்து நிமிஷம் நன்றாகக் கொதிக்கவைக்கவும். பின்னர், இறக்கி ருசிக்கு வேண்டிய உப்பு அல்லது சர்க்கரை சேர்த்துப் பருகவும். இவ்வளவு சுலபத்தில், ஐந்தே நிமிஷத்தில், ஓர் ருசியான சிறந்த பானத்தைத்தயாரிக்கலாம். வியாதியுற்றோர் குணப்படும் தருவாயிலோ உள்ள பலஹீனருக்கு இது சிறந்த உணவு. *பியூரிடி பார்லி* புஷ்டியான தானியங்களினின்றும் தயாரித்து காற்று புகாமல் தகரடப்பாக்களில் அடைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பங்கு பியூரிடி பார்லி எட்டு பங்கு அரிசி பார்லிக்கு ஈடாகும். இதனால் எவ்வளவு நேரம், சிரமம் மிச்சமாவது என்று நினைத்துப்பாருங்கள்.

## பியூரிடி
## இந்தியன் பார்லி

APBX LTD

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், 20/1, சிட்லா ரோடு, கல்கத்தா

தென்னிந்தியாவிற்கு ஏஜெண்டுகள் :

**பாரி அண்ட் கோ., லிமிடெட், தபால் பெட்டி நம்பர் 12, சென்னை.**


# சக்தி
மாதப் பத்திரிகை

| | | | |
|---|---|---|---|
| தனிப் பிரதி 'தபால்' | 0 8 | ஒரு வருஷம் | 6 0 |
| ஆறு மாதம் | 3 8 | 2 வருஷம் | 11 0 |

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

**பர்மா**

| | | | |
|---|---|---|---|
| தனிப் பிரதி | 0 9 | ஆறு மாதம் | 4 0 |
| ஒரு வருஷம் | 7 0 | 2 வருஷம் | 13 0 |

**மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு**

| | | | |
|---|---|---|---|
| தனிப் பிரதி | 0 10 | ஆறு மாதம் | 4 8 |
| ஒரு வருஷம் | 8 0 | 2 வருஷம் | 15 0 |

**சக்தி காரியாலயம்**

**சென்னை 14.**

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்



அக்டோபர்
வெளியீடு
நரேந்திரா பிக்சர்ஸ்
ராஜ முக்தி
தியாகராஜ பாகவதர் · சாமா · பானுமதி · ஜானகி
சாமிநாதன் · வெங்கடேசன் · சக்ரபாணி · வீரப்பா
ராஜகாந்தம் · சந்திரா மற்றும் பலர் நடித்தது
ஸ்டுடியோ:
பிரபாத்
புனா
டைரக்ஷன்
ராஜா சந்திர சேகர்

# உங்கள் வியாபாரம்

★

உங்கள் வியாபாரம் செழிக்க வேண்டுமானால் காகிதம், கவர், ரசீதுப் புத்தகம் விசிடிங் கார்டு எல்லாம் அழகாக இருக்க வேண்டும். அவைகளை அழகுடன் செய்து தருவதற்கு சென்னையில் பெயர் பெற்ற அச்சுக்கூடம் நடைபெறுகிறது. அதன் பெயர்:



## சக்தி பிரஸ் லிமிட்டெட்

**115 E மோபரீஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை 14.**

டெலிபோன்: 8135



அழகும் மணமும் பொருந்திய புஷ்பம் "ரோஜா"
சுவையும் மணமும் பொருந்திய பாக்குத்தூள் "அசோகா"

தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்

'அசோகா பாக்டரி' :: கோயமுத்தூ